2209

MYSORE ARASU

(A HISTORY IN TAMIL VERSE OF THE KINGS OF MYSORE)

BY

K. V. SRINIVASACHARIAR,

HEAD TAMIL PANDIT,

HIS HIGHNESS THE MAHARAJA'S COLLEGE, MYSORE.

ஸ்ரீ

கடவுள் துணை.

மைசூர் அரசு.

மஹாராஜராஜஸ்ரீ

காந்தராஜ அரசு அவர்கள்

கேட்டுக்கொண்டபடி,

மைசூர் மஹாராஜா ஸர்வகலாசாலைப்

பிரதம தமிழ்ப்பண்டிதர்

கோழியாலம் வ. ஸ்ரீநிவாஸாசாரியரால்

இயற்றப்பெற்று,

சென்னை:

வே. நா. ஜூபிலி அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

பிலவஹ ஆவணிமீ.

All Rights Reserved.

விஷய சூசிகை.

		பக்கம். செய்யுள்.
	காப்பு	க.........௩
	அவையடக்கம்	உ ௩
க.	யதுராயர் ஊரடைந்த சருக்கம்	௩ ......சஉ
உ.	யதுராயர் மனையடைந்த சருக்கம்	கஉ......க0உ
௩.	விவாகச் சருக்கம்	உஎ...... ச௩
ச.	முடிபுனைந்த சருக்கம்	௩ச ௩0
ரு.	இராசவுடையார் விடமுண்ட சருக்கம் ...	௩கூ...... சசு
சு.	அரட்டரை வென்ற சருக்கம்	சகூ...... உஅ
எ.	சிங்காதனம் வந்த சருக்கம்	ருச...... ருகூ
அ.	அமலதேவதா சருக்கம்...	சு௩......௩௩
கூ.	மகாநவமிச் சருக்கம்	சுஅ......ருகூ
க0.	விசயதசமிச் சருக்கம்	எஎ......உஅ
கக.	அறம்புரி சருக்கம	அஉ...... ௩0
கஉ.	சீர்திருத்தச் சருக்கம்	அஎ......சுஅ

ஆக, செய்யுள்—ருஎசு.

ஸ்ரீ

கடவுள் துணை.

முகவுரை.

'மைசூர் அரசு' என்று பெயரிடப்பட்ட இந்நூலிலுள்ள கதை, கன்னடபாஷையில் விரிவாய் 'வம்ச ரத்நாகர' மென்னும் பெயரால் வரையப்பட்டுள்ளது. இத்தேசத்திற்கு அணித்தாய் எல்லாச் சிறப்பும் வாய்ந்துள்ளதான தமிழ்நாட்டின்கண்ணும் இதன் மேன்மை விளங்குமாறு கருதி, அமிழ்தினுஞ்சிறந்த தமிழ்மொழியுள் இதனைச் செய்யுட்சாப்பிபமாக வரைக வென்று, மகாராஜராஜஸ்ரீ சாந்தராஜ அரசு அவர்கள் விளம்பியபின், திங்களொன்றிற் கன்னடத்தைப் படிக்கப் பயின்று கதை முழுதும் வாசித்துணர்ந்து மற்றுஞ்சில பெரியோர்கள் கர்ணபரம்பரையாய்க் கேட்டுரைத்தனவுஞ் செவியுற்றுச் சேர்த்து இதனை இங்ஙனம் எழுதத்துணிந்தேன்.

இவ்வரசகுலத்திற்கு மூலபுருஷன், யதுராயனென்னும் யதுவம்சத்தரசன். அவன், ஆதியில் துவாரகையை விட்டு மைசூரடைந்து, அதற்குமுன்பு புரந்தவனும் போஜவம்சத்தவனுமாகிய சாமராசனென்பான் ஒரு கன்னிகையைப் பெற்றுவைத்துப் புத்திரனின்றிப் பொன்னுலகம்புகவே அங்ஙன் அவனது மனைவி அப்பெண்ணையும் மண்ணையுந் தரப்பெற்று, இக்கோலையும் மரபையும் பெருக்கியதால், இவ்வரசர் யதுவம்சத்தாரெனப்படுகின்றனர்.

இப்பரம்பரையிற் சிறந்தவர் பலரிருப்பினும், அவர்களுட் கவிஞர் கருதத்தக்கவர் யதுராயர், ராஜவுடையார், ரணதீர கண்டீரவ நரசராஜவுடையார், சிக்கதேவராஜவுடையார் என்னும் இந்நால்வரேயென்னலாம். இவர்களுள் முதலிருவரது கதையையே இங்ஙனம் வரைந்துமுளேன்.

இந்நூலைப்பற்றி மேற்கண்ட அரசுஅவர்கள் திவான்பஹதூர் ஸ்ரீ. உ. வே. வ. கிருஷ்ணமாசாரிய ரவர்களது சம்மதம் வேண்டு

மெனவே, யான் அவ்வாறே ஆசாரியரவர்களிடம் இந்நூலை அனுப்ப, அவர்கள் கண்ணுற்று நல்லபிப்பிராயமளித்தபின், மாதுஸ்ரீ மகாராணியார் ரீஜண்டு அவர்கள் தமது பொருட்செலவில் அச்சிடும்படி வாக்களித்தனர்.

தமிழை அபிமானித்து இந்நூலை அப்பாஷையிற் புரியும்வண்ணந் தூண்டிய அரசுஅவர்களது பெருந்தன்மையை ஒருபோதும் மறவேன்.

இந்நூலை ஆர்வத்துடன் பரிந்தாய்ந்து தமது அங்கீகாரத்தை நடுவுநிலைமையோடு தெரிவித்த அத்தகைய கிருஷ்ணமாசாரியரவர்கட்கும், அதனை அன்போடு மகாராணியாரவர்கள் சன்னிதானத்தில் விளக்கிய கன்ட்ரோலர் ஸ்ரீ. உ. வே. வி. என். நரசிம்மையங்காரவர்கட்கும் வந்தனம்இழைக்கக் கடமைபூண்டுள்ளேன்.

இந்நூலையச்சிடுதற்குப் பொருளுதவிய மகாராணியாரின் உதார குணத்தை ஒருபோதும் மறந்திடேன்.

அச்சிடுகையிற் பிழைசோதித்தல் முதலிய உதவி புரிந்து ஒழுங்குபெற நடத்துவித்த எனது பழையநண்பராகிய ஸ்ரீ உ. வே. திருவல்லிக்கேணி வை. மு. சடகோபராமாநுஜாசாரியரவர்களது அன்பை அல்லும்பகலுங் கரவேன்.

சிற்றறிவாற்செய்த இந்நூலிற் குற்றமுளதேல் அதனைத்தெற்றெனவுணர்ந்ததெள்ளியோர் பொற்புறப் பொருத்துவராக.

பிலவஞு } இங்ஙனம்,
மைசூர். } கோ. வ. ஸ்ரீநிவாஸாசாரியன்.

ஸ்ரீ

கடவுள் துணை.

மைசூர் அரசு.

காப்பு.

உம்பர்பூத்தவுயர்ந்ததருக்களும்
வம்புலாமலர்வல்லியுமாகவா
ழும்புதம்படியாதவசைலமா
ரெம்பிரானடியெண்ணிவணங்குவாம். (க)

சேனைநாதன்செயன்விசயன்முத
லானகிங்கரரங்கைப்பிரம்பினு
லீனமாங்கலியைத்துரந்தெற்றிடு
ஞானயாதவசைலனைநாடுவாம். (உ)

வேறு.

மதகரியழைத்திடமகிழவந்தவ
னுதிதருமெதுகுலத்தொருவன்சீர்த்தியப்
பொதுவியர்தூர்த்தனின்பொற்பதந்தொழு
திதமுறயாவருமியம்புவாமரோ. (௩)

அவையடக்கம்.

முறைபுரிமகீசுரபுரியின்முன்னுறை
யிறையவர்சரிதையானெழுதுமிங்கிதை
நிறைவுறுமனத்தினர்நிகர்ப்பவோதிமம்
பொறையுறுமனத்தொடுபுகன்றுகொள்கவே. (க)

சிறியவன்செயன்மிகச்சிறந்துளாரகங்
குறுகிடினதுவுமின்குணங்களார்ந்ததாங்
கறையுறுகரும்பொனுங்கலந்தமாற்றினி
னிறையுறுபசும்பொனாய்நிலவக்காண்பரால். (உ)

பூம்பொழின்மாங்குயிலிடையிற்புல்லிய
தாங்கருங்காக்கையுமறைதல்கண்டயான்
மேம்படுகவிஞருக்கிடையின்மேவிய
வேம்பலிற்றுணிந்தனனிஃதியம்பவே. (ங)

மைசூர் அரசு.

முதலாவது

யதுராயர் ஊரடைந்த சருக்கம்.

உலகினையருளுமாயனுந்தியின்மலர்க்கணுதி
யிலகிடவெழுந்தவேதவிரணியகருப்பனீன்ற
பலகலையுணர்ந்துநோற்றவத்திரிமுனிவன்பைங்க
ணலகிலாவமுதுகாலுந்திங்களையுயிர்த்ததன்றே. (க)

அவன்மகன்புதனால்வந்தபுரூரவன்றனயனாயு
விவன்சுதனகுடற்கேய்ந்தயயாதியாமிறைவன்வாய்ந்தான்
கவனவாம்பரித்தேரந்தக்காவலனெதுவையீன்றா
னவன்குலத்துதித்தோர்தாமேயாதவவீரராவார். (உ)

எதுமகன்குரோட்டுவென்பானவன்முதற்சூரனென்னு
மிதமுறுமரசனீறாயெனைப்பலருதித்துவாழ்ந்தார்
சிதைவறுமவன்சேய்மிக்கசீருறும்வசுதேவன்றன்
றதைமலர்க்குழலாளோடுந்தவந்தனிலுழந்தான்மன்னோ. (ங)

அவ்வருந்தவத்தின்மாயனகங்குளிர்ந்தவன்முன்றோன்றிச்
செவ்வியமனத்துநீவிர்விழைந்ததுசெப்புகென்னக்
கவ்வையையகற்றுமென்றன்கருணையங்கடலேநின்போ
லொவ்வறுபுதல்வனெங்கணுதித்திடவருளுகென்றான். (ச)

மன்னவனுரைத்தமாற்றமனமுறக்கேட்டமாலும்
புன்னகைபுரிந்தென்போலும்புருடரும்புவியிலுண்டோ
கன்னவிழிரண்டதோளாய்நமதகங்கடுகியானே
யின்னினியுதிப்பேனென்றேயிசைத்துடன்மறைந்தானன்றே. (ரு)

சிலபகல்கழிந்தபின்னர்ச்செல்பொருகண்ணிமன்னன்
மலைபொருமுழவுத்தோள்கண்மணந்ததேவகியுமாவி
னிலைபொருவயிறுவீங்கக்கருவிருந்துலகையீன்ற
வுலைவறுமாயனருங்குழவியையுயிர்த்திட்டாளே. (சு)

அத்திருக்குழவியூருஞ்சகடெனுமவுணனாதி
மத்தரையழித்திழைத்தமன்னியவிறும்பூதொன்றே
யித்தலையுணராரின்றேபிரத்தியும்மனனிவன்சேய்க்
கொத்தவருலகிலில்லாவனிருத்தனுதித்தான்மன்னோ. (எ)

இப்புவிக்கிறைவினெச்சம்வச்சிரனிவன்பின்னைந்தாங்
கைப்புயன்முறையனருங்காவலன்சுருதசேன
னப்பெருவள்ளலீறாயரவணைச்செல்வனாதி
யொப்பறவுதித்தோர்மூன்றினென்றியவறுபதின்மர். (அ)

ஈங்குறுங்கலியினிந்தச்சுருதசேன்மரபிற்றோன்றி
வீங்கியபுகழினின்றுமேதினிபுரந்தோர்பல்லோ
ராங்கவர்கழிந்தபின்னரவனியையொருகோலோச்சி
யோங்கினனிராசதேவனென்றொருருவலத்தின்மிக்கான். (கூ)

அம்முறையிறைவற்காங்கேயதுராயனவற்குப்பின்னோன்
றெம்முனையொடுக்குந்திண்மைக்கிருட்டினனெனுமிரண்டு
பொம்மலின்புதல்வர்தோன்றிப்புவியினுக்கணியாய்நின்றா
ரிம்மகார்தமக்குண்முன்னோனிரும்புகழிசைத்துமீங்கே. (க0)

வேறு.

கார்முகிலொதுங்கிடவளிக்குமிருகையா
னேரலரழுங்குமொருவாளரிகிகர்ப்போ
னெனினும்மின்மொழிபகர்ந்திடமுதன்னன்
மாரனையுறழ்ந்தொளிருமன்னுகலைமன்னன். (கக)

மற்புயவெழுத்துணையின்மாற்றலரைவென்றே
யப்பொழிலடங்கவுமொராழியையுருட்டி-
யிப்பெருமைசூரிறைவர்க்காதியிவனென்ன
வொப்பரியவிப்பொழிலுவப்புறவளித்தான். (க௨)

வண்டுணுமலர்த்தொடையம்மன்னவனுமுன்னு
டண்டுவரைவிண்டரியதம்பியொடுபோந்து
கொண்டல்படிவிந்தியவரைக்கருகுகூடி
மண்டெரியினைந்தினிடைமாண்டவமிழைத்தான். (க௩)

உட்பகையொறுக்கியுமொரைந்தினையொடுக்கித்
திட்பமுறுசிந்தையொடுசெய்தவமுணர்ந்தே
பெட்பினுடனக்கிரிமுகட்டிடைபிறங்குங்
கட்கமுறுகைக்கவுரிகட்புலனடைந்தாள். (க௪)

வந்தவளம்மைந்தர்கள்வணங்கியிடவாழ்த்திச்
செந்தழலெனப்பகைவர்சீறுநுதிவேலோய்
நுந்தமிருவர்க்கரியநோன்மையுறும்வண்ண
மிந்தமொழிதந்திடுதுமென்றுபகருற்றாள். (க௫)

தென்றிசைதிகழ்ந்தகருநாடகமதன்கட்
பொன்றிரைகொழித்தொழுகுபொன்னிகபிலைப்பே
ரின்றிருநதிக்கிடையிலிந்துமுடியூருங்
குன்றிடைமகாபலமெனுங்குடிபுகுந்தே. (க௬)

மண்ணவர்மகிழ்ந்துறையவண்மையினளித்தே
நண்ணுவமதன்னருகுநன்னகரமொன்று
விண்ணகரமன்னதுமைசூரெனவிளங்கு
மெண்ணரியசூரர்களிருந்ததுபுரப்பார். (க௭)

அப்புரிமுனென்கையினடும்படையின்மாய்ந்த
மைப்புயனிறத்துமகிடாசுரன்மனத்திற்
கொப்புறவமைத்ததினுறைந்தனனதன்பா
டெப்புலவர்கட்குமணியம்பவரிதாமால். (க௮)

ஐயவினிநீரிருவருமவணடைந்தே
வெய்யவனெழுங்கிடுமவ்வெற்பிடை துலங்கு
மையையெனைமையறுமனத்துடனவாவுஞ்
செய்யமலர்கொண்டரியபூசனைகள்செய்வீர். (கசு)

பின்னையவனென்னலர்கள்பின்னமுறவாட்டி
யங்ககரும்வெற்றியலர்மேலுறையணங்கும்
கன்னடமெனும்பொழிலுங்கையுறநுமக்கே
யின்னமுமனேகவளமீதும்விரைகென்றாள். (உ0)

வேறு.

நாலிரண்டுதோளியிந்தநல்வரங்களீந்துபின்
வேலிரண்டெனுங்கடைக்கண்வெள்ளமாங்கருணையக்
காலிரண்டுமைந்தர்மீதுங்காலநோக்கிமெல்லவப்
பாலிரண்டடிபெயர்ந்துபார்க்கொணாதெழுந்தனள். (உக)

கள்பமன்னவரசமைந்தர்காளிபோனபின்பெழுந்
துளமகிழ்ந்துதென்றிசைக்கணாடுசென்றுவிசயமா
வளகையென்னுநகர்கடந்துவாநரேசனண்டவந்
துளபமாலிராமனுதிதோய்ந்தபம்பையெய்தியே. (உஉ)

ஆடுவோரகம்புறம்மிரண்டுந்தூய்மையாக்கிடு
மோடுநீரொழுக்கறாதநீடுதுங்கபத்திரைக்
கோடிலங்குகுன்றவில்லியாடுதாள்வணங்கியே
காடனைத்துநாடுகன்னடத்தினூடுநண்ணினர். (உங)

வேறு.

நண்ணியவந்தநரபதிதனய
ரெய்தினரேதுவரையதன்சீ
ரெண்ணுதற்கரியவிளவெயிலெறிக்கு
மினமணியொருபுறமிமையோர்
பெண்ணமிழ்துடனேவிண்ணமிழ்தருந்திப்
பெய்ம்மலர்க்கூந்தலார்குரலுந்
தண்ணுமையாழினிசையும்வேறுணராப்
பாடுவகேட்பதோர்தடமே. (உச)

தும்பிகணிதம்பந்தவழ்ந்திடுபுயலைப்
பிளிறொடுதுரந்துயர்சினையின்
வம்புறுதழையைப்புழைக்கரத்தொசித்து
வண்பிடிக்குதவிடுமொருசார்
தம்பெருங்கூந்தன்மலரொடுசெரியத்
தரளநீர்மதிமுகத்தரும்ப
வும்பரிற்கமழுநறுஞ்சுணமிடிக்குங்
கொடிச்சியர்தொகுதியுமொருசார். (உரு)

ஏனலின்குரலைக்கவர்தருகிளியை
யெம்பகைநீவிரென்றேச்சு
நானமென்குழலாரிசையுமாமுழையி
னவிலரிமுழக்குநால்வாயின்
மேனிமிர்பிளிறுமழையினவிடிப்பு
மீண்டிடாக்கதிவிழைந்தடைந்த
ஞானியர்பரவுநாரணாவென்னு
நல்லிசைக்குடைந்திடுந்தினமும். (உசா)

காய்கனிகிழங்கும்வீழ்பழஞ்சருகுங்
கைப்பறவயின்றுதம்முள்ளஞ்
சேய்கதிரரியின்மலரடிநாடச்
செய்தவமிழைப்பவரொருபா
றேய்கதிர்மரங்கணிரைபலதழைத்துத்
தூவியஞ்சாரிகைக்குலங்கள்
வாய்குழன்மிழற்றித்துவன்றிடமலர்ந்து
கமழ்ந்திடவளர்ந்திடுமெங்கும். (உஎ)

இத்தகைவேதப்பொருப்பினையந்த
விருமழவிடைகளுமிவர்ந்து
முத்தலைச்சூலவிரணியாக்கனைமுன்
முரணுரம்பிளந்தகூர்ங்கோட்டின்
வித்தகவராகனாலயத்தருகார்
வெங்கலியாணியேமுதலாந்
தொத்தறுபவத்தினட்டதீர்த்தத்துந்
தோய்ந்தனர்வேய்ந்திடுந்தொடையார். (உஅ)

பொன்னகருரிஞ்சிப்பொன்முடியொளிரு
நரகரிப்பொருப்பின்மீதேறிப்
பொன்னவனகலம்வகிருகிரவனைப்
போற்றிநன்மலரடிபணிந்து
பின்னரங்கிழிந்துபெய்கதிர்மணிசேர்
பெருமதிற்பீதகநிலயந்
தன்னகநுழைந்துதங்குலதனமாந்
தாமரைவிழியனைத்தொழுதார். (௨௯)

தொழுதெழுந்திருகைசிரமிசையேறத்
தூயநீர்விழிவழியொழுக
வெழுதருமுனதுதகைமையையெங்ங
னியம்புவதாதியில்வெய்யோன்
பழுதறுகுலத்தும்பனிமதிக்குலத்துந்
தோன்றியும்பண்புறும்வேள்வி
கெழுதகவுனையேநீபுரிந்தனையார்
கிழ்ப்படநின்னினும்பெரியோர். (௩௦)

அந்தணச்சிறுவனளித்திடுமமுதை
யடையவுமயின்றுநின்னகலஞ்
சுந்தரமுறவீற்றிருந்தபூமகளாற்
சுவணமச்சிறுவனுக்களித்தா
யெந்தையேயினியாமொருகருப்பையினு
முழன்றலைவின்றியேயருள்கென்
றிந்தவாறேத்தியிதயமங்கழுந்த
வெழுந்தனரவணிருந்தயலே. (௩௧)

ஆளியோரிரண்டினத்திருமலையை
யகன்றுதென்றிசையுறப்படர்ந்தந்
நாளருந்தமிழைவிளக்கியமுனிவாழ்
நாகநின்றிழிந்திருபுறமு
நீளிரும்பொழிலும்பதிகளுமீச
னிலயமுங்கோதமன்முதலாங்
கோளுறுமுனிவர்சூழலுங்குலவப்
பெருகுறுங்காவிரியடைந்தார். (௩௨)

குறுமுனிமனையாளஞ்சமாய்க்கவேரன்
கூரருஞ்செல்வமாய்த்தன்னை
மறுவறுமனத்தினினைப்பினுங்குறுகிக்
காண்கினுங்கரங்கடீண்டினு
முறுபவமொழிக்குமதனிடைமூழ்கி
யுவப்பொடுநித்தியகரும
நிறைவுறப்புரிந்தேயவணிருந்தெழுந்து
நீண்மகாபலம்லைசெறிந்தார். (௩௩)

வேறு.

ஓங்குநறும்பாடலமுஞ்சண்பகமும்புன்னைமகி
ழுயர்ந்தகோங்குந்
தேங்கமழுஞ்சந்தகிலுநிரைநிரையாச்செழித்தலர்ந்து
பாய்மாவாதி
யாங்கொடியவிலங்குகள்சூழ்ந்தங்கங்கேபுனிதநறுந்
தீர்த்தமார்ந்து
பாங்கர்பலமுழையகமும்பூஞ்சுனையும்பன்மணிநீர்ப்
பெருக்குஞ்சேர்ந்து. (௩௪)

பலவருணத்தாதொளிருங்கொடுமுடிமேற்படிந்தகரு
முகிலைக்கண்டு
கலவமயில்களித்தாடவித்தகையபல்வளங்க
ளின்னுமார்ந்து
நிலவுறுமவ்வரைமுகட்டினிவந்தேறிக்கனகமணிக்
கலசமின்னு
முலைவறுபொற்கோபுரத்தினுயர்ந்தோங்குஞ்சினகரத்தி
னுட்சென்றூரால். (௩௫)

சென்றங்குச்சீதரனார்திருமூலப்பகுதியவ
தாரமாகி
மன்றல்குழலியோகினியர்பலர்சூழ்ந்துதுதித்திடமுன்
மகிடற்செற்ற
வன்றிறல்வேல்வாண்முதலாம்பலபடைகண்மன்னுமலர்க்
கரமோரெட்டி
னன்றெளிருமாலினியினடிதொழுதுநாவாரப்
பழிச்சுகின்றார். (௩௬)

மன்பெரியவுலகெல்லாந்தோன்றிடநீமகத்தாயும்
பூதமாயும்
வன்பெரியவண்டமுமாய்நின்றனையேநிற்பணிவோர்க்
கருள்வாய்வாழ்வே
துன்பொழியநீயெமையும்புரந்திடுவாயெனத்துதித்தத்
தூய்மையாள
ரன்பினெடுமவ்விரவிலங்கிருந்தாரறைகுதுமே
லானவெல்லாம். (௩எ)

அவ்வண்ணந்துயில்கின்றவெதுராயனருங்கனவி
லவளேபோந்து
தெவ்வெண்ணுந்திறலோய்நீமுன்னிழைத்தநல்வினையாந்
திருவந்திந்நா
ளுய்வண்ணம்பயனளிக்கவுற்றதுகாணதற்கினிநீ
யுஞற்றற்பால
திவ்வண்ணமெனவுரைத்துங்கேட்டிடுகவெனக்குயில்போ
லிசைக்கலுற்றாள். (௩அ)

முன்னொருகாலத்திரத்தவீசனெனுமவுணனையான்
முடித்தேயாங்கு
மன்னுசொலச்சிக்குவையென்றொருநாமம்படைத்திந்த
மலைத்தென்கீழான்
மன்னுவனீவைகறையிற்றுயிலுணர்ந்தேயவ்வுருவை
மனத்திற்கேற்ப
முன்னியடிபணிந்தவடனருள்பெற்றுமூதெயில்சூழ்
மைசூர்சார்வாய். (௩௯)

செல்வழியினொருபுருடனொளிவீசச்செங்காவி
யுடையனாகி
நல்வரவாவெனநணுகிநவின்றிடுவனீயவனை
யென்போனடித்
தொல்வழியின்வழிபட்டுவணங்கியவன்சொல்வண்ணந்
தொடர்வையாகிற்
பல்வளமுநினக்குளவாமவன்பகமேதன்மிசையே
பார்ப்பையென்றாள். (௪0)

கொற்றவனுமவ்வளவிற் றுயிலெழுந் துபுலரியிலின்
குணத்தான்மிக்க
மற்றடந்தோட்பின்னவனேடைவையாவுமகிழ்ந்துரைத்த
படியேமாயை
சொற்றதலஞ்சென்றந்தச்சோதிமுகிதனைவணங்கி
யகன்றுபோந்து
கற்றவர்கள்கலையாயுமவையெங்குங்கவின்கொள்பெரு
மைசூர்சார்ந்தான். (சக)

அங்கொருபான்முக்கண்ணனலயத்திற்கயறிரண
பிந்துவென்னும்
பொங்குபுகழ்முனிமுன்னர்ப்போற்றியநற்றடத்தருகார்
வைரவன்றன்
றங்கமுறுநிலயத்தேதங்கியயர்வுற்றிடமெத்
தோன்றன்முன்னங்
தொங்குசடைத்தொகுதியொடுந்துலங்குமொருநற்புருடன்
றேன்றினனல். (சஉ)

யதுராயர் ஊரடைந்தசருக்கம் முற்றிற்று.

ஆக, செய்யுள் - சஅ.

இரண்டாவது

யதுராயர் மனையடைந்த சருக்கம்.

அக்காலைமன்னன்றிடுக்கென்றெழுந்தங்கைகூப்பி
யொக்காதவின்பக்கடலாழ்ந்தவனொண்பதத்தைப்
புக்காவணங்கிப்புகழ்ந்தேத்தியபின்னரைய
வெக்காலுமுன்போலெதிர்கண்டிலனெங்குமன்னோ. (௧)

நீயந்தநீலத்திருக்கண்டனென்றேநினைத்தன்
பாய்வந்தவென்னைப்பணித்திட்டதைப்பற்றுவனன்
னேயந்தனோடிவணீவந்ததையுய்யும்வண்ண
மாயிந்தவேளைமகிழ்வாயருளென்றிசைத்தான். (௨)

ஏராருமிம்மொழியேன்றத்திரியோகியுள்ள
நீராயுருகிநிலவேந்தநின்னின்முகத்தை
நேராகநோக்கினிலவாகுமுப்பானிரண்டு
சீராருமின்குணஞ்செய்வாயரசீங்குமன்னோ. (௩)

எண்டோளியின்னருளேன்றிவ்வுழிப்போந்தனையென்
றுண்டாயவெந்தனொளிசேர்தவத்தாலுணர்ந்து
கொண்டேயடைந்தேனுனக்கிந்நகர்கூடியாள
வுண்டேயதற்கோர்மறையுண்டஃதோதுவன்கேள். (௪)

வேறு.

ஆதியிற்கோதமன்றனருந்திருக்கோத்திரத்தான்
மேதகுகொடையுந்தேசுமேவியபோசன்வந்த
கோதருங்குலத்திற்றோன்றிக்குவலயமொருங்குகாத்தோன்
றீதறுஞ்சூரதேவராயனென்றிசைக்கலுற்றான். (௫)

அன்னவனொருகாலாண்டமதுரையையிகந்தன்பார்ந்த
பன்னருஞ்சுற்றத்தோடும்போந்திவண்பதுமநாபன்
றன்னொருமாயையாகுநீலியின்றயையாலிந்தக்
கன்னடமொருகோலோச்சிக்காத்தனன்கதிர்வேற்கையன். (௬)

அவனருங்குலத்திற்பின்னராளிபோலொருவன்றோன்றி
நவிலுறுஞ்சாமராயனென்றொருநாமம்பூண்டு
திவளொளிமகுடஞ்சூடித்திருநலம்பொலியவெங்கு
நவநிதியுறையுமிந்தநன்னகர்முறையிற்காத்தான். (எ)

நேரலரொருவரின்றிநெடும்பகலளித்துமூப்பி
னீரதிற்றளர்ந்துபின்பிங்நெடுநிலம்புரக்கமற்றோர்
சீருறும்புதல்வனின்றிச்செந்துவரிதழ்வேற்கண்ணோர்
காரெனுங்குழலினூளைப்பெற்றுயர்கதியிற்சேர்ந்தான். (அ)

ஈங்கிவனிறந்தபின்னரிந்நகரளிப்பாரின்றி
வீங்கியபுயத்துவீரன்மாரநாயகனென்றேதுந்
தீங்குறுமனத்தோன்சேனைநாயகன்றிருகாயிந்தத்
தாங்கரும்பெரியகோலைத்தன்வயப்படுத்தநின்றான். (கூ)

அன்னவன்றன்னையின்னேயருங்கிளையடங்கமூலந்
தன்னுடன்களைந்தேயிந்தத்தாரணிதனையுமந்தப்
பொன்னவிர்திதலைபூத்தபொற்குடக்குயங்கள்வீறுங்
கன்னிகைதனையுநீயேகைப்பற்றிக்களிக்கமாதோ. (க0)

இவ்வருஞ்செயற்கிங்கேன்றவிரகுனக்கிசைக்கவிவ்வூர்
மவ்வலங்தொடைமன்னற்கேமனமுறுங்கேண்மையாள
னெவ்வொருமறையுமந்தப்புரத்திருந்துணர்ந்தோன்காவி
கவ்வியவுடையன்மற்றோர்கலைவலான்வருவனின்றே. (கக)

வந்தவனினக்குநண்பாய்வழங்குமாறொழுகினைய
முந்தருங்கருமமெல்லாமுறைமையின்முடித்துநேரா
விந்திரபோகந்துய்ப்பாயிங்கவனுதவிக்கேற்பத்
தந்திடுங்கைம்மாறியாவுமெனக்கிட்டதாகுநீயே. (கஉ)

நானந்தப்புரத்தியோகினினக்குறுநலங்கள்செய்யத்
தானிங்குப்போந்ததென்றன்றலமதாநஞ்சன்கூட்டிற்
கானந்தத்துடனேபோவேனெனப்பகர்ந்தருளிக்கொஞ்சந்
தானிந்தப்படிமீதேகியுடனந்தர்த்தானமானான். (கங)

ஆனபினவ்வாறந்தவடையலர்ச்செருக்கும்வீரர்
வானதிசயமானந்தம்வளர்ந்தெழவிவன்முன்னஞ்சாம்
பானமதிழைத்தோனென்றேதுணிந்தந்தப்பகலுமல்லுந்
தேனிமிர்தொடையாராங்கேதெளிவுறக்கழித்தார்மன்னே. (௧௪)

வேறு.

ஈங்கிப்படியிவரார்ந்திடவெழில்கூரரண்மனையி
லாங்குப்புரவலனாயகியடுதானைகண்மன்னன்
றீங்குற்றுறுநினைவன்மாரநாய்கன்சதிசிந்தித்
தேங்கித்துயில்கூர்கின்றவந்நிசியின்கனவிடையில். (௧௫)

கங்கைச்சடையரனாரெழுந்தங்கைக்கருங்கண்ணாய்
சங்கைக்கடலழுந்தாதியான்சாற்றும்வகைகேண்மோ
விங்கித்திருநகர்வைரவனிலயந்தனிலிருவர்
தங்குற்றனராத்ரேயகோத்திரத்தேயுதிதந்தோர். (௧௬)

யதுவின்குலத்துடன்வந்தவரெவரும்புகழ்விறலர்
மதுவின்மலரம்போனெனமாமைத்திருவுடையார்
சுதையின்மொழிபகர்வோருயர்தோன்றற்குறுகுணமா
மெதுவுங்குடிகொண்டோரவரிருவர்க்குளுமுன்னோன். (௧௭)

நின்னேரிழையாளுக்குறுநேயம்பயில்வரனா
மின்னேயுனக்கிதமுந்தொழிலிழைக்கும்மறிவுரமு
மன்னேயுளவொருவன்றனைமதியாதவனேவித்
தன்னேரிலன்றனையிவ்விடந்தருவித்துயர்மகிழ்வாய். (௧௮)

அன்னம்பயினடையாளுடனாளும்மரசினையு
மன்னன்மகற்களிப்பாயெனின்மாற்றாரனைவரையும்
பின்னம்படநூறிப்பலவறமெங்கணும்பெருகத்
தன்னந்தனிதாங்கும்புவிதழைக்குங்குலமென்றான். (௧௯)

இவ்வாறழலேந்தும்பெருமானன்றிசைத்தேகச்
செவ்வாயரயனாபகிசிக்கென்றெழுந்துணர்ந்தே
யொவ்வாததன்கனவின்முதவுததிக்கிடையாடி
யவ்வாய்மடமயிலன்னதனணங்கிற்கிதுசொன்னாள். (௨௦)

கிளியஞ்சுரையாளம்மொழிகேட்டுண்ணிறைமகிழ்வாந்
தெளிவஞ்சமுதம்மேலெழுமெனவேநகைசெய்போ
தொளியெஞ்சலினுதலன்னையுமகளோடுறவுசவிக்
களிவிஞ்சியகனவின்னிலைகருதாவிதுசெய்தாள். (௨௧)

அந்தப்புரமகலாதவனன்பிற்குறைவில்லா
னெந்தப்பொருளேனும்முணர்ந்தெளிதிற்சொலவல்லான்
செந்துப்பெனுமுடையானொருவற்கிம்மறைசெப்பி
யந்தப்புரவலன்மைந்தர்களருகிற்செலவிட்டாள். (௨௨)

அப்போதிளவெயில்கான்றிடுமணியாளவடனைய
ளெப்போதுந்தனயலையுளவிருதாதியரைக்கூஉ
யிப்போதுநீரிவ்வூர்வயிரவன்சந்நிதிக்கேகி
யொப்போதவிர்ந்துளராமவணிருவீரரைக்காண்மின். (௨௩)

அவரங்குரையளவும்மெழிலளவுந்திறலளவுங்
கவருங்கடிதினின்மீளுமினெனவிட்டனள்கழறி
யிவரும்மவளுரையின்படியேகிப்புரையின்றே
யவிரும்மொளியாரத்திருவனுசர்களைக்கண்டார். (௨௪)

கண்டத்தினிலாடும்பிலிங்கத்தானொருகாவித்
துண்டத்தினன்வியப்போடவர்துண்டந்தனைநோக்கிக்
கொண்டுற்றுரைசெய்போதவர்குணனியாவையுமுணரா
விண்டத்தலமீண்டும்பவனத்துட்புகுந்தறைவார். (௨௫)

வீரத்தினுந்தீரத்தினுஞ்சூரத்தினுமிக்கார்
காரொத்தொளிர்குழலாயவர்காண்டற்குறுமெழிலார்
நீரெத்தனையென்றேயுரைசெய்தும்மெனநிகழ்த்து
நேரத்தினிலவள்கொண்டதுநிகரற்றிடுமுதமே. (௨௬)

வேறு.

இப்பாலண்ணல்பன்னிவிடுத்தவிலிங்கத்தா
னப்பார்மன்னர்க்கருகிலணைந்தேயவர்செய்த
வொப்பாமேற்றம்யாவுமடைந்தங்குடனொர்ந்தே
யப்பாநீவிராரெனமுன்னோன்முகம்பார்த்தான். (௨௭)

ஆங்கம்மன்னன்புன்னகையோடுமகமார்ந்து
தேங்குமானந்தத்துடனேமண்டிகழ்ந்தென்று
மோங்குந்தன்னின்னொண்மரபுங்கோத்திரமும்மெல்
லாங்கண்டேராயாடுறும்போழ்தத்தவன்மன்னோ. (உஅ)

நண்ணாருன்றேய்நாமுறும்வேலாரிவராற்றற்
கொண்ணுதொன்றுமென்றுமனத்திலுரங்கொண்டு
கண்ணாரந்தப்பொன்னகர்பாடுங்கருநீலக்
கண்ணார்வேந்தன்றேவிகருத்துங்கழறிப்பின். (உகூ)

முன்னேசெய்தற்கொத்தனயாவுமுறையாலே
மன்னேயின்றிக்கூறியடங்கமதிவல்லோ
யின்னேகோயிற்கேகிவிரைந்தங்கிருந்தேயான்
பின்னேமீள்வலென்றுரையாடிப்பெயர்ந்தேகி. (௩0)

கோயில்புக்குக்கொற்றவன்றேவிநீமுன்ன
மேயச்செய்தநல்வினையேயோரெழின்மன்னன்
சேயுருவாகிப்பயனீயச்செறிதந்த
தாயவன்றன்செய்தியனைத்துமறையக்கேள். (௩க)

கண்ணன்வந்தமன்னுகுலத்தின்கடைவந்தோன்
மண்ணையாள்வோர்க்கெண்ணுவயாவுமணந்துள்ளான்
பண்ணுநன்றிப்பாடொருபோதுமறவாதா
னண்ணார்கண்ணும்வாய்மையையன்றிநவிலாதான். (௩உ)

வருங்கல்விச்செல்வமுநீதியியைபெண்ணுஞ்
சேருஞ்சீர்த்திவண்மையுநாளுஞ்செறிந்துள்ளான்
கூரும்மின்பங்கூட்டுணுதற்காம்பருவத்தா
னுருங்கர்வமெள்ளளவேனுமறியாதான். (௩௩)

தன்னந்நீங்காத்தம்பியொடுள்ளான்றனையின்னே
முன்னலொன்றுஞ்செய்திடவின்றிமுறையானே
நன்னயத்தின்பொன்னகரூடுநணுகச்செய்
தன்னோனுன்றன்றொழிலெல்லாமடைகென்றான். (௩ச)

வேறு.

மருந்தேயன்னவம்மொழியைமகிழக்கேட்டவரசியுந்தன்
முருந்தேயன்னமுறுவலினளுடனுமோதக்கடலாடித்
திருந்தேரிரண்டுபரம்பரைக்குந்தெளிவாரன்பினெடுங்காலம்
வருந்தேரறிவின்முதிர்ந்தவரும்வழங்குந்திருவாய்மறையவரும். ()

எண்ணுந்தொழில்களிடருமேயிழைத்துமுடிக்குந்திறலருமாய்
நண்ணுந்திம்மராசையனாரணையனெனுமிரண்டு
கண்ணுமமைச்சர்களைவிளித்திச்செய்தியனைத்துங்கழறிப்பின்
விண்ணும்விரும்புமந்தணரேவிளம்புவதொன்றுண்டதுகேண்மின். ()

வந்தமன்னன்புயவலியின்வயிரியென்னுங்களைகளைந்தே
யிந்தவமயத்திப்பெரியவிடும்பையினின்றுமெமைக்காத்து
முந்தைதொடங்கியளித்தவர்க்குமுடித்தாசரியகைம்மாறென்
றெந்தவுலகும்புகழ்ந்திடுமாறியற்றும்விரகினெனவிசைத்தாள். (௩௭)

தேவியறைந்ததறிந்தந்தத்தேர்ச்சித்துணைவரிருவோருங்
காவிநிகர்க்குங்கண்ணிணையெங்காவலன்றன்பெருமாட்டீ
நீவிளம்புமாணையினைத்தாழாதின்னேநிறைவேற்ற
வாவியெனினுந்தருவதற்கிங்ககலாதுறுதியாயுள்ளேம். (௩௮)

இனையேலுன்றன்றிருவுளத்தின்வழியேயிங்ஙனீடேற்றிப்
பினையாமுண்பேமெனப்பகர்ந்துபெயர்ந்துதனியேயிருந்தாய்ந்து
முனையிலின்பமுறுபவருமுறுக்கார்மீசைமுகங்கண்டே
நினையாரஞ்சும்வயவருமாநேருஞ்சிலரைவரப்பணித்தார். (௩௯)

ஐயனுழையேயன்புளருமயலான்மாரநாயகன்மேல்
வெய்யபகையேவிழைந்தவரும்வில்விட்டிலகும்பலபடையுங்
கையிலிலங்கத்திரிபவருமாகுமந்தக்காளையரைப்
பையவழைத்துப்பாங்குறயாம்பகர்துங்கேண்மினெனப்பகர்வார். ()

தீங்கொன்றின்றிநமைப்புரந்ததிணிதோண்மன்னனிறந்ததற்பின்
றாங்குந்தானையொழுக்குபவன்றண்மையென்றுந்தானறியான்
வீங்கும்புயத்தாணிவ்வரசும்வேந்தன்றொகுத்தவிழுநிதியு
நாங்கண்டழியவபகரித்துநம்மையின்னுநலிவிக்கும். (௪௧)

தீயனவனைச்செகுத்திடயாந்திண்மையின்றியிதுகாறுந்
தாயின்றுழலுங்குழவியெனத்தவித்தோமுன்னரியாமிழைத்த
சேயதவமுண்டதனுனஞ்செல்விக்குரியவுறவினனு
மாயவிழையார்கணப்பொழுதேமடியவிழைக்குமறத்தோனும். (சஉ)

எழுமீவோடென்றும்பழகியதோளிளமைவாய்ந்தவனுமாயோர்
மழுவாளேந்திமன்னர்பிரான்மாநீர்த்துவரைதணந்திந்த
வழுவாவெண்ணில்வளஞ்சுரக்கும்புரியினயலேவரைவின்றித்
தழுவாநிற்குந்தம்பியுடன்போந்தங்கின்றுபொலிந்துளனல். (சங)

மாற்றாரஞ்சம்மன்னவனைமகிழ்வாயக்தப்புரங்கொணர்ந்து
தேற்றாருடனேசெருமூட்டிச்சீறுங்கூர்வேன்முதலாய
கூற்றுமென்னும்படைதாங்கிக்குழூமியார்த்தக்குமரர்கணந்
தேற்றான்செகுக்குமாறேகிச்செய்ம்மின்சேனைத்துணைகேண்மின். ()

புரந்தார்கண்ணீர்மல்கியழப்போரிலிறக்கப்பொருந்தினதே
யிரந்துங்கோடற்கேற்றதெனவிழுமியோர்நன்கிசைத்துளதால்
பரிந்தேநம்மைப்பரம்பரையாய்ப்பாலித்தவர்கட்கின்றணவாய்
விரைந்தேசோற்றுக்கடன்கழிப்பீர்வீரர்காளென்றியம்பினரால். ()

வேறு.

ஊரளிக்கவுறுமறிவாளர்காள்
பாரளிக்குநம்பார்த்திபர்க்கித்தகைச்
சீரளிக்குமமையமுஞ்சேர்ங்கொலோ
வாரளிப்பரிதுவென்றழுங்கினேம். (சகூ)

ஈங்குறுந்திருவாணையிதுவெனின்
வீங்குதோளினவ்வேண்டலன்றன்சிரந்
தாங்குதாரணிமேற்பனங்காயென
வாங்கறுந்துவிழுந்ததுகாண்மினே. (சஎ)

இந்தவெம்மொழிக்கெள்ளளவையமு
முந்தமுள்ளமுறற்கவென்றாங்கவர்
தந்தந்தானைகடங்கரந்தீண்டியே
யந்தணாளர்க்குறுதியறைந்தனர். (சஅ)

ஈங்குரைத்தவரெண்ணரும்பல்படை
தாங்கியாடமர்தாமெதிர்நோக்கியே
வீங்குவெம்மறத்தோடுறும்வேலையி
லாங்கமாத்தியர்கோயிலடைந்தனர். (சகூ)

அடைந்துதம்மரசிக்கறைந்தியாவையு
மிடைந்தவீரர்சிலரைமிடுக்கினத்
தடம்பெருங்கோயிருங்குமாறேவியம்
மடந்தையாணையையேன்றவர்மற்றுமே. (ருo)

முன்னுரைத்தவிலிங்கியைமுற்கொடு
மன்னன்மைந்தருறைவிடமண்டியே
யன்னமன்னவரசியின்சொற்படி
மின்னுஞ்செல்வனைக்கண்டுவியந்தனர். (ருக)

புதுமையெய்தியம்முன்னவன்பொன்முக
மதியைநோக்கிமகிழ்ந்தையவெந்திருப்
பதியின்செல்வியுன்பங்கயவாண்முக
மதுகண்டின்புறவெம்மையனுப்பினள். (ருஉ)

நிற்குமெண்ணருநேர்மைகளார்ந்திடு
மற்பினின்னனுசனுடனுயுதப்
பொற்பமைந்தகரத்துடன்போந்தெங்க
ணற்பெருந்திருக்கோயிலைநண்ணியே. (ருங)

நின்றுணைப்புயநீளுரத்தொன்னலர்
வன்றலைப்பூவுதிர்ந்திடவாட்டியம்
மன்றலங்குழன்மன்னியினன்னவ
டன்றிருக்குயிறன்னையுங்காணுவாய். (ருச)

கண்டுமன்னவருள்ளங்களிப்புற
மண்டலம்புரப்பாயிதுவாய்மையென்
றெண்டிருக்கருத்தீடறுமவ்விரு
மண்டலேசன்றுணைவர்வழங்கினர். (ருரு)

இந்தவாசகங்கேட்டவிகலுறு
மந்தவேந்தனருஞ்சுதன்பின்னவண்
வந்தமூவர்தமையும்வழிக்கொடு
விந்தைமாநகர்வீதியினேகினன். (ருசு)

ஏகுகாலையெயிற்கடிவாயிலின்
வாகுவன்மையும்வாண்முதல்வெம்படைப்
பூகமும்பொலியப்புரப்போர்களந்
நாகமன்னவர்நன்முகநோக்கியே. (ருஎ)

ஆருநோக்கற்கருங்கடிவாயினீ
ராரிவண்விருந்தாயுண்ணுழைந்தனிர்
மாரநாயகன்றன்னைமதித்திடீர்
பேருமென்றயல்பேசித்தடுத்தனர். (ருஅ)

கண்டுமுன்னவன்கண்டகர்செய்ததைத்
துண்டமாகத்துணித்தவர்தஞ்சிரம்
மண்டபங்கள்செறிந்தவம்மன்னர்வாழ்
கொண்டல்கண்படுங்கோயிலையெய்தினன். (ருகூ)

வந்தசெய்திவழங்கியரசியின்
சிந்தையின்படியவ்விருசெல்வரை
மந்திரத்தலைவோரொருமாளிகை
சந்தனத்திற்சமைத்ததில்வைத்தரோ. (சுO)

வீரராகியவெம்படைக்கையராஞ்
சூரராகுஞ்சிலரையச்சுந்தரர்க்
கேரராதமெய்காப்புறவேயிழைத்
தாருருவுபசாரமுமாற்றினர். (சுக)

வேறு.

ஈங்கிவரிவ்வணமிருந்தகாலையி
னுங்கருந்தானையினதிபனெற்றராற்
றுங்கருங்கம்பலைதனக்குநேர்ந்ததை
யேங்குறக்கேட்டிடியிடித்ததொத்தனன். (சுஉ)

மற்றினியான்மனமறுகியென்பயன்
பற்றலர்க்குடைவதுபடைஞர்க்கீனமென்
னொற்றைவன்புயத்தினூக்கியொன்னலர்
முற்றுறமுடிப்பனென்றுறுத்தெழுந்தனன். (௬௩)

கோட்புலிப்போத்தெனக்கொதித்தெழுந்துதன்
னாட்களையமர்க்கெழவறைந்துசீறுவெம்
வாட்படைமுதலியவிசித்துவன்கணான்
றீப்பொறிவிழிகளிற்சிதறினானரோ. (௬௪)

கண்ணகன்படைக்கடல்கலந்துசூழ்வர
வண்ணலந்தன்றிருவரண்டணந்துபோந்
தெண்ணறுங்களிறுகள்பிளிறவெங்கணு
நண்ணரும்பொருகளநணுகினானரோ. (௬௫)

இத்தலையெதுகுலத்திறைவன்பின்னுட
னித்தியகருமமுநிறைவுறப்புரிந்
தத்திருமாலுடனுதித்தவையையைப்
பத்தியினினைந்துபல்படையுந்தாங்கியே. (௬௬)

முன்னரவ்வந்தணர்மோதுபோர்பொரத்
தன்னருகுறும்வணஞ்சமைத்தவாட்படை
துன்னியமருங்கினிற்சூழ்ந்துபோதரக்
கொன்னவில்களிறுமேற்குலவப்போந்தனன். (௬௭)

குடைகளுங்கொடிகளுங்கொடிஞ்சித்தேர்களு
மிடைதரவெழுந்துசென்மிளிருவாட்படை
யுடைதரக்கனைகடலோங்கலாதியோ
டிடையறப்புவிமிசையெழுந்ததொத்ததே. (௬௮)

ஏறியவயவர்கள்கலினமீர்த்திட
வீறொடும்விண்ணகம்விசையினோக்கியே
பாறிடுபுரவியின்பந்திமாரனை
நூறிடவிளைவதோர்நுவற்சியுற்றதே. (௬௯)

வாசவன்சிறகரைவயிரத்தீர்ந்தபின்
மாசறுவரைகளோங்கடிகணுன்குடன்
காசினிமிசையுறக்கலந்தியங்கல்போ
லாசறுகரித்திரளனேகஞ்சூழ்ந்தவே. (எ0)

முறுக்கியமீசையர்முழித்தகண்ணின
ருறுக்கியவுரையினருடலமெங்கணு
மிறுக்கியவெஃகினர்மறவரெண்ணில
ரறுக்குவம்பகைமுனென்றறைந்துமுந்தினர். (எக)

குணில்பொருமுரசொலிகுஞ்சரத்திசை
திணிபுயமள்ளர்கடெழிக்குமார்ப்பணி
யணியெனக்கிளர்ந்தெழுமயங்களார்ப்பெலா
மணகடந்தெழுகடலரவமொத்தவே. (எஉ)

பரிகளின்குரத்தெழுபுழுதிபண்ணவர்
திரிதருவிண்ணெலாந்தெரிவின்றூர்தலி
னிருளுறக்கரித்திரள்பெருக்குமேழ்மதத்
தரியவத்துகளொழிந்தகன்றதவ்விருள். (எங)

இவ்வணமெழுமனீகத்தொடத்திரு
மௌவலந்தொடையலான்மிடைந்தமர்க்களந்
தெவ்வரைத்திருகிடத்துணிந்தகாலையி
லவ்விருபடைகள்கைகலந்ததங்ஙனே. (எச)

கடகரித்திரண்முகில்கடுப்பமள்ளர்கள்
தடறுரீஇயோச்சுவாடயங்குமின்னெனக்
கடிமுரசிடியொடுகுருதிகாலுமோர்
படிமழையிதுவெனப்பகரலாயதே. (எரு)

ஆங்குநந்தானையேயமரின்மாய்தரன்
மூங்கிலினடவிபோன்முறையன்றென்றுணர்ந்
தோங்கியபுகழினவ்வுரத்துமன்மகன்
றூங்கருந்தானையைத்தடுத்துமீறியே. (எசு)

ஊழியினுலகினைக்கவருந்தீயெனக்
கேழ்கிளர்கிடுகினைத்திரித்துமாரனைச்
சூழ்தருசிலர்சிரஞ்சொரியுஞ்சோரியின்
வீழ்தரநிலமிசைத்துணித்துவீழ்த்தினான். (எஎ)

வீழ்த்தியுமொன்னலன்வீயச்செல்கையில்
காழ்த்திடுமனத்தினக்கருதலன்புவி
வாழ்த்திடுமெதுகுலத்துதித்தவள்ளலைத்
தேழ்த்தெதிர்துடித்திதுதெரித்திட்டானரோ. (எஅ)

மணிவணனுதித்திடுமரபிற்றோன்றிய
துணைவனுநீயுமத்துவரையாட்சியை
யிணையறவிழைத்திடுமேற்றமின்றியிங்
கணைதருநீயுமோரரையனாவையே. (எகூ)

உழுதருபகடெனினுறைவிடந்தனிற்
கெழுதகைபெறுமெனக்கேட்ககில்லையோ
வெழுதருபெண்ணுமிம்மண்ணுமிங்குற
வெழுதருமுன்சிரமிடறுமீங்கெனா. (அ0)

உளறிடுமவ்வுரைகேட்டவுத்தம
னிளமுறுவன்மினவிழைத்துமாறயான்
றுளபமாலுதித்தவத்தூயவான்குடி
யளோபிறந்ததைமிகுத்தறைதல்வாய்மையே. (அக)

ஆனதாலவன்றிருவருளினின்னையே
யீனராமவுணரையீர்ந்தவாறென
நானுனையொறுத்திடுநசையின்விஞ்சியே
தானிவண்போந்தனன்சாற்றக்கேளினும். (அஉ)

ஆகுதிபெயற்குறுமவியையோடுமோர்
நாய்கவர்ந்திடுவதுகடுப்பநானில
நீகொளற்குரியதோநிருபனாகயா
னோகையினொளிர்கையிலெனவுறுக்கினான். (அ௩)

அன்னதுகேட்டலுமவன்கண்டீயுகக்
கொன்னவினெடியதோர்கொடியவேலினைத்
தன்னிருகரத்தினுந்திரித்துத்தாரணி
மன்னவன்மார்புறவலிந்தெறிந்தனன். (அச)

எறியுறுமதுவெறுழெரியுந்தூமமு
நிறைதரவெங்கணுநெடியநஞ்செனப்
பொறிமினப்போதருமதனைநொய்தினி
லறைகழலவனிபனங்கைப்பற்றினன். (அரு)

பற்றியவதனையேயெறிந்தபான்மையு
மற்றவன்மார்புறநுழைந்தவண்ணமுந்
தெற்றெனவெவர்களுந்தெரியக்காண்கில
ரற்றதைவிழுந்தவனறியக்கண்டனர். (அசு)

வேறு.

பற்றலன்படிமிசைவிழுந்துருண்டதும்பரிய
வெற்றிசேர்முரசொலியொடுவீரர்களார்ப்புங்
கற்றவந்தியரெடுத்திசைபாடுநற்கலிப்பு
மெற்றியெங்கணுஞ்செவிடுறவெழுந்தனமாதோ. (அஎ)

மாரநாயகன்மாண்டனனெனுமொழியமுதைச்
சாரரோடியேதரணிபன்மனைவிதன்செவியிற்
சேரவூற்றவுந்தெவிட்டுறவுண்டவள்சுகமு
நேருறுமொழிமகளுடனிகழ்த்தினண்மகிழ்ந்தாள். (அஅ)

பொன்னரிச்சிலம்பின்னடையிரண்டினும்பொருவி
லன்னம்பின்னிடுமம்மகளடையலர்செகுத்த
மன்னன்றோள்வலிமனமுறக்கேட்டலுமவண்மேற்
கன்னல்வில்லியைங்கணைபலவுளைவுறத்துரந்தான். (அகூ)

சொன்னசாரணருவப்புறப்பொருள்பலசொரிந்து
மன்னவன்னெதுமழவிடையனையனைவிரைந்தே
யன்னபோரகமகன்றிவணடைதரவறைமி
னென்னவாங்கவர்விசைத்தெழுந்திசைத்தனர்முறையே. ()

கண்டுகாவலனவ்வுரைவனரொருக்கிமேற்
கொண்டுமீண்டெழுமெழிலினைக்குறிக்குநல்லறிவோர்
விண்டலந்திகழ்பொன்முடியுடனொருவிலங்கன்
மண்டலந்தனிலியங்குவபோன்மெனமகிழ்ந்தார். (௬௧)

வெற்றியந்திருவிளங்குயரெழுவடுந்தோளா
னுற்றதம்பியினுவப்பொடுபோந்துயர்மணிசேர்
பொற்றடந்திருக்கோயிலின்வாயிலிற்புகுங்கால்
சிற்றிடைச்சியரனநடையவர்பலர்செறிந்தார். (௬௨)

வந்துமன்னனைவளைந்தயலவர்களையெளிதி
னந்தவீட்டியதிறத்தினொடுகெண்ணெச்சில்
சிந்தமங்கலஞ்செறிந்திடவயினிநீர்சுழற்றி
யெந்தநாளினுமிசைபெறவாழ்கெனவிசைத்தார். (௬௩)

பின்னரன்னவன்பெரும்பகடதனிருந்திழிந்து
மன்னுமாமலைமுழைபுகுமடங்கலேறென்னப்
பன்னருஞ்சிறப்பார்ந்திடும்பவனமதடைந்து
மன்னுநண்பர்கடுவென்றிடமகிழ்ந்துவீற்றிருந்தான். (௬௪)

உலகையாண்டிடுமண்டபமதனிடையொளிரும்
விலையிலாமணிகுயிற்றியதவிசிடைவிளங்கி
யலகிலாமணிபணிதுணிமுதலியவடுபோர்
மலையவந்தவராதியர்மகிழ்வுறவளித்தான். (௬௫)

எகுமென்றவர்தமைவிடுத்திருந்துழியடையார்
சாகவீட்டியசதுரனைக்காண்குறுநசையாற்
பாகினின்மொழிப்பார்த்திபன்றேவியாங்கழைப்ப
வாகைமாலையோடவனுறைவளமனைபுகுந்தான். (௬௬)

அந்தவந்தணரிருவருமிலீங்கியுமருகு
வந்துசூழ்வரப்போந்தவன்வசுமணியிழைத்த
சந்தவாரிலகெழினியுட்சார்ந்திடுமரசி
யிந்துமாமுகிதனைத்தொழுதிருக்கையிலிருந்தான். (௬௭)

இருந்தவள்ளலையிருகணுலருந்துவதெனவே
திருந்தநோக்கியித்திருமகனுதற்கணின்முன்ன
மெரிந்தமாரனேயிவ்வுருவுடனெடுத்திவண்போந்
திருந்ததாமெனத்துணிந்திவையியம்பினண்மாதோ. (௯௮)

ஐயநின்னெருவரையடுபுயத்திறைலடையார்
வெய்யபோரினில்வீறழிந்தொழிந்திடவீட்டி
யுய்யுமாறெமக்குதவினையுரியகைம்மாறு
செய்யயாமினியெவையுளநினக்கிவண்செய்யோய். (௯௯)

புந்தியோடிணையறுமிகல்பொருந்தியபுனிதா
முந்துநான்முதன்முறைமுறையெம்முனோர்புரந்த
விந்தமாநிலமிகலறவீங்குநின்னருளா
லுய்ந்ததாதலினீயினியளித்திடற்குரியாய். (௧௦௦)

பேணலான்றனைப்பெருங்கிளையடியொடுங்களைந்தே
யேணிலாவயத்திருவெழுந்தறுமுனதெழிலார்
காணலாம்புயத்தெனதொருகவின்குடியிருந்த
வாணிலாமுறுவன்மயிறனையுமீங்கணைவாய். (௧௦௧)

என்றுவேண்டியின்முகமனும்பலபலவியம்பித்
துன்றுமாமறையாளரேநீவிரித்தோன்ற
லொன்றுமாணையின்வழியினியொழுகுமென்றுரைத்தம்
மன்றலங்தொடையவர்கடம்மனைக்கெழவிடுத்தாள். (௧௦௨)

யதுராயர் மனையடைந்த சருக்கம் முற்றிற்று.

ஆக, செய்யுள் - ௧௫௦.

மூன்றாவது

விவாகச்சருக்கம்.

ஆடலாரவரிருவருந்தமக்கெனவமைந்த
நாடலாந்திருமாளிகைநணுகியேயிருந்தார்
பாடலாமுரைப்பார்த்திபன்பன்னியுமமைச்சர்க்
காடலாயினளிம்மொழியகங்களித்தன்றே. (௧)

ஐயரேயெமதரும்பசுங்கிளியிணையரனார்
மையுருவெதுமரபினற்களியெனமுன்னஞ்
செய்யவான்கனவதனிடைச்செப்பியபடியே
செய்யவெண்ணினேனதற்கினிச்செய்குவசெய்வீர். (௨)

என்றிசைத்திடவவர்களுமாமெனவியைந்து
நன்றுமாநகரணிசெயப்பறைபொரநவின்று
குன்றுபோலகங்குலவியகோயிலுமணிய
நின்றகிங்கரர்தமக்குடனிகழ்த்தினரன்றே. (௩)

வேறு.

ஒருபகன்முழுதுநேராயோடினுங்கடைகாணுத
தெருவுகள்பலவாமந்தத்திருநகர்தெரியச்சாற்றுங்
கரிமிசைமுரனுமந்தக்கடிமுரசரவங்கேட்டுப்
பெருமிதத்துடனெல்லோருந்தமதகம்பிறங்கச்செய்தார். (௪)

சாந்திநின்மெழுகியெங்குந்தரளத்தின்றுகளினேற்க
மாந்தளிர்மேனிமின்னார்மலர்நிகர்கோலந்தீட்டிப்
பூந்துகின்மீதுசேர்த்திப்பூந்தொடையசையநாற்றி
யேந்தெழிற்பதுமையன்பினிணைபலநிறைத்தார்மன்னே. (௫)

பன்னிறத்துகில்கள்வானிற்பகற்கதிர்மறையவீண்டி
மன்னுரத்தெறியுங்காலிற்படபடென்றடித்துமல்கத்
தொன்னகர்மறுகின்முற்றுந்துகிற்கொடியொழுங்கினூட்டிப்
பன்னருங்கமுகரம்பைப்பந்தியும்பொதுளச்செய்தார். (௬)

பொற்றசும்பொழுங்கினெங்கும்பூரித்துப்பொருந்தவைத்தார்
விற்றுலங்கரியபூவார்தோரணம்விழையவீக்கி
வெற்றொடுங்குடுமிமாடமெங்கணுமினையசெய்தார்
கொற்றவன்வதுவைதங்கள்குலத்துறும்வதுவையென்றே. (௭)

நீணகரினையகோலநிகழ்கையினிருபர்க்கேய்ந்த
மாணரண்மனையிற்செய்தமாட்சிநாமுரைக்கற்பாற்றே
வாணிலவுமிழுஞ்செய்யமணிபெழுவரிசைமேலாங்
காணருமுறையைவிக்கிக்கவின்பெறத்துடைத்தார்மன்னோ. (௮)

ஆடுறுமரங்கும்வேந்தனமைச்சர்களுடனாராயக்
கூடுறுமரங்குமற்றுங்கொலுவிருந்துலகையாளும்
பாடுறுமரங்குமாதிப்பன்மணியரங்குதோறு
மேடவிழ்நறியபூந்தாரெங்கணுந்தூங்கச்செய்தார். (௯)

நீடியசுவருங்கீழுநிலவிடுகுறடுமெல்லா
மாடகமதனிலாயவத்திருத்தலங்கடோறுங்
கோடகிலதனைவாசநீரினிற்குளிரத்தேய்த்த
தேடருங்கலவைசிந்தித்திகழ்மணிக்கோலமிட்டார். (௧௦)

கடிமணம்புரியவாய்ந்தகாவதமகன்றபந்தர்
நெடியபொற்கம்பநாட்டிநிலவுவெண்பொன்னாலாய
வடுவறுதகடுமீதேவளம்பெறவேய்ந்துபாங்கர்
விடுசுடர்ப்பளிங்கின்பித்திவிழுத்தகவமைக்கப்பெற்றே. (௧௧)

துகிலிகைபலவுமார்ந்ததுகூலமேற்பரவச்சேர்த்தி
நகுமிருபளிங்குமன்றிநவமணிவிளக்குநாலித்
தொகைபெறுசரமும்வண்டுபாண்செயுநறியபூவின்
சிகழிகைபலவுந்தூங்கச்செய்தொளியெறிவதெங்கும். (௧௨)

பாளைவாய்ப்பசியதேன்சோர்பைங்கமுகரம்பையின்ன
நீள்கடைத்தலங்கடோறுநிழலுறமருங்குநாட்டி
வாளையைநிகர்த்தகண்ணாரிவையெனமருளற்கேய்ந்த
காளையரிலங்குபாவைகலந்தெங்குமிரீஇயதம்மா. (௧௩)

உண்மையாமிரத்தினத்தின்கம்பளமொளிரவெங்கும்
பொன்மையாந்தரையின்மீதேபொலிவுறவிரித்துநாப்பண்
பெண்மணிவதுவையாற்றப்பிறங்குவேதிகையுமார்ந்து
விண்மணியெனவேயல்லும்பகலெனவிளங்கிற்றன்றே. (௧௪)

தோரணமரகதத்தின்றுலங்கியபவனமெங்கு
மேரணியணங்கனாருமெறுழ்வலியரியன்னாருந்
தாரணியிணையொன்றில்லாமணியணிதயங்குமெய்யிற்
சிரணியுடையுமின்னத்திரிந்தனர்களிப்பின்மன்னோ. (௧௫)

அத்திருமணத்திற்காங்காங்கிருந்தரண்மனைக்குப்போந்த
வத்துவின்வகையையெம்மால்வழங்கலாந்தகைமைத்தன்றே
தித்திப்புப்பயிலுந்தேமாமுட்புறக்கனியும்வாழைக்
கொத்துறுகனியுங்கொண்டசகடமோரிலக்கமாமே. (௧௬)

சுரிகையினரிதற்கொத்ததோய்தயிர்ச்சகடிலக்கம்
வரிமணியணிசேர்போர்வைவண்டுகிலிரண்டிலக்க
முரியநெய்யமுதமுள்ளவுழையிருந்தாறுங்காலிற்
பெரியதோர்மருதம்பாய்ந்துசெந்நெலும்பெருகிற்றன்றே. (௧௭)

கன்னலுங்கண்டுமின்னுங்கறிவகைமுதலவெல்லாம்
பன்னுவதென்னையந்தக்கடிமணம்புரிவின்முற்றி
நன்னகர்தன்னில்வாழுமனைவருநாலுதிங்கள்
மன்னியகளிப்பினுண்ணவழங்கினரென்பமாதோ. (௧௮)

நூல்களின்றுறைகைபோயநுண்ணறிவுடையோராய்ந்த
வாலுறுமுகூர்த்தநாளில்வதுவையினோலைகண்ட
காலுறுங்கிளைகளோடுகாதலர்முதலெல்லோரு
மாலுறுநகரந்தன்னிலிடையறமல்கினரால். (௧௯)

கொடியணிகொடிஞ்சித்தேருங்குரகதக்குழாமுங்கூர்ங்கோட்
டிடியெனப்பிளிறுமாவுந்தந்தத்தினிழைத்துமின்னும்
பிடிநடையவர்களேருஞ்சிவிகையுமிணைந்தெண்போடற்
கிடைதினைத்துணையுமின்றியெங்கணுநிறைந்தமாதோ. (௨௦)

பிறைநுதலிறைவன்பெண்ணும்பேணலாருடலம்பிறிக்
கறைகெழுவேலினானுங்கைப்பற்றுமளவையின்னுங்
குறுகலிலெனவேவெநொந்துகொழுமலர்க்கணையின்வாடி
யுறைபொழுதுதயவெற்பின்மீதினனுதயஞ்செய்தான். (௨௧)

பின்பிருகடிகைசென்றபின்னராயிரம்பொன்றிங்க
ளொன்றினுக்குதவவாங்குங்கணிதர்கண்மூடிகிப்போந்து
மன்பெருமாட்டிக்கோரைவந்ததென்றியம்பவன்னா
ளன்புடன்மகளையேற்கவணிகவென்றறைந்தான்மன்னோ. (௨௨)

மற்றதுசெவியினேற்றமயிற்குழாமனையமாதர்
பொற்றொடிதனைவளைந்துபூந்துவர்விரையினானு
முற்றதண்டுயநீரினொளிமணிகழீஇயதொப்பச்
சிற்றிடைக்கிடுக்கணின்றிச்செம்மையினாட்டிப்பின்னும். (௨௩)

தீண்டிடினணிச்சமன்னத்தூவியின்றிறமேபோலுங்
காண்டிடினுவாவினோங்குங்கதிர்மதிக்கலையேமானு
மாண்டகுமுடையுடுத்துமதகரிமுகத்திற்சூழி
யாண்டதுவெனும்பொற்கச்சும்வரிமுலைக்கணிந்தார்மன்னோ. (௨௪)

முகமதிக்குடைந்திரிந்தமூசிருட்பிழம்புபின்பால்
வகையுறப்பிணித்ததேபோல்வளர்கருங்குழலுக்கேற்ற
வகினறும்புகையையூட்டிப்புலர்த்தியைங்காதநாறு
நிகரானுதலநானநேர்பெறநீவிப்பின்னும். (௨௫)

இன்புறமுடித்துமுல்லையிடையுறச்செருகுதோற்ற
மன்பெருநிசியிற்கீழ்பான்மதியெழக்கதிர்களூடு
சென்றிடுமமையத்தந்தநிசியுறுஞ்சிறப்பிற்றங்கே
யன்புடனணிந்தகோலமறைதலாந்தகைமைத்தன்றே. (௨௬)

அவடனையணிந்தகோலத்தொன்றுநாமறைதுமீங்கே
குவடிரண்டிடையிற்றெண்ணீரிழிதருங்கொள்கைத்தங்கண்
டிவளொளித்தரளமாலைதிண்குயத்திடையினூட
னவமணிப்பணிகண்மற்றுநங்கைமாருளத்தின்மின்னும். (௨௭)

உடுபதிகலையிதங்கேயோடுமென்றெண்ணிப்பின்னும்
விடுசுடர்மணிகளார்ந்தமேகலையதன்மேல்வீக்கி
வடுவறுபிறையோடன்னுள்வாணுதல்வேறுதோன்றக்
கடிகமழ்திலகமாங்கேகவின்பெறத்தீட்டினரால். (உஅ)

இன்னணமணிந்தமாதரெழின்முகமினிதுநோக்கிப்
பொன்னகரிழிந்துபோந்தபுணர்முலையிவளென்றெண்ணிக்
கன்னலின்குதலையாட்குக்கண்ணெச்சில்கழித்துமுன்னோர்
மன்னருங்குலத்துக்கேற்றமாயையைவணங்கினரால். (உகூ)

ஈங்கிதுநிகழவாங்கேயெதுகுலத்திறைவன்வைய
மோங்கியமறையோரும்பன்மிசைமணித்தசும்பினரம்
பாங்குறக்கொணர்ந்தமேலாம்பலநறும்புனிதநீரி
னுங்களிப்புடனேயாடியணிபலவணிந்துமாதோ. (௩0)

தவளமாமேகம்பொற்பூதரந்தன்னைவளைந்ததொப்பத்
திவளொளிவெண்பட்டாடைதிகழ்தரவுடுத்தேகாச
மவிர்மணியருவிநீரவ்வசலமீதிருந்திழிந்த
வுவமையைநிகர்த்துமேலேயொளிர்தரப்புனைந்தான்மன்னே. (௩க)

பல்லியமுழங்கப்பூமிதேவர்கண்மறைகள்பாடச்
சொல்லியவிதியின்வண்ணஞ்சுபமுறுவிரதமாதி
நல்லியற்கருமமெல்லாநனிபெறமுடித்துக்காசி
செல்லியாத்திரையுஞ்செய்துமணப்பந்தர்செறியச்சென்றான். (௩உ)

வேறு.

இவ்வாறிவன்காவணத்திற்கெழுந்தங்கெழின்மேடையிற்
றெவ்வாறடன்மன்னர்முதலாயவந்தோர்திரள்சூழ்ந்திட
வொவ்வாதநகையோடுமொளிர்கின்றபோழ்தங்குயர்ந்தோர்சொலச்
செவ்வாய்ப்பசுந்தோகையளவில்சிறப்போடுசெல்கின்றனள். (௩௩)

வய்திின்முதிர்ந்தோரும்வகையிற்சிறந்தோரும்வடிவாட்கரப்
புயலன்னபலகஞ்சுகத்தோருமாமள்ளர்புடைசூழ்வரக்
கயலன்னவிழிமாதர்விளையாடுபந்தின்கழற்காய்முதல்
வியமன்னுபொருளோடுமயன்மன்னவெகுமேளவகைமோதவே. ()

நடையாலுடைந்தேகுமனம்வந்துதன்காலினரலும்மெனக்
குடையாதவெண்முத்தரிக்கிண்கிணித்தண்டைகுரல்செய்திட
வுடையாமதன்மீதுதுடியொத்தவிடைநோவவொருபூங்கொடி
கிடையாதநடைகற்பதெனவந்துகிளர்மண்டபம்புக்கனள். (௩௫)

மணிமேடைமீதேறிமன்னன்வலத்தேயிருந்தன்னவ
னணையாருமார்வுற்றிடுங்காமருருவத்தையங்கைம்மலர்க்
கணியானகடகத்துமணிநீழலிற்கண்டகம்பூத்தனள்
கணையன்னவிழியாளையவனுங்கணிற்கண்டுகளிதூங்கியே. (௩௬)

ஒருவல்லிதிருநீலமரவிந்தமொளிவிஞ்சுசெங்காந்தளு
மருவொன்றரக்கெங்குமிகவீசுகுமுதத்துமலரன்றியும்
பொருவொன்றுமில்லாதகுமிழோடுமிவையாவும்பூத்தேயெனக்
கருகொன்றுமெனிலிந்தவடைதற்கரும்பேறுமார்காண்பரே. (௩௭)

என்றம்மலர்க்கோதையெழில்வாரியிடைமூழ்கியுடனேயவன்
குன்றின்மணிக்கண்முகத்தேறிநெஞ்சங்குளிர்ந்தார்ந்தனன்
பின்றிம்மணத்திற்குறுங்காலமிதுவென்றுபெரியோர்சொலத்
துன்றும்பறைப்பூகமுலகெங்குமோங்கத்துவைத்திட்டவே. (௩௮)

அக்காலையரசிக்கேயருகானபங்காளியாமோர்வளன்
மிக்கானகளியின்விளங்குற்றதேவாசம்மணியென்றிடு
மொக்காதமயிறன்னைநீரோடுமெதுராயனுறவேயளித்
தெக்காலுமிருவீருமிகவாதுவாழ்கென்றிசைத்திட்டனன். (௩௯)

களிறொன்றுதன்கைத்தலத்திற்பிடிப்பொற்கரந்தன்னையின்
பளியோடுதழுவும்மெனக்காளைதன்கையினவள்பூங்கரங்
களியிற்பிடித்தம்மிமிதிசெய்துவலம்வந்துகனலங்கியை
மிளிர்வுற்றமுனிபன்னிமீன்விண்ணினோக்கென்றுகைகாட்டினான். ( )

வேறு.

மற்றுமணத்திற்குரியயாவுமறைவழியே
முற்றமுடித்ததற்பின்முற்றிழையின்றாயினியான்
பொற்றொடிக்குச்செய்சிறப்பீங்கென்னோபுதுமையினே
யுற்றபொழிலூர்நிதிகளெல்லாமிவட்கென்றாள். (௪௧)

என்றுமவட்கிவ்வாறெல்லாமளித்துப்பின்
மன்றலதற்கெழுந்தமறையோர்முதலானோ
ரொன்றுமொன்றுமெனமகிழவொளிமணிபொன்னுடைகளு
மன்றளித்ததித்துணையென்றுருணர்தற்கானவரே. (௪௨)

அந்நகரிலன்றளவாயாறுமதியெல்லோரு
மன்னனரண்மனையின்மகிழ்வாயருந்துவதும்
பன்னரியபாடல்களுமாடல்களும்பார்ப்பதுமா
யின்னவிதந்துன்னரியவின்பொழுதுபோக்கினரே. (௪௩)

விவாகச்சருக்கம் முற்றிற்று.

ஆக, செய்யுள் - ௪௩.

நான்காவது

முடிபுனைந்த சருக்கம்.

சின்னாட்கழிந்ததற்பின்சீரரையன்செல்வியுமோர்
பொன்னாருமோரைதனிற்புகழ்சேரெதுராயன்
றன்னேரிலாமருகன்றனையரியாதனத்திருத்தி
மின்னார்மணிமுடியைமேன்மையுடனேமுடித்தே. (க)

கண்மணிநேர்பெண்மணிபோற்சுனகவரைப்புயத்தென்
மண்முழுதுநீயாள்கவென்றுமகிழ்ந்துரைத்தாங்
கொண்மணிகளொன்பதுநன்கொளிருங்கணையாழி
வண்மையுடனவன்விரலில்வாழ்த்திப்புகழ்ந்தணிந்தாள். (உ)

பார்ப்பனியாஞ்சுமங்கலிகள்பலர்சோபனம்பாடக்
கார்க்குமுறலென்னவுமங்களவாத்தியங்கறங்க
வார்க்குமனஞ்சலிக்குமெழிலங்கனைகளுந்நடிக்க
வார்க்குங்கழலவனிவ்வாறுமகுடம்புனைந்தான். (ங)

அப்போதறிவுவயதான்முதிர்ந்தோரையவுன்றன்
றப்பேரிதழ்மயிலின்றெய்யின்முலைதோய்ந்தே
கைப்பாரயன்மாதர்கண்வலையிற்பட்டுழலா
தொப்போதவாமையினையைந்தடங்கியொழுகுகவே. (ச)

என்றுமிகவாழ்த்தவெல்லோருந்தாங்களிக்க
நன்றுபரிசளித்தந்நல்விழவைமுற்றுவித்துத்
துன்றுமமைச்சருடன்றொல்புவியைத்தான்புரந்தே
மன்றன்மலர்க்கோதையொடுமணந்துகளித்திருந்தான். (ரு)

ஈங்கொழுகுமெல்லையவன்மாமியவடாயாதி
தீங்குடையனாமொருவன்றிண்சாந்தராயனென்பா
னாங்கவனைத்தானகற்றியந்நகருமிளையோர்க்குப்
பாங்குபெறவமைத்துப்பட்டமுறக்கட்டினனால். (சு)

வேறு.

பெருமகனிவ்வணம்பெருகுகாலையி
லொருதினமவனுயிர்க்குரியதேவியு
மருகணைந்தம்மலர்க்கரங்கள்கூப்பியே
திருநகையொளியெழத்தெரிக்கின்றாளரோ. (எ)

ஆவிபோலெனதுயரரியநாதரே
தேவியின்கருணையினுமதுதிண்புய
மேவுறுமரியபேறெனக்குமேயதா
னீவிரிங்கொருநலநிகழ்த்தற்பாலதாம். (அ)

நீலியின்றிருவுளமுகக்குநேர்மையாம்
வேலைசூழ்புவியினும்விறற்குந்தக்கதா
மேலுறுமுதவிகுன்றாமைக்கேற்றதாம்
வாலிதினதையிவண்வழங்கக்கேண்மினே. (கூ)

யாமிருவருமணந்ததற்பின்விஞ்சியே
யேமுறவியற்றியவிலிங்கிதன்னொடு
மாமறையாளருமனங்களித்திடற்
காமவைபுரிவதேயதுமற்றென்னெனின். (க0)

நங்குலத்துதித்தகனானிலம்புரந்
திங்கொளிரிறையவரிலிங்கிராமமாம்
பொங்குமன்னுடையரென்பதனைப்பூண்டுயர்
தங்கொடிதனிலரக்காடைதாங்கியே. (கக)

ஒழுகவும்வேதியரிருவரொண்குலத்
தெழுதருமவர்களேயெண்போராகவு
மெழுதருமெழிலினீரருள்கவென்னவம்
மழவிடையணையவன்மகிழ்ந்துசாற்றுவான். (கஉ)

பாலடுகிளிமொழிபவளத்தாரிதழ்
வேலடுவிழிமயில்வென்றசாயலு
மேலுளவணங்கனும்மிழற்றுநின்மொழி
யாலவையாவையுமளித்தேனென்றனன். (கங)

பாவையுங்காளையும்பாலுநீருமொத்
தாவியொன்றுடலிரண்டாகுமென்னவாங்
கோவறுமுவப்புடனுறையும்போழ்தினிற்
பூவுலகளித்திடப்புதல்வரின்றியே. (௧௪)

நொந்தவரிருவருநோன்பினையையச்
சிந்தையின்மதர்வுறச்செய்ததாலவள்
சுந்தரமுடனிருசுதர்கடோன்றிடத்
தந்தனளொருவரந்தையியினென்பவே. (௧௫)

அத்திருவரத்திரண்டவனிபாலரை
முத்துயிர்த்தொளிர்தருமுரலுநந்தெனப்
பெற்றெடுத்தனள்வயப்பெருமகன்யனத்
தொத்துநன்கொழுகுமத்தோகையாளரோ. (௧௬)

நாமமுமவர்தமக்கறையுநானிலஞ்
சாமராசுடையரென்றவர்கடம்முறைற்
காமிரிபெட்டவென்றதற்குமுன்னவ
ரேமுறச்செழித்தனர்களபமென்னவே. (௧௭)

பின்னெதுராயனும்பிணையனுளும்போய்
மின்மணித்தொட்டிலப்பதுமைமேவிய
சன்னிதிக்கெதிர்வளர்சண்பகந்தனின்
மன்னுறத்தூக்கினர்வணங்கிமாயையை. (௧௮)

மற்றுமேகஞ்சனங்கூடமோகக
ருற்றவண்கங்கையும்பிறையுமோங்கிய
கற்றைவார்சடையனைத்தொழுதகன்றுபோ
யெற்றெருடுமெதுவரைமுகடிவர்ந்தனர். (௧௯)

அடைந்தவண்டாமரையடவிபூத்துமின்
மிடைந்தொருகருமுகின்மிளிர்வதென்னமார்
பிடந்திகழ்திருவொடுமிலகுநாரணன்
றடம்பெருஞ்சினகரந்தனுட்புக்கனர். (௨௦)

அளவிடற்கரியபேரண்டகோடிகண்
முளைதருமூலதாமரையினுந்தியின்
றளபமாலிணையடிதொழுதுபோற்றியவ்
வளநகர்வளைவதோரெயிலிழைத்தனர். (௨௧)

கதிரவனுழைவதோர்கடிகொள்வாயினன்
கதனதுநாற்புறத்தமைத்துமெங்கணு
மிதமறுஞ்சீர்பெறுமேலைக்கோட்டையா
மிதுவெனவொருபெயரிசைத்துமீண்டனர். (௨௨)

ஆனிரைமறையறமடையவோங்கவுந்
தானொருகுடைநிழற்றரணியாண்டுபின்
பானியம்பலகழிந்தவனிதாங்கிடு
மானசைதணந்தனன்மன்னர்மன்னவன். (௨௩)

பெருகியமூப்பினிற்றளர்ந்துபின்றன
தருகுறும்புதல்வரிலரியமூத்தவன்
றிருமுகநோக்கியேதேவநாடினி
மருவிடவிழைந்தவென்மாற்றங்கோடியால். (௨௪)

பொன்னுலகளித்திடப்போவல்யானவண்
மன்னுலகிதனைநீமல்கக்காக்கென
மின்னகுமணிமுடிமிலைச்சியன்னவற்
கொன்னலர்க்கடந்தவனுறுதிகூறுவான். (௨௫)

புரவலனென்றிடிற்பொருவிலாதவெங்
கருவமேவிஞ்சிடுமதனிற்காரியம்
புரைபடுமாகையிற்பொருவுமேலுமில்
பரமனதிதுவெனட்பாவித்தன்னவன். (௨௬)

ஆணையின்வழிமுறையாற்றுவேமெனப்
பேணியமனத்தினிற்கமையும்பீதியு
நாணொடுபழிதனக்கமையநங்கையாங்
காணருங்கடுங்கடுகடித்தலின்றியே. (௨௭)

அஞ்சினையடக்கியோரஞ்சைநீக்கியே
யஞ்சையுமஞ்சையுமடையமன்னியீ
ரஞ்சவதாரனையகத்திலெண்ணியிவ்
வெஞ்சலிலவனியையளித்தியென்றரோ. (௨அ)

பற்பலவின்னமும்பகர்ந்துபாங்குளார்க்
கற்பினிலவரவர்க்கறைவயாவையும்
பொற்புறமொழிந்துடன்புனிதவோரையிற்
கற்பகப்பூம்பொழில்கலந்துதோன்றினன். (௨௯)

வேறு.

எதுராயன்பிறந்ததுவுஞ்சாலிசகமொன்றிரண்டொன்
பான்மூன்றிங்கே
யிதமாகமுடிபுனைந்ததொன்றுடன்மூன்றிரண்டிரண்டே
யென்பர்மற்று
முதமோடுபொன்னுலகின்முளைத்ததொன்றுமூன்றுடனே
நாற்பத்தாறென்
றிதையிங்கேயவன்சரிதங்கன்னடத்தில்வரைந்தவர்முன்
னெழுதினரால். (௩0)

முடிபுனைந்த சருக்கம் முற்றிற்று.

ஆக, செய்யுள் - ௨௨௩.

ஐந்தாவது

இராசவுடையார் விடமுண்ட சருக்கம்.

உலகெலாமுதரத்தொடுங்கியுமந்த
வுலகினிலொருகருப்பையினின்
றிலகிடவெழுந்துசகடிறவுதைத்து
மின்னுமித்தகையிறும்பூதாம்
பலதொழிலிழைத்துப்பண்ணவர்வதியு
மெதுவரைமுகடொளிர்தனையே
நலமுறவருச்சித்தவணெழுந்தருளு
நாரணனடிநமக்கரணே. (க)

அவ்வெதுராயன்முதன்மகன்புதல்வ
ஞதியாந்திம்மராசுடையன்
மௌவலங்தொடையானவன்சுதன்பெரிய
சாமராசுடையனென்மகிபன்
றெவ்வரைத்திருகுமவன்மகன்பெட்ட
சாமராசுடையனென்றிசைப்ப
திவ்வியபுதல்வனவன்றனக்கிரண்டாந்
திம்மராசுடையனென்றறைவார். (உ)

அவன்புரந்ததன்பினளித்தவன்போள
சாமராசுடையனென்றறிக
விவன்சுதனிராசவுடையனுமிவற்கு
வேங்கடாசலபதிக்கிழைத்த
தவிருறுவேண்டுகோளினைமறந்து
தாங்கரும்பிழையையுறலா
னவமதாயொருபேர்திம்மராசுடைய
னென்னவுநலம்பெறவிசைத்தார். (ங)

அவன்றனதடலாமொளியினிற்குறும்ப
ராம்பலவிருட்பிழம்பகற்றி
யவனியிற்குடியுங்குடியினலரசு
மரசினுற்றவமதின்மழையுந்
தவிருதலின்றிச்சொரிந்திடுமதனு
லின்பமுந்தழைக்குமென்றுணர்ந்து
குவலயமுழுதுஞ்சீர்த்தியுமறமுங்
குலவிடப்பொதுவறப்புரந்தான். (௪)

ஆங்கொருதினத்தந்நஞ்சனங்கூடா
ரரன்றிருத்தேர்விழவதற்குப்
பாங்குறுமரசவீறுடனேகுந்
தடத்திலோர்பழையபங்காளி
யாங்கொடுந்தொழில்வீராசனென்றெருவன்
றனக்குமுன்னளித்ததோரூரிற்
றுங்கருமேளதாளமுந்தழங்கத்
தன்கிளரூர்தியொன்றிவர்ந்தே. (௫)

அகந்தையின்விஞ்சியார்ப்புடனிறைவ
னம்பகத்தெதிர்வருமமையத்
துகுங்கனற்பொறியைச்சுழன்றிடுவிழியி
னுறுக்கியபதாகினித்தலைவர்
மிகுந்தெழுந்தவன்றன்பரிசனங்கலங்கி
யிரிந்திடமிடுக்குடன்புடைத்து
நகுந்திருவூர்தியாதியைப்பறித்து
நரபதிமுகத்தெதிர்வைத்தார். (௬)

அப்புறமவன்றன்குதியடிநிதம்பத்
தடிபடமுடுகியேயோடி
யொப்பறும்வேந்தனுடன்செருப்புரியு
முரனிலாதுணங்கியேகசட்டுக்
குப்பையினுடனேயாய்ந்திறைமகனே
விரகினிற்கோறிடத்துணிந்து
மைப்புயலுறங்கும்பொழில்பலசூழ்ந்த
மகிசூரபுரிநிசியணைந்தான். (௭)

அணைந்துமுத்தொழிலினளித்திடுந்தொழிலே
யாமெனக்கொண்டலர்மகளா
லெணுந்திறமெவர்க்குமின்றியவுலகத்
தொகையினையியைபுறத்தாங்கு
மணந்திகழ்புன்னைத்தருநிழலோங்கு
மாழையஞ்சினகரத்தொளிரும்
வணங்கருந்திருநாரணன்பதமருச்சிப்
பவன்றனைவிளித்திவைவழங்கும். (அ)

என்னகாண்சீனிவாசையனேநீ
யெத்தனைநாளிவண்பூசை
பண்ணினுமுனக்கோர்பயன்சிறிதறியேன்
பாழ்வயிறிதனையேநிறைக்க
நென்னவொன்றிருந்தின்றதையெடுத்தயிலு
நிலைமையுமின்றியேதவிப்பாய்
சின்னதோர்பில்லைச்சோற்றினுந்தெங்கின்
பிளப்பினுஞ்செல்வமும்வருமோ. (கூ)

பணமதுபந்திகுலமதுகுப்பை
யென்றிடும்பழமொழியுளதான்
மணிலுதித்தவர்களெத்தொழிலேனு
மறைந்தெனுந்திறந்தெனுமியற்றிக்
கணமுறப்பொருளைத்தொகுத்திடினவரே
கனமிகப்பெருகுவரதனு
லெணலொருதினையுமின்றியானுரைப்ப
தேன்றுநீயிதையிழைத்திடுவாய். (கo)

பிறிதொருதீங்குமுன்னையானிழைக்கப்
பேசுவதின்றுகேளிவ்வூர்
வறுமையினுழலப்புரந்திடுமரசன்
வன்கணனென்பதுந்தெரிவாய்
கறைகெழுமவனிங்கடைபொழுதவன்கை
யிடங்கடுக்கலந்ததீர்த்தத்தை
யுறுமனத்துடனீயளித்தொழியுனது
வறுமையிங்கொழிப்பலியானென்றான். (கக)

என்றவனுரைத்தசுடுசொலைக்கேளா
வினைவுறுமிருபிறப்பாள
னன்றுநீயிசைத்தாயெறும்பையும்வதைத்த
னுவினுனவிற்றலுநரகி
னின்றொருகாலுமீண்டிடாவகத்திற்
கிடமெனநிகழ்த்துவரான்றோர்
குன்றெனவொளிருமிறைவரைக்கோறல்
கொலைஞருங்களவினிற்குழியார். (௧௨)

வேறு.

மணியாதனத்தினிடையேதிகழ்ந்துமண்ணாளுநீதிநிருபன்
பணியாயிரம்பொன்முடிமீதுறைந்தபாரிற்கிடந்தவுயிர்கட்
கிணையாதுமெங்குமின்றித்திகழ்ந்தவொருமூலமென்பரிதைநீ
கணியாதுசற்றுமெனையேயுரைப்பதனியாயமென்றுகழறி. (௧௩)

மற்றுங்குருக்களவனிக்குள்வாழுமனிதர்க்குளைவரவரிற்
கொற்றங்கிடக்குமிறையோனுமோரின்குருவென்பரன்றியவன்கண்
மற்றங்குதிண்டோண்மணிவண்ணன்பங்குமுண்டென்றமன்னுபெரியோர்
சொற்றங்குமெங்குமதனாலுமீதுநலமற்றதென்றுசொலினான். (௧௪)

அக்காலையந்தவயலானகைத்தெனையேயிதென்னபுதுமை
யெக்காலுமெந்தமேலோர்களுக்குமியல்பாயவென்றனுரைகேண்
மிக்காகுநான்கினிடையொன்றருத்தமேவச்சிறந்தபிறவுந்
தொக்காவவன்கணுடனாகுமென்பதொல்லோர்வலிந்துமவையே. ()

அயலாரெடுக்குமலருக்கொடுங்குமச்சத்தொடன்றியகமா
மயலாகமற்றுமற்றுங்கொலையமதியாதெவர்க்குநனியே
யியலாததீயகண்ணோட்டமாகுமிவையாவுமுள்ளகயவ
னுயலாகுமிக்கவுயர்வாமருத்தமொருகாலுமுற்றுமகிழான். (௧௬)

இனிபொன்றுமெண்ணுநினைவின்றிமிக்கதனமொன்றுகென்றமிசையா
முனியின்கணங்களெனுமெண்டியங்கிமோகத்தினெங்குமுழல
மினுநன்கொராயிரம்பொன்னுமந்தமிளிர்வேதமோதுமறையோன்
முனமங்கவன்றன்மனநன்குகூருமுதமாரநின்றுசொரிந்தான். (௧௭)

வேறு.

கற்புடையமங்கையர்கருத்தையுங்கலக்கு
மொப்பரியநண்பரையுமூறுபகையாக்கு
மெய்ப்பெரியரேனுமவர்நெறிபிறழவிழைக்கு
மப்பெரியபொற்குவையவ்வந்தணனுங்கண்டான். (௧௮)

கண்டவுடன்றன்மனங்கலங்கிவிழைவேறக்
கொண்டதையெடுத்தருகொலைக்கியையவந்தத்
துண்டனுமகன்றனைதன்பிணிவன்றோன்ற
லண்டுமமைபந்தனைநயந்தனனிருந்தான். (௧௯)

அளித்தவரையழிக்குமனத்தருச்சகனுமாங்கே
பளிக்கிடமதானவதைபண்ணவருநஞ்சைத்
தளிப்புயனிறத்தரிபதத்தமுததீர்த்தத்
தொளித்திறைவனூற்றிடுவதுன்னியுறைபோழ்தில். (௨௦)

வண்டுநறையுண்டுமிழும்வாசமலராரந்
தண்டரளமாலையொடுதான்றுயல்வருந்தோண்
மண்டலமனன்றிருமணாளனடியமுதங்
கொண்டிடவேயோர்தினமக்கோயிலிடைபுக்கான். (௨௧)

புக்கரியநாரணன்றன்பொற்பதம்வணங்கி
யக்கருமுகிற்பதவரும்புனலருந்த
நிற்கையிலருச்சகன்விடங்கலந்தநீரக்
கைக்கிடையளித்துடலங்கம்பமுறநின்றான். (௨௨)

கண்டதுபுவிக்கிறைகருத்தினிலயிர்த்து
விண்டுபுனலங்கையின்விழாதமரவேந்திக்
கொண்டுமறையோயுனதுடல்குலைகுலைக்க
வுண்டுமறையின்றதனையுண்மையுரையென்றான். (௨௩)

என்றிறைவினவுகையினின்றுமவனுட்கி
யொன்றுமுரையாமலுறுசூறையுளலைந்து
நின்றுழலிளங்கதலிநேருமவனிலையைக்
குன்றுபுயமன்னவன்குறித்திவையுரைப்பான். (௨௪)

அர்ச்சகனே நீயொருபெரும்பழியலர்த்து
மெச்செயலோவொன்றிவணிழைத்தனையிழைத்து
மச்சமுறலின்றியதைவாய்மையினறைந்தா
னிச்சயமதாகவுனைநீக்கிடுவலென்றான். (உரு)

என்னவவனென்னரசேகாரகள்ளிவிர
னின்னேவதைமாடவுநெருப்பெனும்விடத்தைப்
பன்னரியதீர்த்தமுடன்பருகவளியென்றே
யென்னதுமனங்குலையவீங்குவலிசெய்தான். (உசு)

ஆனதினெனன்றபவறிவான்மதிமயங்கிக்
கானமர்திருத்துளவன்கான்மலர்ப்பயத்தோ
டீனமுறுநஞ்சுனதெழிற்கரத்தினீந்தேன்
மானவனேயென்பிழைமனத்தடையலென்றான். (உஎ)

அந்தமொழிகேட்டிறைவனம்முறுவல்செய்தே
யிந்தவமுதந்தனைநீயென்னநினைந்தென்கைத்
தந்ததெனவந்தணன்றராபதியேதெய்வத்
தந்தமுறுந்தீர்த்தமென்றேதந்ததெனவறைந்தான். (உஅ)

வேறு.

தயையுருவாயெழுந்தருளுந்தாமரையினிலக்குமிவாழ்
தலமாய்மின்னும்
புயமுடையதிருநாராயணன்பொருவிற்பொற்பதத்தின்
றீர்த்தமென்றே
யியல்புடனளித்தேதெனன்றிவன்புகன்றவாறேயீ
தாகவென்று
நியமமுடனதைநிருபனின்றவர்களதிசயிக்கப்
பருகினனல். (உகூ)

விண்டுபதிவாழ்சடையானுண்டாலமுன்றிகழ்ந்த
விதமேயீங்குந்
தண்டுளவன்றாளமுதமுண்டதராபதியுமவன்
முப்பேரோதிக்
கொண்டருந்தவவ்விறலிற்கொடியவிடமங்கையினின்
மறுவாய்நிற்க
விண்டுபுனலதுவேயுட்புகமாந்திவிம்மிதமாய்
விளங்கினனே. (௩0)

பூசகனுக்கபயமுனந்தானளித்தபடியேயப்
பொறையார்வேந்தன்
காசொளிருங்கன்னம்பாடித்தலத்திற்கோபால
கிருட்டினன்ருண்
மாசொழியுமனத்துடனேயினியேனும்போயங்கே
மதிகெடாது
பாசமறும்பூசனைநீபண்ணுகவென்றவன்றன்னைப்
பரிந்துபோக்கி. (௩க)

ஆங்குடனேயடற்படையைவிடுத்தந்தவரட்டனைநன்
கொடுங்கவீக்கித்
தீங்குசெவிநாசியுடன்கொய்தவன்றன்றிரண்டபொரு
ளனைத்துங்கொண்டு
பாங்குபெறுமுக்கணிக்குத்தந்தவனூர்சூழ்ந்தவரண்
டகர்த்துப்பாழ்செய்
தாங்கதனைவாங்ககன்றவாழ்கிடங்குந்திட்டையுறத்
தூர்த்திட்டானல். (௩உ)

அக்குரிசிலானுகையின்மற்றென்ருரற்புதநா
மறைதுமீங்கே
யக்கிசிறிதுந்தெரியாதோர்மறையோன்வேங்கடத்தி
னலர்மேன்மங்கைக்
கொக்ககணவன்பதத்தைக்கண்வருவானேவாது
மனனஞ்செய்து
மிக்கபகல்கழிந்திடவும்பயனின்றிமெலிவெய்தி
யொழுகுநாள்வாய். (௩௩)

எம்பெருமான்றிருமுருகிற்றிருத்தேருமறுதினமென்
றியம்பக்கேட்டவ்
வும்பர்பிரானூர்ந்தருளுந்திகிரியிடையொளிரழகை
யுவந்துகாண
வம்பகமெற்களித்திலனேலென்னுயிரைவைகறையி
லவற்கேயீந்து
கம்பலையொன்றின்றியவன்வைகுந்தங்காண்பலெனத்
துணிந்தானன்றே. (௩ச)

அத்தகையவகத்துறுதியுடனன்றுகண்படைகொண்
டவன்பின்வைக
னித்தமரியரியென்றேயெழுவதுபோலெழுந்தொருதன்
னேத்திரத்தா
லெத்தகையபொருள்களையுந்தெற்றெனவேகண்டுவந்தங்
கிறும்பூதெய்திப்
பத்தர்தமையளிக்குமந்தப்பரம்பொருளைப்பழிச்சியறத்
துள்ளினனால். (௯௫)

பைந்தருவினறுமலரினறவுயிர்த்துப்பருஞ்சினைக
டழைக்கவோங்கு
மந்தமுறும்வேங்கடத்தின்கொடுமுடியினவ்வுலகு
மிதுவுங்காணச்
செந்தபனனெனவிலகுஞ்செம்மணிப்பொன்னிரதத்தி
னிடையேசேவை
தந்தொளிரும்வேங்கடவன்றன்னெழிலையம்மறையோன்
றரிசித்தாங்கே. (௯௬)

ஆரணனேநாரணனேயன்றிடங்கர்வலிந்தீர்க்க
வாற்றாதேங்கி
வாரணமன்னன்றுதிமூலமெனவாய்விடவே
வானோரெல்லாங்
காரணநாமன்றென்றுகைவிடுத்தபின்னெழுந்தக்
கரியைக்காத்த
வேரணவியின்றனையும்புரந்தளித்தாயெனவுருகி
யவசமானான். (௯௭)

பரவசமாயவ்விதமேபரமபதநாதன்றன்
றிருத்தேரூரும்
விரியுமொளிவனப்பொருதன்விழியதனாற்பருகுவபோல்
விழைந்துகண்டு
வருகதிரோன்வாருணவாரிதியடைந்தபின்னந்த
நிசியுமாய
னிருபதமற்றொருவிழியுமீந்தருள்கவெனநினைந்தே
துயிலுமெல்லை. (௯௮)

அவன்கனவிலரவணையானெழுந்தருளியந்தணனே
    நினக்குமற்றோர்
திவளொளிசேர்கண்வேண்டினீங்கிருந்துபோந்துதிரு
    மைசூரெய்தி
யவணவனிநெறிமுறையினீண்டளிக்குமெழிற்கருணை
    யஞ்சமான
புவனபதிதனைக்கேட்கிலளிக்குமெனப்புகன்றருளிப்
    போகினானே. (௩௯)

பூசுரனுந்துயிலுணர்ந்துபூமகணாயகன்சனவிற்
    புகன்றவின்ப
வாசகமஞ்செவியுற்றுவைகறையினுவப்புடனப்
    பதியைநீத்தே
யோசனைகள்பலகடந்துசிலதினத்திலோங்குமெது
    கிரியைச்சார்ந்து
பாசமறுநாரணனைப்பணிந்துடனேபல்வளமார்
    மைசூர்புக்கான். (௪௦)

போந்தங்கேமீமிசையேபணியாயவெண்சுதையாற்
    பூசப்பெற்றுக்
காந்தையர்களவைமீதேசஞ்சலைபோற்கவின்கொள்பல
    மாடமோங்கும்
பூந்துணர்கடேன்சொரியும்பொழில்சூழப்புரிவளங்கண்
    டானந்தித்தவ்
வேந்தனுழைச்சென்றுதிருவேங்கடத்தான்றிருவாக்கும்
    விளம்பினானால். (௪௧)

கேட்டதனைநிலவெறிக்குந்தரளவடங்கிடந்துதுயல்
    வருதோட்காளை
நாட்டமகத்தோர்களுக்குநாடரியநாரணனார்
    செயனாங்காண
மாட்டுவமோவென்றுதனக்குண்ணினைந்துமறையோய்நீ
    நாளையின்னல்
வாட்டிடுமெம்மிலக்குமிநாரணன்றிகழுஞ்சினகரத்தே
    வருகவென்றான். (௪௨)

என்றிசைத்தவிறையவனுமறுதிவசத்தெம்பெருமா
னிலயக்கேகிக்
குன்றெடுத்தவத்திருமால்கோகனகத்தாளிணையை
வணங்குங்காலைச்
சென்றடுத்தவேதியனையிருகண்ணிற்பெருமாளைத்
தெரிசியென்று
மின்றொடுத்தமணிமாலைமிளிருமுரமீளியவன்
மிழற்றுமெல்லை. (சங)

மாமறையோனிருகண்ணுமங்ஙனமேமலரவிழித்
தவுணரீட்ட
நாமமுறுமைம்படையுநனிதுலங்கவிருபுறமு
நாய்ச்சிமார்கள்
காமர்மிகும்பொற்கொடிபோற்கலந்தொளிரக்காவலனைக்
கடைக்கணித்தே
யேமமுறும்புன்னகைசெய்வதுவெனவேயிலகிடுமப்
பரத்தைக்கண்டான். (சச)

கண்டுகளிமீதூரவணங்கியபின்காவலனைப்
புகழ்ந்துவாழ்த்திக்
கொண்டவன்பால்விடைபரிசக்கொடிநகரைத்தணந்தெழுந்து
குரங்குதன்மேல்
வண்டறையவளர்தருவினின்றந்தவைந்தருவின்
சினையில்வாவு
மண்டியவரருந்துயரையறுக்குமுயர்வேங்கடமா
மலைமீதேறி. (சரு)

அதன்மிசையேபெரும்பூதூரவன்புனைந்தவாழிவனை
யுடனேமின்னு
மதுசூதன்றனையிரண்டுவிழிகளினுந்தரிசித்து
மகிழவிந்த
விதமெனவென்றங்குள்ளார்வினவவினவையாவும்
விளம்பும்வேலை
மதுகைமிகிராசவுடையான்மகிமைதனைவியந்து
மனம்பூரித்தார். (சசு)

இராசவுடையார் விடமுண்ட சருக்கம் முற்றிற்று.

ஆக, செய்யுள் - உசுக.

ஆறாவது

அரட்டனை வென்ற சருக்கம்.

மற்றோரமயத்தேயெழின்மதுராபுரியாளுங்
கொற்றம்பெறுமொருவேங்கடபதிநாயகன்குறுகான்
வெற்றங்கொளமிகுசீரங்கபட்டணத்தின்வரவை
யுற்றேசெவியிரங்கராயனுணர்ந்தேயுளந்துணிந்தே. (௧)

ஆரும்விலைகூறுமணியணியேமுதலாய
நேரும்பொருண்மைசூரிறைகோர்ந்திப்பொழுதெனக்குக்
கூறும்படைத்துணையாகெனவிடுத்தானந்தக்குரிசி
லேறுங்குடிகொண்டோனவையெல்லாமீளமறுத்தான். (௨)

கண்டேரங்கராயன்மனங்கறுத்தேதலைக்காடு
வண்டார்பொழில்வளர்மாலிங்கிமுதலாம்பதிவதியும்
மிண்டாளர்கள்சிலரைப்பொரமைசூர்மிசைவிடுக்க
வொண்டாரவருக்கத்துடன்வந்தோரிடங்குவிந்தார். (௩)

கேட்டேயதிராசவுடையானுங்கிளர்ந்தெழுந்து
வாட்டானையினுடன்போயவருயிராகியவளியைத்
தீட்டாதொளிர்தன்னேதிகளெனுநாகங்கள்சீறி
வாட்டாவலிந்தருந்தப்பெருவயமாவெனமலைந்தே. (௪)

சேடித்தவர்திசைநான்கினுஞ்சிதருண்டிரிந்தொழியப்
பாடிப்பொருளவர்கட்குளபரிமாமுதல்பலவு
மாடற்றிருவுடன்கைக்கொடுமீண்டேபுயலமரு
நாடற்கருங்கனகத்திருநகரந்தனதடைந்தான். (௫)

பெரும்பாளையகாரத்திரள்பேலூர்முதலாய
கரும்பாடியிலுள்ளோர்பலர்மற்றோர்தினங்கலந்தே
யிரும்பாரணிகத்தோடேகிக்குணிகல்லிடமீண்டிச்
சுரும்பார்தொடையரங்கராயனுடனேபொரத்துணிந்தார். (௬)

பெருமானதுதெரிந்தேயிவரரங்கந்தனைப்பிடித்தால்
வருமாபுரையொருகானமக்கெனவேமனம்வலியா
விருமாபடைக்கடல்சூழ்வரநமனுந்திடுக்கிடவே
யொருமாகரியூர்ந்தேகியவ்வொன்னார்களைவளைத்தான். (எ)

வளைந்தோர்கொடுவரிபேரயத்திரளுண்ணுழைந்ததுபோற்
பிளந்தன்னவர்நமன்றன்னகர்பிணைந்தங்குறவாட்டித்
தளந்தன்னிடையொருதெவ்வனுந்தவிராதவன்பொருத
களந்தன்கதிநினைந்தென்னெனக்கழறத்தகுமம்மா. (அ)

கரையற்றிழிகருந்தாரையினிடையேதுணிந்தலையும்
வரையற்றிடுமுகமீசைகள்வானம்பெயவரைநின்
றிரைவுற்றிழிசெம்மண்புனலிடையேபலபிரசம்
விரைவுற்றவண்மிதந்தோடுவதெனவேவிளங்கியவே. (கூ)

சினம்விஞ்சியசிலவீரர்கள்பெருமீசைகடிக்க
முனைவிஞ்சியகைவாண்மிசைமுழித்தேமோதவெடுத்தே
மனமஞ்சுறவடிவாய்மடித்தழிந்தங்குளமாண்பைத்
தினவந்திடும்பேய்கள்கண்டுதிடுக்கிட்டவண்டிகைக்கும். (க0)

சிரமற்றிடுகெவந்தம்பலசெந்நீரிடைநடிக்க
வுரமுற்றிடுசிலபேய்முரசொடுதோளமுமுழக்கத்
தரமற்றிடுமிறைவன்புகழ்தனையேசிலவலகை
பரமக்களியுடனேயிசைபாடுங்கலந்தவனே. (கக)

பாசஞ்சிலமார்பிற்குடர்படியப்புனைந்தடியேம்
பேசும்மறையோரென்றிடுஞ்சிலவெண்குடைபிடித்தே
தேசம்புரப்பவனென்றிடுஞ்சிலமின்பணியுடனே
தூசுங்கொடியாம்வாணிபம்புரிவோரென்றுதுள்ளும். (கஉ)

அம்மாபொருங்களந்தன்னிடையடையார்கரிபரிமின்
செம்மாமணியணியேமுதற்செல்வங்களினுடனே
கைம்மாமலைமிசையேபடைக்கடல்சூழ்வரமன்னன்
செம்மாந்துளமீண்டேகியஞ்செறிதன்னகர்சேர்ந்தான். (கங)

வேறு.

பின்பொருபகலரங்கராயனுக்கிணைந்தபெற்றி
யன்புறுகிளைஞனைக்கொந்திவின்மார்ந்துகாப்போன்
வெங்கடபதிராயன்றன்வேண்டியதளவாயென்பான்
வன்புடனரங்கநோக்கிவந்திடும்வழியினம்மா. (௧௪)

நரசிங்கபுரத்தின்மீதுநடக்கையினவ்வூர்காக்கும்
பரசனம்வருத்துமாங்கோர்பாளையகாரனன்னோன்
வரைசெறிபுயங்கள்வீக்கிவலிந்துடன்கொண்டுபோகப்
பரிசனமதனையோடிப்பகர்ந்தனவரங்கந்தன்னில். (௧௫)

தீங்கதுசெவியுட்சேர்த்தவரங்கராயனுநாமந்த
வீங்கியவினையன்றன்னைவென்றிடேமெனவாராய்ந்து
நீங்கருவிழைவுந்தன்கணேரலர்படுக்கும்பீடு
மோங்கியபகடிராசவுடையனுக்கிதனைச்சொன்னான். (௧௬)

ஆங்கதுகேட்டவள்ளலுடைதளர்ந்தளவின்முந்தித்
தாங்கருங்கரங்களென்னத்தடுப்பருந்தளங்கள்சூழ
வீங்கியபுயத்தில்வில்லுமாவமும்விளங்கவீக்கி
யோங்கியகொடித்திண்டேரிலிவர்ந்தனன்மடங்கலொப்பான்.

பொற்றசும்பரியகோடும்பொங்கியபதாகைக்காடுஞ்
சுற்றிலும்பிணித்தபாய்மாவாதியின்மிருகத்தோடுங்
கொற்றவனெனுமோர்கோளாரரியையுமுடையவந்தப்
பொற்றடந்திகிரிவெற்புவிசைத்ததுபுதுமையன்றே. (௧௮)

குரம்படிதொடுதலில்லாக்குரகதவிரதம்போந்தங்
குரம்படுங்குறுகான்சேனையொருங்கிறைவளைக்குமுன்ன
முரண்படுமவன்வின்னாணினோதைமேலுலகமுளப்
பரம்பிடுககணமெங்கும்பகழியின்மறைந்ததம்மா. (௧௯)

கலக்கியவதனாலந்தக்கருதலான்படைகள்சீறும்
விலக்கருவிடத்தநாகமுயிர்த்திடவெருவியோடு
மெலிக்குலமென்னவேங்கித்திசைதொறுமிரியல்போக
மலைக்கிணையெனமின்றோளான்மலைபவரெதிர்காண்கில்லான். ()

TAMIL NADU ARCHIVES LIBRARY MADRAS No. 108797
V 213

பாளையகாரனெய்த்தபலவரைவெருட்டிச்சேர்த்த
மாளரும்பொருள்களெல்லாமன்னவன்றிரட்டிக்கொண்டக்
காளையாத்தளவாய்தன்னைமீட்டரங்கத்திற்போக்கி
மீளவுந்தனதுகோயின்மேம்படவணுகினனல். (உக)

கண்டதையரங்கராயன்கரையறுபரமானந்தங்
கொண்டுறுமளவிலானைக்கொந்தியான்செவியுற்றங்கே
யுண்டனன்மதுவையென்னவுளங்களித்துடையானோடுந்
தண்டலிலரியகேண்மைதான்கொள்ளத்துணிந்துதாழான். ()

அளவறுவளத்தவானைக்கொந்தியானனுப்புமோலை
பளகியவுன்மத்தூரன்பாளையகாரநண்ப
னளிபெறுநஞ்சராசன்காண்கமாமைசூராள்வோ
னளிபெறுமனத்தனென்பார்கண்பிணையவாவிநின்றேன். (உ௩)

ஆதலாலுன்மத்தூருமதற்குறுபலவுமான
கோதறுகொழுமைவாய்ந்தகுடிவளம்பல்குமூர்கள்
பூதலம்புகழுமந்தப்புரவலன்பரிசிற்கொள்ள
வீதுகண்டதுமளிக்கவென்றவற்கெழுதிவிட்டான். (உச)

அன்னதுபடித்துப்பார்த்தவவனகமதர்விற்பொங்கிப்
பன்னகஞ்சுமந்தவைப்போர்தோளினிற்பரிக்குமந்தக்
கொன்னவினுதிவேற்காளைகொள்கெனவவைகள்முற்றும்
பன்னருஞ்சிறப்புஞ்செய்துபரிவுடனளித்தான்மன்னே. (உ௫)

அப்பெரும்படப்பைதங்களழகுநாமறைதற்பாற்றே
மைப்புயலனையமேதித்தொகுதியுமணிக்கண்மிக்க
வொப்பருங்கழையையென்றுதெவிட்டுறவுமிழுஞ்செந்நெல்
கைப்பெருங்களிறுமாய்க்குங்கண்படுங்கமலத்தன்னம். (உசு)

துள்ளியவாளைமோதத்தூங்குயர்ந்தோங்குந்தெங்கி
னள்ளுறும்பழங்கள்வீழக்கமுகருங்குலையுமன்றிக்
கள்ளருந்தேன்பலாவின்றேமாவின்கனியும்வாழை
விள்ளரும்பழனுமாந்தேமுறைமுறைவிழுநாடோறும். (உஎ)

ஓதரும்வளங்களின் னுமோங்குமப்பதிகளந்தத்
தாதவிழ்தொடையலான்றன் றாளவெண்கவிகைநீழ
லேதமொன்றின்றிக்காக்கவேற்றபினவற்கிடில்லா
வாதனம்வந்தவா றுமறைகுதுமடைவின்மாதோ. (௨௮)

அரட்டரை வென்ற சருக்கம் முற்றிற்று.

ஆக, செய்யுள் - ௨௯௭.

ஏழாவது

சிங்காதனம்வந்த சருக்கம்.

அரங்கராயனறங்களோங்கவாண்டுமூப்படைந்தபின்
பிரங்குமாறுவிரணமொன்றுவிடுதலின்றியெழுகையா
லரங்கநாதன்பரமபாதமணுகுகாலமாயதென்
றுரங்கொடங்கிருந்தவன்பர்தம்மைநோக்கியுரைசெய்வான். ()

மாடமோங்குமகிடனூரின்மண்டலம்புரந்திடு
மாடலருமதிபன்முன்னமக்கனேகவமயமன்
போடுயர்ந்தவுதவிசெய்தநிகரொழிந்தவிகலுளா
னேடலர்ந்ததுளபன்வந்தமரபின்கண்ணுமெழுந்துளான். (௨)

அசலையெங்குமகிழுமாறளிக்குமிக்கவாற்றலான்
வசமனேகவரட்டரைத்துரந்தந்நாடும்வளைத்துளான்
கசரதங்கள்குரகதம்பதாதிகள்கணக்கிடற்
கிசைதலின்றுகிளரும்வீரமேய்ந்ததானையியைந்துளான். (௩)

அத்திறத்தவன்மருங்கிருக்கவிந்தவாட்சியை
மற்றொருத்தனுக்களிக்கின்மறுதினத்திலவன்கொள்வான்
புத்திரப்பெருக்கிலாதகோவிதென்றுபொருந்துமவ்
வுத்தமற்குவந்தளிப்பதொன்றுமொன்றுமென்றனன். (௪)

அவருமங்கொருப்படப்பினந்தநாடுநகரமுங்
குவையுறத்தொகுத்துவைத்தநிதியமோடுகுஞ்சரங்
கவனவாம்பரித்திரண்முதற்படையின்கணங்களுங்
குவவுதோளக்குரிசில்கொள்ளப்பரிசுடன்கொடுத்துமேல். (௫)

அறத்தின்மைந்தனன்றளித்தவன்குலத்துதித்தவர்
திறத்தினுண்டமுறையினிற்றனக்கடைந்ததேடரு
நிறத்தின்மிக்கவிரத்தினத்தநீடுசிங்காதனத்தையின்
புறத்தினம்புரந்திடென்றளித்ததன்பாடோதியே. (௬)

நீடுவாழ்கவென்றுவாழ்த்திநீணகர்தணந்துத
னீடிலாதவெழிலினோரிரண்டுதேவியாருடன்
கூடியேகிமாலிங்கித்தலத்திலின்புகூர்தலைக்
காடென்றேதும்பாடியோரங்காணுமங்கெழுந்தனன். (எ)

அங்குபொங்குபொன்னிவைகலாடிநேமமுற்றியே
மங்குதொல்லைவினையொழித்துமலர்மகட்குநாதனும்
பொங்குகீர்த்திகாரணன்றன்பொன்மலர்ப்பதங்கலந்
தெங்குமென்றுமிணையிலாதமீள்விலின்பமெய்தினன். (அ)

வேறு.

மற்றினியம்மன்னனுக்குமன்னரங்கநாயகரின்
புற்றரவப்பாயன்மிசையோகத்துயிலமரும்
வெற்றிபெறுமரங்கபட்டணமும்வில்லெறியும்
பெற்றவெழிலாதனமும்வந்ததினிப்பேசுதுமே. (கூ)

இக்கலியிலாதியின்கணிகலாரபிமன்னன்
றக்கமகன்முதலாய்த்தாரணியைநன்களித்த
மிக்கபிரவீகனளவாயதனைமேவிநில
மொக்கவிருந்தோங்கியவர்மூவேழுவீரர்களே. (க0)

அஞ்சவயலாரவர்களாயிரத்துநூற்றொருபத்
தஞ்சுவருடம்புரந்தாராங்கதனைமாகதர்க
ளெஞ்சலில்சுமாலிமுதலெழில்கதம்பனீருவா
றஞ்சுபுரவலரிதனையாதரித்துவந்தனரே. (கக)

நானூற்றுத்தொண்ணூற்றுநாலேயவரளித்தார்
மேனோற்றநன்மயூரவன்மன்முதன்மேன்மையுள
கானூற்றுந்தாருலகவாதித்தியகதம்பன்
றுனீற்றாய்த்தாங்கியவர்நால்வர்களாண்டெண்பதென்ப. (கஉ)

பின்னேசெயந்திகதம்பன்முதலாப்பேசரிய
கொன்னுருமிம்மரபின்கொற்றவர்கண்மூவெழுவ
ரென்னேரிருநூற்றுநாற்பத்திரண்டஃதே
மன்னேபுரந்துறைந்தார்மாநிலமுமின்புறவே. (கங)

விருசனனேமுதலாந்துன்மித்திரனேயீறாக
வரசரொருமுப்பதின்மரதன்பின்னராண்டதுவு
முறைசெறியநானூற்றைம்பத்தாறென்றோதுவர்கள்
வரைசெறியுந்தோட்கதம்பனாதியிந்தவான்மரபில். (௧௪)

வந்தவரோராறுபதின்மர்வழுவின்றிக்காத்ததுவு
மந்தமுறுமைஞ்ஞூற்றுத்தொண்ணூற்றுநான்கென்பர்
பிந்திவீரசேனன்மகள்பெருஞ்சீர்த்திபெற்றிடுகோ
விந்தபகவான்மனைவிவிக்கிரமன்றனையுயிர்த்தாள். (௧௫)

அத்தரணிபன்புரந்ததறுபத்துமூன்றென்ப
ரொத்தயுதிட்டிரசகத்திலொருநூறுடனாறு
பத்தெண்மர்பார்த்திபர்மூவாயிரத்துநாற்பதுடன்
வைத்தவொருநான்காண்டுமேன்றதனைவைகினரே. (௧௬)

ஆளரிபோன்மாளவனுமடலாரும்விக்கிரமன்
வாள்வலியினாற்பத்தோர்வருடம்புரந்ததன்பி
னீளடலன்னானமைச்சனேர்ந்ததனைப்பட்டியென்பான்
றோள்வலியினாண்டதுமோர்முப்பதெனுந்தொல்புவியே. (௧௭)

மேலவந்திநாடதனின்மேதினியின்பாவலர்கள்
சாலுமெனவளிக்கச்சான்றோர்புகழ்பாடுங்
காலனடுங்கிடுவேற்கையானெழிற்போசன்
வாலிதினோராறுபத்துநான்கதன்மேல்வைகினனே. (௧௮)

ஈங்கிந்தவிக்கிரமசகத்திருந்தவிறையவர்க
டாங்கியதுநூற்றுமுப்பத்தைந்தென்பதாரணியி
லோங்குநறுஞ்சாலிவாகனனின்றோதமுத
ராங்குலத்துமன்னருமௌனனளவாயதன்பின். (௧௯)

காத்ததறுநூற்றெழுபதாமதன்பின்காவலரின்
மூத்தளையபீடுநவபள்ளாளர்மொய்ம்பினுடன்
பார்த்தளித்தார்தொண்ணூற்றெட்டாண்டுகளும்பான்மைபெற
நேத்திரத்திற்கானந்தமாமந்தநேர்தவிசை. (௨௦)

பின்னானைக்கொந்திமுதற்பீடுறுமிந்நாடுகளை
மன்னுமறத்துருக்கர்கைக்கொண்டிப்பொற்றவிசைக்
கொன்னேயிவருதிறமின்றிருத்திக்கொண்டிருந்தார்
பன்னாளவையைம்பதுவருடநான்குடனும். (௨௧)

பின்பிதரைசுரிதாளமுதலாகப்பிரிந்தபல
வன்புடையசிற்றரசர்வயமாடிக்கொண்டதனை
யின்புறுகாலத்தானைக்கொந்தியினிலிருந்தவலி
மன்பிரதாபருத்திரனென்பானதனைவலித்தனனே. (௨௨)

அன்னவர்கணானூற்றிருபத்தோராண்டதனை
மன்னியபின்பெனகொண்டைக்கம்பலனென்மன்னவனுந்
தன்வலியிற்கொண்டதனைத்தாங்கிப்பதின்மூன்றும்
பின்னெவருங்காணாதுபெய்தானிலவறைக்கண். (௨௩)

அக்கனெனுமரசனாதியதன்பின்பளித்தா
ரொக்கநரபதிகிருட்டினன்வரைக்குமுள்ளபல
ரக்குலவுமாண்டுகளைநூற்றிருபத்தொன்பதென்பர்
பிற்கதையைப்பேசுதுமீங்கற்புடன்மன்கேட்டிடவே. (௨௪)

அவ்விறைவன்றன்னரசையாளுமதலையின்றி
மௌவலந்தார்மருமகனிராமராயன்றனக்காங்
கொவ்வறுமவ்வாதனமுமுயர்வுறுமக்கோலதுவுந்
துவ்வவளித்துடனேதுறக்கங்குடிபுகுந்தான். (௨௫)

அப்பால்வன்பின்னோன்றிருமலைராயன்றனுட
னிப்பாரொருபதினான்கின்பமுறக்காத்தளித்துத்
தப்பாதமூப்புறுமித்தானடைந்தபின்றளர்ந்தே
யொப்பாரிலாமகர்களொருநால்வரைவிளித்தே. (௨௬)

மூத்தமகன்றிருவரங்கராயனுக்குமுன்னுரைத்த
தூத்தவிசோடரங்கமும்பின்றோன்றிரகுநாதனுக்குச்
சீர்த்தபெனகொண்டையவன்சின்னவனிராமனுக்கு
மாத்திருராய்வேலூருமலர்ச்சியுறத்தந்தின்னும். (௨௭)

திருவேங்கடபதியென்றெல்லோருந்தேர்ந்துரைக்கு
முருகார்தொடைநான்காமொய்ம்பனுக்குமூதெயில்சூழ்
தருசந்திரகிரியுந்தந்தனனத்தரணிபருங்
கருதலர்கள்கண்டிறைஞ்சக்காசினியைக்காத்தனரால். (உஅ)

அந்தரங்கராயன்முதலாயரசவுடையார்க்காங்
கிந்தவிருக்கைகொடுத்தவேழாமரங்கனள
வந்தமுடனுண்டவர்நூறுடன்முப்பத்தொன்றென்பர்
புந்தியினிலிச்சரிதைநன்றுணர்ந்தபுனிதர்களே. (உகூ)

சாலிசகத்திறையவர்கடாமளித்தவாண்டுகளு
மேலுமோராயிரத்தைந்நூற்றுமுப்பத்திரண்டென்பர்
மேலுதிட்டிரன்சகத்தின்மேதினியின்மிக்கொளிர்ந்த
வேலுறுங்கைப்பரிக்கித்துவேந்தன்முதலாக. (௩0)

ஏழாந்திருவரங்கராயனிவனளவுந்
தாழாதுதாங்கியவர்தம்வருடமீங்குரைக்கிற்
சூழுமொருநாலாயிரத்தெழுநூற்றுப்பதினொன்
றாழின்விளங்குமெனவோதியிடுமிவ்வுலகம். (௩க)

வேறு.

சாலிவாகனசகந்தனிலொன்றிரண்டைந்ததினுடனேழு
மேலநேர்மையினிறுத்தியவாண்டினிலிழைத்தவன்பெருநூலைச்
சாலும்வித்தியாரணியனுஞ்செந்திருத்தாண்மலரகஞ்சேர்த்தி
மேலுறுந்தவமிழைக்கையிலவளசரீரியாய்மிசைநின்றே. (௩௨)

நிற்குமற்றொருபிறப்பினிற்றரிசனநேர்குதுநினதிந்தப்
பொற்புறுந்தவத்தினிலகமகிழ்ந்தனமாயினும்புவிமீதே
யற்பினுண்டிடும்போகமதுனக்கிலையாயினுமருளானீ
சொற்கரும்பெருங்கோலையுமடைந்தவர்க்குதவிடுந்துணையாவாய். ()

இப்பெருங்கலியிடையினீயிழைத்திடும்பாடியமுதலான
வொப்பருங்கலையுளவரைக்கும்புகழோங்கிடுமுலகின்கட்
டப்பருந்தவத்தோயெனத்திருவருள்செய்துடன்றயையேயோ
ரப்பெருந்திருவெனவெழுந்தருளுமவ்வன்னையுமகன்றுளே. (௩௪)

உலகவன்னையினுயர்மொழிநினைந்தவன்மறுபிறப்பினையொக்கு
மிலகுறுந்துறவறம்புனைந்திருக்கையிலிந்திரபதமாதிப்
பலசுகம்பெறுமுலகமுமீண்டிடாப்பரம்பதமதுகாறு
நிலவும்யாவையுங்கடைக்கணிற்குலவுமந்நின்மலையவணோர்ந்தாள். ()

வந்ததாமரைத்தாயினைக்கண்டகமடங்கலில்வழிமோதத்
தந்திருப்புனற்கண்களினன்னவன்றுண்டவம்புரிந்தேத்த
வந்தநாயகியவணரையோசனையகலமின்பொன்மாரி
சிந்திவீழ்தரக்கடைக்கணித்தவனையுஞ்சென்றனண்மறைந்தாங்கே.

பின்னரன்னவன்பெருங்களிகூர்ந்துபூமகளருடனைவாழ்த்தித்
தன்னதூரினிற்பெய்தவத்தனமழையவசவரகம்வீழ்ந்த
தன்னவீட்டினர்க்கதனயன்மறுகதுமூர்ப்புறத்தனயாவு
மன்னவன்றனக்கெனவிதித்ததற்கொருமன்னனைநினைந்தானால்.(௩௭)

அந்தநாளினிலோரகலமர்பிரதாபருத்திரனென்பான்
றந்தபேரதிகாரமுந்தணந்துளவக்கபுக்கர்களென்னுஞ்
சொந்தமாயுடன்பிறந்தவரவரதுதொல்லைநல்வினையானே
முந்துதோன்றினோனொருபகலேகுமோர்மூதருநெறியின்கண். ௩௮

போமிளைப்பினிலாதவன்சுடுகரங்கிருபணன்பொருசொல்லின்
றூமழற்றிடத்தரிக்கிலாதவனொருதண்பழமரத்தின்கீ
ழேமமுற்றருந்துயில்புரிகையிலொருபெரும்பணியெழுந்தன்னோன்
மாமுடிக்குயர்பணம்விரித்தாடியேமறைந்ததங்குடன்மாதோ.(௩௯)

வித்தியாரணியனுமதுதெரிந்துளவிதத்தினாலவர்தம்மை
யொத்ததூதரிற்றனதகங்கொணர்ந்தவருயர்மதிகுலத்தோரென்
றெத்திறத்தினுமுணர்ந்தவர்தம்முளுமுந்தியவிகலோற்கே
யத்திருத்தகுபேரரசளித்திடவகந்துணிந்தனனன்றே. (௪௦)

எண்ணியிவ்வணம்பின்னுமுன்னுதிட்டிரனிருந்துலகொருங்காண்ட
மண்ணுமாமணியாதனமெங்குளதெனமனந்தனிலாய்ந்து
நண்ணுமின்பெனகொண்டையிற்கம்பலனுடருநிலவீட்டி
னுண்ணிலாயதென்றுணர்ந்தனனுயர்தவத்தொழுகுமத்துறவோனே

துத்தியம்பணத்தரவுமுன்றோன்றலைமறைத்ததத்தலமென்று
மத்திருத்தவிசளித்தவனுறைவதவ்வாடுபையரவென்றும்
வித்தியாரணியனுமருந்தெய்வதவீறுகொண்டுறலாலே
புத்தியானுணர்ந்தஸதயுடன்கொணர்ந்தனன்பொருக்கெனவெழுந்தன்றே. ()

அக்கராயனேச்சாலிவாகனத்தொராயிரத்திருநூற்றைம்பத்
தொக்கவொன்பதினதனிடையிருத்திரன்கொளிர்மணிமுடிசூட்டி
மிக்கவானேக்கொந்தியினிடைப்புரந்திடப்புரிந்தவன்விழைபின்னேன்
புக்கனென்பவற்கிளவரசளித்தனன்பூமகள்புகல்வண்ணம். (சங)

அஞ்சிலக்கமாமள்ளருமாயிரத்தேழுநூறடலாருங்
குஞ்சரத்தொகைகளும்பலபரிகளுங்கொண்டுவிண்கொடியாட
மஞ்சுலாம்பனிவரைமுதற்றென்கடன்மணந்துளபுவிகாறு
மெஞ்சலின்றியவ்விருவருந்தண்குடைநீழலினினிதாண்டார். (சச)

வேறு.

அதன்பகடறைவரிதனந்தன்பாயனுஞ்
சுதனறக்கடவுளின்சொலிக்குந்தம்பியர்
கதங்கிளர்படைகளாற்கருதலார்பட
முதங்கிளர்புகழ்செலமுரணிவென்றுமுன். (சரு)

தன்முடிமிசையுறத்தளிர்க்குஞ்செங்கதிர்
மின்மணிமகுடமுமிலைச்சிப்போற்றுறப்
பன்னகசயனனும்பரிந்துகாண்செயப்
பன்னரும்புடவியைப்பரிக்குங்காலையே. (சசு)

ஐவகையுயிரெனவமர்ந்தபஞ்சவ
ருய்வகையுதவுவோனுவப்பிற்கும்பர்கோன்
செய்வகையெவர்களுந்தெரிவின்றுமதை
மெய்வளரறன்மகன்மிளிரத்தந்தனன். (சஎ)

ஓவியத்துறைகளுக்குவப்பிற்கோதருங்
காவியம்பாடுநர்கருத்திற்கேறிடுங்
காவலர்திறத்திணையளந்துகாட்டற்குந்
தாவருமிடமெனத்தபங்குமன்னதே. (சஅ)

நரைநிரைகுயிற்றியநிகரிலொன்பது
வரையறுந்தேவமாமணிகணின்றெழும்
புரைதபும்பலபலபுதியசெஞ்சுட
ரிரவையும்பகலெனவிலகச்செய்யுமே. (௪௯)

இந்திரனளித்ததினிஃதிழைத்திடு
மிந்திரசாலமேயியையும்பற்பல
சுந்தரச்சவிகளுஞ்சுருண்டகோதையார்
தந்திரமனமெனப்பிறழ்ந்துதாவுமால். (௫௦)

சுமந்திடுமெரியினஞ்சுழலுங்கண்மணி
சிமந்தகமணியெனவெறிந்தசெஞ்சுட
ருமிழ்ந்திடுசினக்கனற்பிழம்பையொக்குமே
யமர்ந்திடுகரித்திரளவைக்கட்கண்டவை. (௫௧)

பற்பலபறவைகள்பரிந்துவேட்கையை
யற்பொடும்பெடைகுறிப்பதனிற்காட்டிமுன்
பொற்புடன்படர்தரத்தழுவப்போந்தொடர்ந்
தெற்படுசிறகளையெடுத்தவண்ணமே. (௫௨)

செய்யவெண்மணிகள்செஞ்சிதத்துநீழலை
மெய்யினிலிறைவனின்மிடைந்துமொய்க்குதல்
பொய்யறுமிதனிடைப்பொலியுமன்னர்க்குக்
கையுறுமிருகுலக்கலப்பைக்காட்டுமால். (௫௩)

தன்னிடையிவர்பவரிதயந்தண்ணளி
மன்னுறுங்குணனெலாமலியுமூக்கமு
மின்னனவியைதலானன்றேயேவருந்
துன்னுவரின்னுமவ்விழவிற்றென்னகர். (௫௪)

கராசலங்கதறிடக்காத்தகச்சியான்
சராசரமளித்திடும்பதத்தைச்சார்தரு
மிராசமாவுடையனின்னியல்புமற்றினித்
தராசனம்புகழ்தரத்தகவிற்சாற்றுவாம். (௫௫)

வேறு.

பின்பிராசவுடையனந்தப்பேரரங்கராயனே
ரின்பரம்பதத்தினுக்கெழுந்தசெய்திசெவியுறுந்
துன்புடன்றுளங்கிமற்றுந்துணிவுகொண்டுபட்டணக்
கன்பொடேகியரிசுமந்தவந்தவாதனந்தனில். (ரு௬)

திங்களின்கதிர்க்குலங்கடிரண்டுபொற்பிடிக்குளே
தங்குமென்னுங்கவரிவீசலாதியாவுந்தாஞ்செயு
மங்கசன்மயங்குமாதரங்கண்வண்டினம்முகப்
பங்கசம்படிந்துவீழநன்கிவர்ந்திருந்தரோ. (ருஎ)

பல்லரட்டர்திறைகொணர்ந்துபணிந்தெழுந்துசொரிதர
மெல்லலத்தகப்பதத்துமின்னனூர்நடித்திட
மல்லடர்த்தபுயவலத்தைமாகதர்படித்திடச்
செல்வளத்ததிகிரியெங்குஞ்செலுத்திநீதிநடத்தினன். (ருஅ)

அந்தவண்ணஞ்சிலபகல்கழிந்தடங்கலாரக
நொந்தடங்கவீறுமுன்பிறந்தமைந்தனோன்மையா
னந்தனுகுநரசராசவுடையனங்குகாத்துறத்
தந்திளையவரசுதானுந்தாங்கினன்மைசூரரோ. (ருகூ)

சிங்காதனம்வந்த சருக்கம் முற்றிற்று.

ஆக, செய்யுள் - கூரு௬.

எட்டாவது

அமலதேவதா சருக்கம்.

ஆங்கறந்தழைத்தோங்கவரும்புவி
தாங்குகாலையரங்கத்தனந்தன்மேற்
பாங்குறுந்துயில்பண்ணுமரங்கரி
னோங்குமொண்ணிலயத்தொழில்செய்பவன். (க)

ஒருவனேடிவங்தொன்னலர்வாட்டிடு
மருமலர்த்தொடைமன்னனைமன்னியே
யுருவவொண்மணியொளிருமின்மௌலியாய்
புரையிலென்மொழிபோற்றெனக்கூறுவான். (உ)

உலகம்யாவுமொருமணிக்கீடிலா
வலகிலாமணியாரமடையவு
மிலகரங்கரின்னுயகிக்கேன்றன
வலர்மேலம்மையவள்கரத்துள்ளன. (ஙூ)

அரங்கராயன்முன்னுண்டவன்பன்னியக்
குரங்கநேர்விழியாளவைகொண்டுசுக்
கிரன்றன்வாரநிகேதனம்போக்குவ
ளரங்கநாயகிக்காங்கணிசெய்யவே. (ச)

இந்தவண்ணமவ்வேந்திழைதன்னகங்
தந்துகொள்வதுந்தாமரையாளகஞ்
சுந்தரஞ்செயப்போக்கலுமாயவண்
முந்துநாண்முதலாற்றுமுறைமையாம். (ரு)

ஆதலாலவடன்னிடந்தங்கிய
காதலாலவைகையுறக்கொண்டனள்
போதலாதுறையாதவப்பூமகட்
கோதலாம்புகழோயவைசேர்த்தியால். (சா)

என்றிசைத்ததையென்றுபுரவலன்
பொன்றளித்திருப்பொக்கசக்காரனை
யன்றழைத்தவையாங்குளவென்னனுங்
குன்றிணைப்புயக்கொற்றவர்கோதுவான். (௭)

அரங்கநாயகியம்மணியாவையு
மரங்கராயனுக்கானமனைவிதன்
கரங்கொண்டேகிக்கடிமலர்ச்சோலைசூழ்
வரங்கொண்மாலிங்கிவைஙினளென்றனன். (அ)

ஆளிமன்னனபாங்கநமதக
மீளுமேமோவெனவெண்ணிமிடைந்துள
வாளுமொற்றரைநோக்கியணிகளைக்
கேளுமென்றுகிளந்துவிடுத்தனன். (௯)

போயதூதரும்பொள்ளெனமீண்டனர்
சீயமன்னவெஞ்செவ்வியகோலினய்
தூயநின்மொழிசொல்லியுமன்னவ
ளாயலின்றியகற்றினளென்றனர். (௧0)

வேறு.

கேட்டனனரசன்பின்னுங்கிளர்திருவரங்கநாய்கிக்
கோட்டிருளொளிசேரந்தவுயரணிகலன்களெல்லாங்
கூட்டிடுவதுவேயெந்தத்திறத்தினுங்குணமாமென்று
நாட்டியமனத்தனுகிநவின்றனனுழையோர்க்கிங்கே. (௧௧)

பருவரலொன்றுமின்றிப்பாரெலாம்புரந்தமன்னன்
மருவருந்திருவைகுந்தமணந்தபின்கற்பின்மிக்க
கருநெடுங்கண்ணிநிற்கக்கலன்களிஞவதென்னே
தெருமரலகன்றுதேவிக்கன்புடன்றெளிந்தீகிற்பாய். (௧௨)

நிற்கிணையொழிந்தசீர்த்திநீணிலந்தன்னிலென்று
மொற்கமின்றுளிரும்பின்னுமுயர்பரம்பதமுநேரு
மற்புடனளியாயாகினவையாவும்வலிந்துகொள்வேன்
பொற்பதன்றென்றேனென்றுபுகன்மெனப்போக்கினுனல். (௧௩)

ஆங்கவர்படர்ந்துவேந்தனறைந்தனபலவுமந்தத்
தேங்குழலவள்பாலோதத்திண்களிற்றிறைவன்சொன்ன
பாங்குறுநெறியையோராதவள்பெரும்பகையேயுன்னித்
தீங்குறவவனைவதோர்தீங்குடனிழைக்கத்தாழாள். (௧௪)

மூவுலகுழையுங்காணுமுழுமணியொன்றுதூங்கு
மேவருந்திகழுநாசியணியொன்றுமளித்துமிக்க
தாவரும்பிழைகளெல்லாந்தன்மடிவிசித்துக்கொண்டே
மாவலத்திடங்கர்சிறுமாலிங்கிமடுவில்வீழ்ந்தாள். (௧௫)

வீழ்ந்துவேறுலகத்தார்க்கேவிருந்தவளடைந்தபெற்றி
போழ்ந்தொளிரிகலோரங்கம்பொருமயிற்கரத்தான்கேட்டுத்
தாழ்ந்திடுமுலகுதெய்வந்தன்றிருப்பணியான்கேட்கச்
சூழ்ந்தனளரியதீங்கென்றவனகஞ்சுருங்கினுனல். (௧௬)

பின்னவளலகையாகிப்பெருமகன்கனவிற்போந்தாங்
கின்னலன்றிழைக்கவேங்கியுடனவளுருவமேற்கப்
பொன்னினிற்பதுமையொன்றுபுதுமையினிழைத்துநாளும்
பன்னருஞ்சிறப்போடந்தப்பாவையைப்பழிச்சிமற்றும். (௧௭)

ஆண்டுதோறடையுநன்மாநவமியாந்திருவிழாவிற்
காண்டகுபலபூணுரங்கவின்பெறவணிந்துதேன்கள்
பாண்டகவிருந்தின்பாடும்பன்மலர்த்தெரியல்சூட்டி.
வேண்டியதுலகிலொன்றுமின்றியவிழுப்பஞ்செய்தே. (௧௮)

அண்டருமருந்திக்காணுவறுசுவையதிகமூறு
முண்டகுகருனைதீம்பாலொழுகுமுக்கனிகளோடுந்
தெண்டிரையமுதமன்னநால்வகையுணவுந்தீய
பண்டங்கள்பலவுந்தூயநோன்பொடுபடைத்துமாதோ. (௧௯)

தானுந்தன்மரபிற்றேன்றுந்தரணிபர்பலருமென்று
மானந்தத்துடன்றாழ்வின்றியருச்சனைபுரிவாமென்று
கோனிந்தத்துறையேவேண்டிக்கொண்டபின்குறையொன்றின்றி
வானுந்தப்புகழ்நாடோறும்வளர்ந்தெழமகிழ்ந்தான்மன்னே. (௨௦)

ஈங்கிவனிவ்வாறெங்குமிணையறுமின்பந்துய்க்கத்
தாங்கியவரங்கந்தன்னிற்றண்மதிக்கவிகைநீழற்
பாங்குறவளிக்குமந்தயுவராசனொருகாற்பண்பி
னோங்கியதருமமொன்றையுஞற்றிடவெழுந்துபோந்தான். (௨௧)

போந்துபூம்பொழில்சூழ்கன்னம்பாடியிற்பொருப்பைமுன்ன
மேந்திமாமழைதடுத்தேயிடையரானிரைகள்காத்த
காந்துயர்மணிசேர்வண்ணன்கண்ணன்வீற்றிருந்தகோயில்
சூழ்ந்தபொன்னெயிலுமோங்குஞ்சிகரியுஞ்சொலிக்கப்பின்னும். ௨௨

பொன்னகரிதுவென்றூரும்புகழ்ந்திடப்புதுக்குவித்து
முன்னிருந்ததினும்பொன்னம்பெரியதாமுடித்துவேதம்
பன்னியமுறையேசம்புரோக்கணவிதியும்பண்ணி
யன்னதற்கெழுந்தோராங்காங்ககமிகமகிழவன்றே. (௨௩)

வழங்குதற்கரியபொன்னும்வரிமணியுடையுமுத்தீம்
பழங்கனிந்துதிருஞ்சோலைப்பாடிகள்பலவுமீந்து
தழங்குரன்முரசமார்ப்பத்தசதினச்சிறப்புஞ்செய்வித்
தழுங்கலிலெவருமின்பமார்ந்திடவுறைந்தானங்கே. (௨௪)

சிலபகல்கழிந்துகாண்டாவனனவனிழைத்தசெம்பொன்
னிலயமதருமைகண்டிந்நேர்மையிற்றனதுகோயி
லிலகுறவிழைக்கவெண்ணிவேண்டிடவிவனுமாங்கே
மலர்தலையவனிநீத்தம்மன்னியதுறக்கம்புக்கான். (௨௫)

இந்திரனவைக்குமைந்தனெழுந்தனனென்றமாற்றம்
வந்துடனறைந்ததூதர்வாயினின்றெழுமுன்வேந்தன்
கொந்தலர்த்தொடையலோடுங்குப்புறப்புவிமேல்வீழ்ந்து
சிந்தையொன்றின்றிச்சோர்ந்துசெய்ததண்ணுபசாரத்தால். (௨௬)

தெளிந்துகன்றிழந்ததீம்பால்சுரந்திடுஞ்சுரபிமான
வளிந்திடுமனத்தினேங்கவருந்துறும்பெரியோனாயா
விளிந்தவர்க்கிரங்கியென்னேமீண்டவர்வருவதுண்டோ
முளிந்திடேலென்றுதேற்றிமுறையினும்பலவுஞ்சொல்வார். (௨௭)

அளவிடற்கரியகோடிசீவர்களனந்தன்பாத
முளவினையொழித்துச்சேருமுன்பெமூவகையாந்தோற்றத்
துளையுறுங்கதிகணுன்கினுழன்றலையுடலைச்சேர்க்கின்
வளருயரிமயந்தன்னினேங்குமோவ்வொன்றுமாதோ. (௨அ)

இத்தகையுயிர்கட்கெல்லாமெம்பிரானியைபொன்றன்றித்
தத்தமக்கொருசம்பந்தந்தாரணிதன்னிலுண்டோ
பித்தரிற்பெண்டுபிள்ளையெனமாயைவலையிற்பின்னி
நித்தலுங்கரைதலென்னேநின்மலன்றனையோர்வார்க்கே. (௨௯)

உதயமால்வரையின்கோட்டினுலர்ந்ததோர்சருகைக்கொண்ட
லிதயநேர்விசையினத்தவரைமுகட்டிடுவதேபோற்
சிதையுமோர்கதியான்மாவைச்சிக்கெனக்கொணர்ந்துவேறோர்
கதியுறுகருவினந்தக்கருமமேகலக்குமன்றே. (௩0)

தாயொன்றின்றனக்குமற்றோர்தாய்நாடிச்செல்லுமிந்தச்
சேயங்கண்புவியினிந்தச்சிறுவற்கேயிரங்கினைய
வாயுங்காலிதற்குமுன்புன்கான்முளையளத்தற்காமோ
மாயஞ்செயிருளையுன்றன்மனவிளக்கதனின்மாய்ப்பாய். (௩௧)

அன்றியுநிறைந்தோருள்ளமாபத்தினசைதலில்லாக்
குன்றெனவலிந்துசெல்வங்கூடியவமயந்தேனர்
மன்றலங்குவளைமானமெலிந்தமர்ந்தொழுகுமென்று
பின்றையும்பலவுநீதிபிறங்கிடத்தெருட்டினாரால். (௩௨)

பக்கச்சொல்பத்தடுத்தபலமெனப்பகர்வதொப்பத்
துக்கத்தைத்துறந்துவேந்தனவரத்தின்றொழில்களெல்லா
மக்கொற்றப்புதல்வன்பன்னிதனயுரையனுப்பியாங்கே
யொக்கத்தன்னமுங்குன்றுமலொளிபெறநடத்தினனல். (௩௩)

அமலதேவதா சருக்கம் முற்றிற்று.

ஆக, செய்யுள் - ௩அ௯.

ஒன்பதாவது

மகாநவமிச் சருக்கம்.

அன்னகாலருமகாநவமியாங்கடைகையான்
மன்னன்மாளிகையுளார்மறைநிலாம்புலவர்கள்
பன்னருந்துயருநம்பார்த்திபற்குற்றதா
லென்னவாறிப்பெரும்விழவவன்னிழைத்திடும். (௧)

கண்ணனின்னருடனிற்காலையாந்தருமன்மு
னண்ணலாயாண்டவாதனமிவண்போந்தி
றெண்ணுமோவதிலிவர்ந்துயர்சுபம்புரிதர
நண்ணுதற்கரியசூதகமுடன்னரபதி. (௨)

என்றுபற்பலமொழிந்திணையிலாமனுவினூ
லன்றிஞானேச்சுரியாதியாம்பலகொணர்ந்
தொன்றுமோவெனநினைந்தொன்றியாராய்கையிற்
குன்றுநேர்தோளினன்செய்ததுங்கூறுவாம். (௩)

மற்றவன்றன்றுயர்மனதகத்தொடுக்கியே
கற்றநூற்புரோகிதர்கணிதநூலோரையும்
பொற்றசிங்காதனம்பொருந்தலேயாதியா
முற்றநற்சுபமெலாமொண்ணுமோவீண்டெனு. (௪)

கேட்டலும்மவருடன்கெடலரும்பனுவலி
னேட்டினைச்சிறிதெனுந்தவிருறுதியாவையு
நாட்டமாய்நன்கரிப்பரித்ததின்மெய்யுணர்ந்
தீட்டருந்திருவினற்கிவையிசைக்கிற்பரே. (௫)

முடிபுனைந்தவர்களிம்மூதருந்திருவிழா
படியுமுன்சூதகம்படியுமேற்றிதிகளுக்
கடிதனின்மூழ்கியம்பூணுநூலார்ந்துரத்
துடனுயர்தவிசின்மேலுறுவதற்கங்கமாம். (௬)

மங்களம்பெருகுநானம்முதன் மகிழ்சுபந்
தங்கியாவையுமிஃதுழைத்தங்கஞுழ்தன்கரங்
கங்கணம்பூண்டருங்காளிகாபுராணமார்க்
கங்கலந்தாசஞர்ச்சனைமுனங்கண்டுபின். (எ)

ஆனமாதானையோடஞ்சமீபூசையுந்
தானிழைத்தரியமற்போர்முதற்றுக்குகண்
மேனடத்தித்திகழ்மேலிருந்தாதன
மானகங்கணவிசர்ச்சனமும்பின்பாக்கலாம். (அ)

பின்பதன்சேடமுண்டெனிலதைப்பேணியே
தன்பகறணந்ததுந்தண்புனன்மூழ்கியே
முன்பெனத்தூயதன்முறைதனின்வைகலாம்
பொன்கருங்கழலிஞய்புகலுதுங்கேளினும். (௯)

இப்பெருஞ்சிறப்பினுக்கிடையசுத்தம்புகின்
றப்பருந்நித்தகன்மங்களைத்தான்புரிந்
தொப்பருஞ்சாறிதையொன்றுமேயொருவிடா
தற்புடன்வனைந்துபின்பதையிணைந்தகற்றலாம். (௧௦)

என்றிசைத்ததையவனேன்றுபின்னையரோ
யொன்றுமிவ்வுற்சவத்திடையிருகுரவர்கள்
பொன்றிடிற்புரவலன்போக்கெவன்புகல்கென
நன்றுணர்ந்தன்னவர்நரபதிக்கறைகுவார். (௧௧)

மகுடநன்முடிபுனைந்தவனியாண்மன்னவன்
புகுதரிச்சிறப்பினிற்பொன்மணித்தவிசிவர்ந்
தகிலமின்புறவளிக்கிற்பதேயன்னவர்க்
கிகபரந்தருமுதல்வினையதென்றியம்பலால். (௧௨)

அதனிடைத்தந்தைதாயாருயிர்துறந்திடி
னிதமவர்க்கேய்ந்ததாயாதியைக்கொண்டெலாம்
விதமுறச்செய்துதன்விழவதன்சுபமெலா
மதுமலர்த்தாரிஞய்மாடலாமென்றனர். (௧௩)

காவலன்கேட்டதைக்கருத்துகந்திங்கியான்
யாவையுங்குன்றலிற்செய்குவேன்யாதெனு
மேவுமேலீங்கினித்திணேவரும்வேந்தரு
மோவலின்றிவ்வணம்புரிகவென்றுறுத்தினன். (கச)

வேறு.

அந்தவெஞ்சிறப்பிலன்னுறற்றுதற்கரியசெய்த
விந்தையுமடைந்தபேறும்விளம்பலாந்தகைமைத்தாமே
நந்தையின்முதனுள்வைகனறும்புனனுனமாடி
மந்திரமறையின்பூணுான்மார்புறப்புனைந்துமற்றும். (கரு)

அதற்கெனக்கடவுளாலயத்திருந்தடைந்ததைல
மதர்ப்புறுமரிசனத்தின்மங்களநானமாடி
யிதத்தருந்தீக்கையாடையிடையுடுத்தெவருங்காணக்
கதக்கடகளிறன்னுன்பொற்கங்கணம்புனைந்தான்மன்னே. (கசு)

மண்ணியமணிப்பூணுரமல்குறவணிந்துமாற்றார்
துண்ணெனும்வடிவாளேந்தித்துலங்குமேற்பவனத்தேகித்
திண்ணவகிரகதெய்வமாதிகள்கலசஞ்சேர்த்திக்
கண்ணியமறையின்பூசைகனமுறப்புரிந்தானன்றே. (கஎ)

பின்னரின்காளிகாபுராணத்திற்பேசும்வண்ணம்
பொன்னரித்தவிசின்பூசைபுரிந்ததிவிவர்ந்துபொம்மென்
றின்னிசையறுகான்மாந்திமதுகளித்திசைக்குமாலை
தன்னுடன்றரளமின்னுங்கவிகையினிழலிலார்ந்தான். (கஅ)

அப்பொழுதவற்குமுன்னரத்துமண்பரல்களெங்கு
மொப்புறப்பரப்பிமெத்தியோளியின்விளிம்பிற்சூழக்
கப்புறுமலர்ப்பூந்தொட்டிகணக்கறவமைத்துநாப்பண்
மைப்புயல்படியநாணுமணிவணத்துசங்கணுட்டி. (கக)

காண்பவர்க்கினியமிக்கபரப்பொடுகாணுமந்த
மாண்பெருந்தலத்திலோர்பான்மழகளிற்றினமற்றோர்பால்
பூண்கலன்புரவிப்பந்திபின்னெருபுறத்திற்செங்க
ணேண்பொருமறவரீட்டநிரல்படவிருந்தமாதோ. (உ0)

மற்றுமன்னன் றன்றேளின் மதுகையின்விளங்கப்பெற்ற
கொற்றமாரனுமவனதேயரின்கொடியுங்கண்கள்
பற்றியதோகைசூரபானமோடாலவட்டஞ்
சொற்றிடற்கரியவின்னதுலங்கியவிருந்தோர்சூழல். (உக)

ஒருபுறங்குயிலுநீலகண்டமும்பிணையுமொன்றி
மருமலர்க்குழலாராகிமண்மிசைமிளிர்ந்ததொத்த
வரிவையருறுப்புமூன்றுலகப்பொருட்டுறைகணன்கு
தெரிவுறப்பசும்பொற்பாவையெனத்திருநடனஞ்செய்தார். (உஉ)

காகளமுரசுபம்பைகணக்கறுபணவம்வள்வா
ராகுளிபதலையாமமாதியாம்பறைகள்கோடி
நாகமுஞ்செவிடுண்டாங்கேநகையுறவொலித்தவோர்பான்
மாகதர்குழுமிமற்றுப்புகழ்ந்ததீங்குரைத்துமன்னே. (உங)

பச்சிமவரங்கநாதன்பாதமாமரையைநாடி
மொய்ச்சிடுமனத்தநோனுர்முறிந்திடமுடுகிவாட்டும்
வச்சிரவெழுமணித்தோள்வலவனேவறியோர்க்கீந்து
நிச்சலும்வளர்ந்தகையாயெங்கணுநிகழ்த்துமெய்யாய். (உச)

பூவையர்தமக்கோரைந்துபூங்கணைக்குமரனேநின்
மேவலர்திரளைச்சாடிமிளிர்படைக்கரத்தனேயன்
பார்வலரரவிந்தத்திற்காயிரங்கிரணனேயென்
றேவறவினையவின்னும்பாடினரொருசாராங்கே. (உரு)

வரையொடுவரைபோர்செய்யும்வகையெனத்திரண்டதோளார்
பொருமவரிருவராகவொருபுறம்பொருதார்பல்லோ
ரரிமுனைவடிவாள்வீரராடினரொருசார்தண்டி
னெரியெழப்புடைத்தோர்சூழ்லிகன்றனரிகலின்மிக்கார். (உசு)

மன்றநெறிவழுவாதாற்றும்புரோகிதன்முதலாமற்றைத்
தறையுறையமரர்தம்மாற்கலசநீர்தெளிக்கப்பெற்று
மறமுறுமாயைபூசைக்குரியனவமைத்துத்தெய்வ
நிறைதரும்பிரசாதங்கள்வந்தனநெறியிற்கொண்டான். (உஎ)

தங்குருமுதலோராயவளவறும்புலவர்தந்த
வின்கனியுடனேமந்திராக்கதைவணங்கியேன்றே
யன்புறுபுதல்வராதிமுறையினரரட்டர்பல்லோ
ரின்புடனளித்தகாணிக்கைகளுமியைந்துகொண்டான். (உஅ)

கன்னலங்குதலைமாதர்கஞ்சனக்கரத்திற்சூழப்
பின்னுறவிலிங்கிவீரபத்திரப்பலகைபின்னும்
பொன்முறுக்கிலங்குகாம்பார்பொருவில்வெண்கவரியோடு
மின்னியசூரபானமுதலியமிடைந்துசெல்ல. (உகூ)

கரடமூற்றிருந்துபாயுங்கவுட்பெருங்கதத்துப்பட்டத்
துரியகூர்ங்கோட்டுமாவுமுயர்குலப்பரியுமாகுந்
திருவரமனையினின்றும்பல்லியந்தெழிக்கப்போந்தங்
கரசவையடைந்தன்னானைவணங்கினவடைவின்மாதோ. (௩0)

அங்கிருந்தவைகண்மற்றுமளவறும்விபவத்தோடுங்
கொங்கலர்பொதுளுமாற்றின்கோட்டினைக்குறுகவாங்கே
மங்களநலங்குமிட்டுமஞ்சளுஞ்சிவப்புஞ்சேர்த்தித்
தங்களத்திலகவைந்துதானியவகையுமார்த்தார். (௩க)

நறுமலர்த்தெரியல்சூட்டிநகுமணிப்பணிகள்பூட்டி
யெரிகதிர்ப்பசும்பொனாடையியைபுறப்போர்த்தின்பூவி
லுறையிரண்டணங்கும்வாய்ந்தபடத்துடனவற்றையோங்கு
முறவினனொருவன்மன்னற்குற்றவெம்பூசைசெய்தான். (௩உ)

புரைசைமால்களிறுமந்தப்புரவிசேகரமுநானா
வரிசையினடைபாவாடைமிசையெழுந்தகன்றுவையந்
துரிசறப்புரக்குமன்னன்றுலங்கவைவணங்கிமீண்டு
பரிசுடன்பயிலுஞ்சாலைவாயிலிற்குறுகவாங்கே. (௩௩)

கத்திகைக்கருமென்கூந்தற்காரிகைக்கணங்களீண்டிச்
சுத்திகைச்சுடரினோடுமெயினிநீர்சுழற்றப்புக்குப்
புத்துருக்கரியநெய்பான்முசருறும்புழுக்கலோடு
மித்தகைக்கவளமின்னுமீந்திடவயின்றமாதோ. (௩ச)

ஒருவரும்படைக்ககில்லாமலயசத்திருவினோங்கும்
பெருமகன்பலருந்தந்தவணக்கொடுபரிசும்பெற்று
வரிசையுமவரவர்க்குத்தக்கனவழங்கிப்போக்கி
யரிசுமந்திலகுமந்தவாதனத்திருந்தான்மன்னோ. (௩௫)

நித்திலக்கவிகைதண்ணென்னிலவெறிகவரிபீலி
பத்தியின்மணிகளோரம்பதித்தபன்முகுரம்பைம்பொற்
சித்திரச்சிவிறிமின்னுமெல்லிலைப்படிகநாறுங்
கத்திகைமதுரநீரார்பளிங்கொளிக்கலங்கள்பின்னும். (௩௬)

கரந்திமிர்வெண்பட்டுங்கைப்பாவாடைமுதலாங்காண
வரம்பறுபொருள்களேந்திவணரிருங்கூந்தன்மாதர்
நிரம்பவன்கருணைவேண்டியருகுறநிலவுமன்னன்
பொருந்தழகறியவந்தப்புரமயிலனையார்போந்தார். (௩௭)

அன்னையேமுதலாரந்தவஞ்சனத்தயில்வேற்கண்ணார்
மின்னையேயனையமெய்யார்மீதொளிர்தவிசினந்தப்
பொன்னையேய்குணத்தான்றன்னைக்கண்டகங்களித்துப்போற்றிப்
பின்னையேயவரவர்க்குப்பெருமைசெய்தகத்திற்போனார். (௩௮)

வேறு.

போயாருடன்மன்புகுந்தின்னுணவுண்டுமற்றும்
வாயாமமூன்றின்மணியாதனம்வந்திவர்ந்து
சாயாதகொங்கையவர்சாமரைசார்ந்துவீச
வோயாதமேளவகைமுன்பெனவோங்கநின்றான். (௩௯)

அவ்வேலையுற்றவரசின்றிரளன்றிக்கப்ப
மொவ்வாதொடுங்கித்தரும்பாளையகாரர்தாமும்
வெவ்வாள்கரத்திற்பிடித்தேயவைவீழ்ந்தடைந்து
தெவ்வோடவிங்குந்திணிதோளனைக்காண்டல்செய்தார். (௪௰)

காலைத்துலங்கும்பலவென்றியின்காரணத்தின்
மேலுற்றகொற்றப்பொருள்யாவையுமங்கைமேவி
மாலுற்றமன்னற்கெதிர்நின்றவர்மற்றுமந்த
வேலைப்படர்ந்துதொழுதுந்தமவேலைகொண்டார். (௪௧)

முன்னேவனைந்தபடிமல்லரிணைகண்மூண்டு
சின்னேரமாடுஞ்செருவெற்றியின்றேல்விகண்டு
பின்னேயவர்க்குமுறையிற்பெறும்பேறளித்து
நன்னேயமோடுமறுபாரிசநாடினனே. (சஉ)

அங்கேதகர்களடுஞ்சிற்றமுற்றுடுதாக்குஞ்
செங்கேழ்ச்சுடிகைப்பெருவாரணஞ்சீறுபோருங்
கொங்கேய்குழலின்கழைக்கூத்தர்களாடுகூத்து
மெங்கேயுமில்லாவியப்பாமிவையாவுங்கண்டான். (சங)

அப்போதுமந்தமதமாவுடனுடன்மாவு
மெப்போதுமம்புபெருகுந்திருப்பொன்னிக்கேகித்
தப்பாதிழைத்தசிறப்பாமவையாவுந்தாங்கி
யப்பாரரையனவைதன்னகமீண்டடைந்த. (சச)

முன்போலவைகண்முடிமன்னனைக்கண்டுதாழ்ந்து
பின்போங்குகோயிற்புகுந்தின்கவளங்கள்பேணி
யன்போடளிக்கவவைவீறுடன்கொண்டுதூங்கப்
பொன்போலுமன்னன்புரிதந்ததும்பின்புரைப்பாம். (சரு)

ஈடற்றசிங்காதனமீதவனீங்கமர்ந்து
நாடற்கரும்பூச்சொரிவாணமுதலநாளு
மாடுற்றவிந்தைமகிழ்தூங்குளத்தோடுகண்டு
மாடற்பெருஞ்சிரவைவந்தியர்பாடமன்னே. (சசு)

வந்தோர்களிக்கும்வகைமெல்லிலைப்பாகுபூந்தார்
தந்தேயவர்தந்திடுமஞ்சலிதான்மணந்து
கொந்தாரலங்கல்குலவுந்தவிசின்னிழிந்தா
னந்தாயமிக்கவொலியார்வெடியாங்கெழுந்த. (சஎ)

வேறு.

தங்கமாமகிமைதங்குமத்தவிசினின்றிழிந்திடுதடம்புயன்
றுங்கமாவரையெனத்துலங்குபவனத்துளேயணுகுபோழ்தினிற்
கொங்குவார்குழலின்மங்கைமார்கள்கரலாகவத்தினெதிர்கும்பிடு
மிங்கிதத்தினொடுகொண்டிராணிகளிருக்குமாளிகையுளேகினன். ()

கண்டுமாமகிடிகண்முதற்பெரியகந்தவாரமுறைகாந்தைய
ரண்டியார்வமுடன்கும்பிடும்பொழுதிலையினிநீர்முதலரதனங்
கொண்டகோடிகமதைச்சுழற்றிவிழிவந்தகோதுகள்கழித்தபின்
றெண்டனன்னையடியிட்டணிந்ததிருவேடமத்தனையுந்தீர்த்தனன். ()

இந்தவண்ணமவனந்தமாநவமியந்திகாறுமிகவின்புற
வெந்தவெந்தவளநாடிருந்தறியவந்தயாவருமகிழ்ந்திடச்
சிந்தைதன்னிலொருபகலெனத்தினமுஞ்செய்ததன்றியிடைவந்தசோ
ரந்தமானதிருமூலநாள்பனுவலாட்டியர்ச்சனையுமாற்றினான். (௫0)

திருமகாநவமிதிதியின்காலையவன்றினமுஞ்செய்கடனிழைத்துடன்
கருமைதங்குகரவாளதற்குரியகாட்சியோடரியபூசைசெய்
தருமையானதொருசிவிகையிட்டதனையானைசேனைமுதலாம்பல
பெருமையோடுதிரைமணியெறிந்துநிதம்பெருகுபொன்னியுறவிடுத்தனன்.

கவுரிகட்டமெனுங்காவிரிக்குவடகரையனேகவிபவத்துட
னவிருமந்தவசிசென்றபின்கமழுமலரிணையவொருபந்தரிற்
றவிருருதமறைகற்பமாகவொருதரணிபற்குரியவரசுமுன்
னவிலுமத்திபரிகளினைதப்பரிவினன்றுபூசனைநடத்தினான். (௫௨)

பூசையாயபிறகங்கடைந்தபலபூமிபாலர்முதலனைவரு
மாசையாயதனைநோக்கியஞ்சலியிழைத்தபின்பவர்களின்புற
வாசமாலையொடுபாகுமெல்லிலைவழங்கியானதுமெழுந்தது
பேசொணாதபலவாரவாரமொடுபெருமகன்பவனமேகுகால். (௫௩)

அவன்குலத்தவர்களன்றுதொட்டடையுமமலதேவதையென்றறைதருங்
கவினுபொற்பதுமைகாணுமோர்சிவிகைபொன்னினாயவதுபின்னுறப்
பவனமூடுசவுந்தரியமாவிலசபன்மலர்ப்பெரியபந்தரைத்
தவளவெண்கவிகைநிழலகத்தெழுந்துதானைசூழ்வரவடைந்ததே. ()

அங்குதேன்மொழிகள்வந்திழைத்திடுநீராசனத்துவிதியாதலும்
மங்குலன்னகரமன்னனக்கொடியவாளினைப்பரிவினாலெடுத்
தெங்குமின்னிலவெறிக்குநித்திலமலர்த்தொடைத்திரள்கடொங்கிடுந்
தங்கமண்டபமதற்குளங்கலுழுதவிசின்மேலிலகவைத்தரோ. (௫௫)

கடிகையோரரையிருந்திடுங்நவமிகாலையாமெனினுமத்தினம்
படிவிளங்குகலைமாதுபூசனையும்பண்டுபோன்முறையினாற்றிமேல்
விடுசுடர்ச்சிவிகைவிழுமதக்களிறுவெங்குரப்பரிகளிவையெலா
மடலதற்குரியவாகைமாலைபுனையம்புயத்தினருச்சித்தனன். (டுசு)

நீவிசந்நிதியினிண்ணயித்தசெபமாதியாவையுநிறுத்தியே
சாலுமூவிருசுவைச்சிறப்பினுயர்சாதமன்பினுடனுண்டுமுன்
போலவேகிமணியாதனத்தினிடையிற்பொலிந்துபலபுதுமையும்
பாலுநேர்மொழியர்பாலினேர்கவரிபாலிரண்டிரட்டநோக்கினன். ()

அன்றுமாலைபரிகரிகளாதியனவாறடைந்திடுதலின்றியே
யொன்றுமங்கிசியிலேல்திபூசனையொடொளிருகங்கணவிசர்ச்சன
நன்றிழைத்தெவருமெண்ணுதற்கரியகோசவைப்பினையுநலமுற
மன்றலர்த்திரளுஞ்சந்தனத்தளறுங்கொண்டருச்சனையின்மாடியே.()

கங்குலிற்றனயபன்னியாதியர்களோடுநேமமதுகைக்கொளா
வங்கவர்க்கொளிசெய்பணிகளத்தனையுமமலதேவதையதற்கணிந்
தெங்குநேடரியபக்கணங்கனிகளின்னமிக்கனபடைத்ததிர்
மங்களம்பெருகுமாறுபத்திமிகமன்னுபூசனைநடத்தினன். (டுகூ)

மகாநவமிச்சருக்கம் முற்றிற்று.

ஆக, செய்யுள் - சசஅ.

பத்தாவது

விசயதசமிச்சருக்கம்.

அன்றங்காயபின்மறுகாலையடன்மன்ன
னென்றுஞ்செய்யுங்கன்மமனைத்துமிழைதந்து
நன்றாமெல்லாநாமகளாராதனையாற்றிப்
பின்றாரங்கள்பேணியணிந்தானவைமின்ன. (௧)

அன்றோரத்தநாழிதசமியதுவேனுந்
துன்றேரேதியுத்தரபூசைதொழுதாற்றி
நின்றதன்முன்மல்லர்கள்சோரிநிலம்வீழக்
கன்றும்போர்செய்கென்றதையேவிக்கணினுண்டான். (௨)

பின்பேதிக்குக்கூசுமவண்டம்பெரிதொன்று
தன்கைதன்னானன்குதகர்த்துப்பலிதந்து
கொன்கூர்பட்டக்கத்தியுடன்பல்கொலைவேலும்
பொன்செய்தண்டிகைக்குளிருத்திப்புனைந்தன்பின். (௩)

வடபான்மன்னும்வன்னிமரத்தின்வளமாரு
மிடமார்மண்டபங்கொளமின்னுமெழில்செய்த
கடமாவேகங்காலுறும்வாசிகளினோடுந்
தடமார்வேந்தர்தானைகள்சூழத்தனிவிட்டான். (௪)

விட்டின்சாவாவிண்மருந்தன்னவிதநானா
விட்டஞ்சேர்துப்பன்புடனார்ந்தங்கிலகும்பூண்
டொட்டின்சீர்செய்தும்பலின்மீதேசுவணம்வில்
விட்டேமின்னம்பாரியினேறிவிளங்கிப்பின். (௫)

முன்றார்வன்னிப்பொன்மரமுட்டமுரனாரும்
பின்றார்கோயில்வாயிலிருந்தேபெயர்போழ்து
சென்றாருஞ்சீர்செப்பருமாடம்பரமாக
நன்றாராங்கோரோசனைதாண்டிநணுகுற்றான். (௬)

போயங்கேனம்புண்டரிகம்மெண்கிளம்பைம்புன்
மேயும்பாயும்வெண்முயலோடுமிவையாவும்
வாயும்வேட்டம்வண்மையினுடிவலிந்தேபின்
காயுங்கானத்தவ்விலங்கெல்லாங்கடிந்திட்டான். (எ)

பின்முன்விட்டவாண்முதல்யாவும்பிணைத்துள்ள
மின்மன்வன்னிமாமரஞ்சேர்ந்துமிகுபூசை
தன்முன்செய்வித்தின்பிரசாதந்தனையார்ந்து
பொன்மென்கொங்கைப்பூவையர்காமன்பொலிவுற்றான். (அ)

வெய்யோனந்தவேந்தனிழைத்தவிதந்தானு
மெய்பாவேள்வியின்புறவாற்றவிதயங்கொண்
டையாரங்கந்தூய்மையிழைத்தற்கடைவான்போன்
மையார்மேலைவாரிதியாங்கேமறைந்தானல். (கூ)

அப்போதண்ணலாடியவாகேடகந்தோன்றுந்
துப்பார்செந்நீரின்றுளிகொண்டறுரிதத்தின்
றப்பாமேலைமாதிரமார்ந்ததகவேபோ
லப்பாலங்கிச்செக்கருமிக்கவழகிற்றால். (க0)

காலைப்போதில்வெள்ளிடைமேயக்கலந்தேகும்
பாலிற்பேசும்பைங்கிளியாதிபறவைத்தோ
டேலக்கூர்வாயின்னலகிற்றீங்கனிகவ்விக்
கோலப்பார்ப்பையெண்ணியேமீண்டகுடம்பைக்கே. (கக)

அந்திச்செக்கராகுநெருப்பைங்கணையாலே
வெந்துற்றுழுங்காமுகர்பின்னும்வெகுளாமற்
சந்திக்கன்மம்பூசுரராற்றுஞ்சலமங்கை
யெந்திப்பொங்குமக்கனல்வீயவெறிந்திட்டார். (கஉ)

ஆயர்வேயினின்னிசையோடேயடவிக்கண்
ணேயும்பல்லவங்குழைபைம்புலிவையாவு
மேயும்பல்லவானிரைமீண்டமிளிர்கண்டை
யாயின்றோசையோடுபடப்பையவைநோக்கி. (ஙக)

பேரோராட்சிவெம்மையினுண்டபெருவள்ள
லேராய்நீங்கத்தண்மையினுங்கேயிணைந்தாருஞ்
சீராய்வேறோர்செம்மலெனச்செங்கதிர்போக
வாரார்சீதவொண்கரன்கீழ்பாலுதிதந்தான். (௧௪)

செல்வத்தார்ந்தோர்நல்வினைபோகச்சிறுமைக்கண்
ணொல்கத்தாழ்ந்தோர்தீவினையோடவொளிர்ந்தன்ன
மல்கப்பூத்ததாமரைகூம்பமலரல்லி
யெல்கக்கந்நீலத்துடன்விண்டேயிலகிற்றால். (௧௫)

அங்கங்கேசென்றிச்சகம்பாடியலைதந்தே
யங்கம்பேணும்பேதையரென்னவளியீட்டம்
பங்கயந்தன்னின்மதுமுன்னம்பருகிப்பின்
செங்கேழாம்பல்வாயகம்பாடிச்செறிந்திட்ட. (௧௬)

பூமித்தேவர்பூமனைதோறுமறையோசை
தோமிற்செல்வர்தூமனையாழ்பெண்குரலோசை
யேமக்கோயிலெங்கணுமேளவகையோசை
தூமத்தோதிகண்மனந்தோறைங்கணைபூசல். (௧௭)

அக்காலேந்தலாடுதலாகாவிபவத்தின்
பொற்காம்புள்ளபுத்துருக்கின்னெய்புகவோங்கி
மிக்காநாறுந்தீபிகைபல்லியாமினியெல்லி
னொக்காமின்னமீண்டுயர்கோயிலுழைபுக்கான். (௧௮)

புக்கங்கேமுன்பூந்தொடைநாலும்பொருவற்ற
சொர்க்கம்போன்மின்மண்டபநாப்பண்சொலிவுற்ற
கக்குங்காந்திப்பன்மணியார்ந்தகனகத்தின்
பொக்கும்பத்திராசனமேறிப்பொலிந்தன்பின். (௧௯)

ஆதித்திதியத்தவிசேறியவண்கண்ட
வீதம்மெல்லாங்காண்குறும்வேலைவெருகாலா
யோதும்மந்தவுற்சவவோலைக்குரியோன்வந்
தாதன்முன்பெல்லாம்வரைந்தேற்கவறைந்தானால். (௨௦)

அன்னோற்காடையாபரணாதிபலதந்து
பின்னைபட்டக்கத்தியொடந்தப்பிறங்கோலை
தன்னைப்பொன்செய்மின்றடறிட்டுத்தகுநீலி
மன்னுங்கோயிறன்னிலமைக்கவழங்கிப்பின். (உக)

காணிக்கைகைக்கும்பிடுமீந்தோர்களிதூங்கப்
பேணிப்பூந்தார்மெல்லிலையாதிபெரிதீந்து
காணத்துண்கலந்தனிலின்னூண்கலந்துண்டு
மாணப்பூமென்பள்ளியின்மன்னிச்சயனித்தான். (உஉ)

பின்னாளங்கங்கேயிருந்தந்தப்பெருநாட்கே
யுன்னாவந்தவேசையராதியுயர்பாணர்
மன்னேமன்னேயென்னமணிப்பூண்மலராரும்
பொன்னேராடையோடுபொன்பல்லபுகழ்ந்தீந்தான். (உங)

மற்றும்மல்லர்மற்பொருபோழ்தின்மனங்கொண்ட
செற்றந்தீர்தற்கொன்றுபொருத்திச்செறிதீம்பா
லுற்றன்பட்டபல்லுணவுண்பித்தொளிவீசும்
பொற்றங்கப்பூண்பொற்குவையோடும்விடைதந்தான். (உச)

வேறு.

முன்னநூல்வல்லோர்சொற்றமுறைமையிற்றுடக்கின்சேடந்
தன்னையென்றகற்றியிந்தத்தணப்பருஞ்சிறப்பின்முன்ன
மன்னிடிற்றுடக்குநந்தமரபுளாரதனைநீத்திப்
பன்னரும்விழாவைமுற்றிப்பண்புறுந்தசமிதன்னில். (உரு)

கங்குலின்றிருவோலக்கங்கழிந்துகங்கணத்தைநீத்துத்
தங்குறுமசுத்தந்தாங்கிமுறைமையிற்றணக்கவென்று
தங்குலத்தவர்முன்காணவரமனைதனிலேமன்னும்
பொன்கணக்கிடையேநன்குதுலங்குறப்பொறிப்பித்தானால். (உசு)

அம்மகாநவமியேறுமாதனம்பொறைநேர்பட்டக்
கைம்மலைபரிவாளோடுநான்கையுங்கமழுந்தூபஞ்
செம்மலர்முதலவின்னசிறப்புறும்பொருள்கள்கொண்டு
பொம்மலிற்றினமும்பூசைபுரியுமாநிருமித்தானே. (உஎ)

பாம்பணையரங்கன்கோயிற்பைம்பொனூர்சிகரிமுன்பே
தான்புதிதமைத்துமின்னுந்தடம்பெரும்பவனத்துச்சி
வாம்பரித்திரளான்வெள்ளிவாரமொன்றெழுகாதாங்கே
யாம்பலவிபவத்தோலக்கங்கொளவமைத்துச்செய்தான். (உஅ)

விசயதசமிச்சருக்கம் முற்றிற்று.

ஆக, செய்யுள் - ௨எ௬.

பதினோராவது

அறம்புரிசருக்கம்.

தங்குலத்தவர்கள்போற்றுந்தாமரைவிழியோன்மாயை
திங்களின்சடையானஞ்சன்கூட்டினிற்றிகழுமைசூர்
பங்கயத்தணங்கினாதன்பட்டணத்தரங்கன்மேலைப்
பொங்குவெங்கோட்டைச்செல்வனாதியோர்பொலிந்தகோயில். (௧)

முன்னினும்பெரியவாகிமுடிபொனிற்சிகரியோங்கிப்
பொன்னுலகளவிச்சூழும்பொருப்பெனவெயில்கள்பொங்க
மின்னுபொற்கம்பமோராயிரங்களுநூறுமேவு
மன்னுமண்டபநெருங்கிப்பொலிந்திடப்புரிந்துமற்றும். (௨)

தினமொடுபக்கந்திங்களாண்டுகளிவற்றிற்செய்யு
மனமுறுஞ்சிறப்பிற்கேய்ந்தமானியம்பெருகவிட்டுக்
கனமுறுந்திருவாராதனஞ்செயக்கலன்களேர்வா
கனங்களுமுயர்ந்தசேகிற்கனகத்தினிழைத்துப்பின்னும். (௩)

சிறுமியர்நகிலமென்னச்செவ்விளநீர்கடுங்குஞ்
செறிதருந்தெங்கின்சாலைச்சேண்மறுகிடையினோடும்
பொறைநிகரிரதஞ்செம்பொன்வெண்பொனிற்புரிவித்தின்ன
வறைதரற்கரியகோயிற்பணிபலவமைத்தானன்றே. (௪)

திருமகாநவமிதன்னிற்காளராத்திரியென்றோதும்
பெருமகாவிழாவினீலிதனக்கரும்பிறங்குவட்டி
லுருமகாவிரத்தினத்தின்குறவஞ்சிக்கூடையொன்றுந்
தருமகாரியமாயாங்கோர்கைச்சிலம்பதுவுஞ்சாத்தி. (௫)

அவடிருநிலயக்கந்தராயகோபுரங்களாற்ற
விவர்மனத்தனாய்மிக்கவிடைவழிப்புறத்தினான்கு
நவிலுறும்வாயிற்கண்ணுநாகத்தைத்தைவந்தார
நிவந்துசித்திரங்களார்ந்தசாகைக்கன்னிறுத்தினனால். (௬)

நஞ்சனங்கூட்டில்வாழுநதிபுனைசடிலத்தாற்குச்
செஞ்செவேயென்னமின்னுஞ்செறிமணிமுழுதுமார்ந்தே
யஞ்சுறுநறுவிபூதியழகுறக்குழைத்திட்டன்ன
வெஞ்சவில்வரைசேர்செம்பொற்கவசமொன்றிழைத்திட்டானல். (எ)

ஒளிமணிச்சுடிகையோராயிரமுள்ளவுரகநாத
னளியெழிலுருவாமந்தயாதவகிரியினண்ணுங்
கிளிமொழிக்கனகமாலினிக்குமுன்கிடைத்தசெல்வற்
கிளவெயிலெறிக்கும்வைரமுடியெனவிலகும்வண்ணம். (அ)

வெள்ளெனவெளுத்தபாலோர்கலம்பெய்தகலத்தின்வீழ்த்தின்
றெள்ளுறுமொளியினந்தப்பாலெலாஞ்சிவந்துதோன்று
மெள்ளருமணியனேகமிழைத்ததோர்மகுடஞ்செய்வித்
துள்ளமதுவந்திராசமுடியெனவொருபேரிட்டான். (கூ)

பங்குனித்திருவிழாவிற்பாற்கடலிருந்துபோந்த
பொங்குமம்முடிபுனைந்துகளைந்தபின்பொருவிலிந்தத்
தங்கநன்முடியைச்சாத்தியுற்சவந்தணந்தபின்னர்ப்
பொங்குபட்டணத்தேதன்மின்கோயிற்கட்புகுதச்செய்தான். (க0)

அத்திருப்பூசநாளினிரவின்கட்புனையுமந்தப்
பத்திரிக்கிறைவன்சூட்டும்பகருமுடியும்பின்னர்
முத்திரித்தனேகமேளதாளங்கண்முழங்கவீரர்
கத்தியுங்கரமுமாகக்கணக்கிடற்கரியர்சூழ. (கக)

தடத்தினின்முழுதுமாங்காங்கமைத்தார்ந்ததண்ணென்பந்த
ரிடத்தினிலிழைக்குமாராதனையுபசரணையென்று
கடைத்தலைமுரசுறங்காக்கடிகொடன்னரணஞ்சார
வடித்தலையுடையவைவேல்வள்ளலீங்கிழைத்துப்பின்னும். (கஉ)

அட்டதீர்த்தத்திலுற்சவம்முதலரியவாமேம்
பட்டசிற்சிறப்பிற்கேயிராசமாமுடியேபண்பின்
விட்டரண்மனையையேகிவிளங்கியப்பெருமான்சென்னிக்
கட்டுடன்மீண்டுதன்சிர்க்கடிநகர்படியச்செய்தான். (கரு)

துருக்கமாநாய்ச்சியாரின்றார்த்தனுக்கிணையமேலு
முருக்கமாவணைந்தேயாதியுயர்சனற்குமரன்பத்திப்
பெருக்கமாப்பணிந்தநாராயணன்றிருப்பிறங்குமார்பிற்
குருக்குமாற்றுயர்ந்ததங்கத்தொளிர்மணிக்கவசமிட்டான். (கச)

நாரணபுரத்தைச்சூழுநான்கரண்கடிகொள்வாயிற்
காரராம்பூசைசெய்வோர்கலந்துகுத்திரத்திற்சூழ்ந்தே
யோரொருகடையின்மூன்றுதிங்களொவ்வொருவராகப்
பேரமன்பதைகள்காத்துமூன்றையுமடைத்துப்பின்னும். (கரு)

செல்வராயனுக்குச்சீராய்மிலேச்சபூபதியன்றீந்த
வில்வளச்சுனையின்றீந்தேன்விழுத்தகப்பெருகுமாற்றா
னெல்வயல்வளரப்பாகனிரைதழைத்தடருமூர்கள்
சொல்வதற்கினியபல்லதாங்களேசுவைத்துமற்றும். (கசு)

பங்கயக்கண்ணன்பாதந்தரிசிக்கப்படருவோர்க்கு
மங்களாரத்தியோடேமனமுறச்சேவைசெய்வித்
தங்கலுழ்ப்பிரசாதங்களடைவுடனளித்தலின்றி
யிங்கிவரிழைக்குந்தீமையாவையுஞ்செவியினேற்றான். (கஎ)

கண்ணினிலுரைத்துக்காதினோக்கிடுங்குரிசிலாங்கே
யண்ணலம்படப்பையெல்லாமவரினின்றகற்றிநான்கு
கண்ணகன்வாயிலூடேகங்குலும்பகலுமென்று
மண்ணவர்கலந்தியங்கமகிழ்வுடனறைந்துமற்றும். (கஅ)

மணிவண்ணன்மலர்த்தாள்காணவந்தவர்க்கவர்கள்சேவை
யணவுடன்புரிவித்தன்னோருச்சனையதுவேயாற்றத்
துணிவுறவிசைத்துநான்குதோரணச்சிகரிவாயில்
பணிவுடன்காக்கவேறுநால்வரைப்பணித்துப்பின்னும். (ககூ)

திருமலையதன்மேல்வெள்ளைதீற்றியவரையனேக
நிரைநிரையமைத்ததொப்பநெடுமாடம்பலசமைத்துப்
புரையிலாமறையேயோதும்பூமிதேவர்களுக்கன்பின்
வரையிலாப்பொருள்களோடும்வழங்கினனென்பமாதோ. (உ0)

அன்றியுநஞ்சன்கூடிராமநாதபுரமந்தங்
துன்றிடுந்திருமுக்கூடலாதியாங்தொலைவில்செல்வ
மொன்றியபதிகளோரமொழுகுறுநதியின்றீரத்
தென்றுமந்தணர்வைதீகமியற்றுமண்டபமுமின்னும். (௨௧)

குழவியுந்துனியொன்றின்றியிழிந்தேறுங்கொள்கைத்தாகி
யழகுறுஞ்சோபானங்களமைத்தக்கிராரம்பல்ல
விழைவுறவிழைத்தில்வாழ்க்கைவிழுத்தகநடத்தற்கேய்ந்த
செழிதரின்மானியத்தின்வைதிகர்செழிக்கத்தந்தான். (௨௨)

இடைத்துறையிடத்துமீங்குப்புகலுதற்கரியவாற்றி
யடைக்குநற்கதியைமூழ்கினர்க்கபுட்கரணிக்கேய்ந்த
படித்துறைதுடைத்தகல்விற்பண்புறவியற்றியாங்கே
விடுக்ககமியலாமன்னுமண்டபங்குயிற்றுவித்தான். (௨௩)

மேலிற்கண்மேலைக்கோட்டைநிமலற்குச்சிறப்பிற்கேய்ந்த
சோலிக்குந்துகிலிகைத்தோடெங்கணுநிறையத்தோய்ந்த
பாலிக்குங்கசக்கப்பேசும்பாவைமாரெனவேயுள்ள
மாலிக்கும்படியேயோங்குமண்டபமனேகஞ்செய்தான். (௨௪)

அடியிடைமுடிகடம்மான்மும்மையினுலகுமாரும்
வடுவறுநான்கிராயகோபுரம்வளமாரந்தத்
தடங்கொண்டமேலைக்கோட்டைதனக்கமைத்திடத்துணிந்து
நெடியபொற்கம்பநாட்டியடிப்படைநிருமித்தானால். (௨௫)

கொடுமுடிகடக்கலொல்லாக்குரங்கிசார்புரைந்துசெல்லு
மடைபவர்தமக்கானந்தப்பரம்பதமதுவாய்த்தோன்றும்
வடமலைமுகட்டிலிந்தவான்கலிகடிந்துவாழ்வேங்
கடமுடையவற்குமின்கைங்கரியங்களிழைக்கவெண்ணி. (௨௬)

தண்ணிலாவெறிக்குநித்திலத்தினிலிழைத்ததாமத்
தொண்ணறும்பவளக்காம்பேர்கவிகையின்சுருட்டியோடு
மெண்ணரும்பொருளுமாராதனஞ்செயவியைந்தயாவு
மண்ணியமணிப்பூண்கோடியுடன்மனமகிழ்ந்துதந்தும். (௨௭)

கங்குலும்பகலுநந்தாக்கமழ்தருசுடர்களோங்கச்
சங்கடமகற்றுநாமசகச்சிரார்ச்சனையுமாடிப்
பொங்குவிண்ணவருங்காணப்பொங்கலேமுதலாமின்பந்
தங்குநைவேத்தியங்கடாந்தினமளிக்கமுன்னி. (உஅ)

சொல்வினைக்கறிக்கவந்தபிணையினமதனைச்சூழ்ந்த
மல்லலங்கழனிநீழலளிப்புறுமடவார்கண்கட்
கொல்லுறேமெனவேநாணியொருவிடும்வயல்களார்ந்த
பல்லநீர்வளத்தவூர்கள்பரிவுடனதற்கேயீந்தான். (உகூ)

மற்றுமும்மதத்தோரானமடபதிமுதலோராங்கே
யுற்றவர்தமக்குத்தக்கவூணுடைமுதலவென்றும்
பற்றறுதமையவாண்டின்மும்முறைவிளைந்துபல்கும்
வற்றுறுவளத்தகால்வாய்வயல்பலவழங்கினுனல். (௩0)

அறம்புரிசருக்கம் முற்றிற்று.

ஆக, செய்யுள் - ௫0௬.

பன்னிரண்டாவது

சீர் திருத் தச் சருக்கம்.

இன்னுமித்தகைத்தருமங்களெண்ணிலவிழைத்த
மன்னர்மன்னவன்கோயிலுந்தேயமுந்திருந்த
முன்னிமுன்னர்வெங்குறும்பரைமுறுக்கியேவென்ற
பொன்னாடுகளடங்குறப்புந்தியினினைந்தான். (௧)

ஆதியன்னவர்கொள்கையையணிவியேயவற்றி
னீதிசேர்வரியொழுகுறுதரமனைநெருங்கத்
தீதறும்பெரும்பிரிவொடுசிறுமையுந்தெரியப்
பேதமாடியேபெயர்களுமவற்றினுக்களித்தான். (௨)

ஆருநைவுருவாறிலொன்றடைவுடன்றெருக்க
வீரமின்றுவாய்கைகளினெளியரையொறுக்குஞ்
சீரிலாரையுஞ்செய்களவினரையேமுதலாங்
காரியன்னவர்தம்மையுங்கண்டவன்கடிய. (௩)

ஈதுநாளையென்றொருவரொண்பொருளடைந்தின்று
வாதுகூறிமேல்வழங்கிடாதவரையுமொறுக்கப்
போதுமானபல்கலையொடுதருமநூல்புணர்ந்த
நீதியாளரைப்பலபடநிறுத்தினனிருபன். (௪)

மற்றும்மந்திரத்திழைக்குறுமன்னர்தந்தொழிலுக்
குற்றவேறுபல்லுரத்தினர்தமையவருளுற்றும்
பொற்றடந்தனையொருவுகையின்றிநேர்புரிய
மற்றடம்புயனிவ்வணநிறுத்தினன்மகிழ. (௫)

வாளெடுப்பவன்செம்புபைவலக்கரத்தெடுப்போன்
கோளடுத்தகாளாஞ்சியன்படிகமேகொள்வோன்
வாளடுத்தபேர்முகுரமேவகையுறப்பிடிப்போன்
ரூளடைத்தபொற்குஞ்சமுந்தாங்குவோன்மற்றும். (௬)

காந்துபொன்மணிக்கால்செய்வட்டங்கரங்கொள்வோ
னேந்திவீசுபாவாடைவெண்பட்டினிலியைந்தோன்
சாந்துபூவணைபாதுகைக்குரியவர்தயையின்
சேர்ந்துபாங்கரினிரட்டுவெண்கவரிகள்செறிந்தோர். (௭)

பின்னுமன்னுவெம்பிடாரமேயுடையவனமுதந்
துன்னுபொற்கரகத்தினன்றாக்குநீர்த்தொழிலன்
மின்னுபூம்பலசிவிறியன்மிளிர்திரைக்குரியோன்
மன்னுதூயநீர்மனைமடைப்பள்ளிகட்கமைவோன். (௮)

அவசரத்தினுக்குரியவனலகிடுந்தொழிலன்
றுவசமோங்குறுங்கடைகளிற்றொலைவறப்புரப்போர்
கவசமார்ந்தவராதியரவரிவர்களைநேர்
திவசமுந்தமதிறம்பிறழ்ந்திடுதலின்றொழுக. (௯)

காணுமாறொருகருத்தினன்றலைவனுமவன்க
ணேணிலாம்பலவேவலாளரையுமேற்படுத்தி
மாணிலாம்பலவேதனமவர்கொளமடங்க
ஞணிலாம்புயநரபதியளித்தனன்களிக்க. (௧௦)

அப்புறம்புவிக்கதிபனுமொருபகலவையாம்
பொற்புறந்தரத்தமைச்சராமுடுக்களிற்பொருந்தி
யொப்பறும்பனிகிரணனையுறழ்ந்துபேர்முரசத்
திப்பெருங்குரலெனமுகமலர்ந்திவையிசைத்தான். (௧௧)

சூரரம்பினிற்பெருந்திறற்சூழ்ச்சியீரினியிச்
சீருறும்பொழிலாட்சியைப்பெருக்கிடச்செகுக்கும்
வீரரார்ந்திடும்படையையும்விருத்திசெய்ததற்கோர்
பேரருந்திறலதிபனையமைப்பதேபெரிதால். (௧௨)

ஆதிநந்திருமரபினுக்காதியாயெழுந்த
கோதறும்மெதுராயனுங்கொடுமையேநினைந்த
காதகன்கருமாரநாயகன்றனைக்களைந்த
போதிருந்தமைத்திலரிவண்பொருபடைக்கிறையை. (௧௩)

எம்முடன்பிறந்தாண் மகன்களலேயிலியைந்த
செம்மைசேர்கரிகான் மல்லராசனுஞ்சிறந்த
கொம்மைகூரறிவாளனுய்க்குலவுறுமதனல்
வெம்மைசேர்படைவேந்தெனவவனையீங்கிழைத்தும். (கச)

என்றுகூறலுமவரதற்கியைதரவிறைவ
னன்றுதூதரைவிடுத்தவற்கொணர்ந்தருள்சுரந்தே
யொன்றுமோரையிற்றளபதிப்பட்டநன்குதவா
நன்றுமின்னதற்காழியுநகைபெறவளித்தான். (கரு)

வேறு.

பின்பவனுழியைப்பெற்றுவேந்தயா
னென்பெருநகர்தனக்கேகிமீள்குவன்
மின்புரைபொழுதிலென்றிசைக்கமீளியு
மன்புடனெருப்படவகன்றுபோகினன். (கசு)

போயவனெடும்பகல்பொருந்தியங்ஙனே
சேயதண்பணையிளந்தூரிற்சேர்ந்துதன்
னேயமாமாமனதகத்துநின்றுபின்
பேயனைநிகர்த்தொருசிறுமைபேணியே. (கஎ)

தனக்குறுபேரனோர்சிறுவன்றன்னுழை
முனைத்தவமுண்மையிற்கிடைத்தமோதிரந்
தனைப்பெருமகன்புரியுதவிதன்னமு
நினைப்புறுதவன்கொளவளித்துநீக்கினன். (கஅ)

கண்டதுகாவலனமைச்சர்காளிவன்
கொண்டனன்குலத்தினுக்குரியசிலமே
பண்டையததனையான்பகன்றுபற்றருந்
தண்டினுக்கிறையெனுந்தனத்தைத்தந்தனன். (ககூ)

எற்குடன்பிறந்தவள்கணவனின்னவற்
கற்புடனுயிர்த்திடுந்தந்தையாதலாற்
பொற்புறுங்களலேயைப்புரிந்துதந்தனன்
மற்பெருந்தோளினீர்மகிழ்ந்துமுன்னரோ. (உ0)

அவன்விழைந்தங்கிமுனடைந்தபெண்டிருட்
குவளைநேர்மலர்விழிமுத்தகொம்பனை
ளுவகையினுயிர்த்திடுமகனையோதுவ
ரெவர்களுமிலக்குமிகாந்தனென்னவே. (உ௧)

அப்புதல்வனுந்தனதரியதாதைபின்
றுப்பிதழரம்பையர்துறக்கமெய்தலு
மெய்ப்பொடுமிளையவர்தமையுமூனையு
மொப்புறவுலகினர்ப்புரந்துவந்தனன். (உஉ)

வேறு.

ஆங்கவனுமொழுகுதலுமீன்றவனுக்கிளையாளோ
ரயில்வேற்கண்ணாள்
பாங்குபெறுந்தகரோன்பெற்றெடுத்தமுப்புதல்வர்
பரிவொன்றில்லார்
மாங்கனியின்சாறொழுகமலிதருசெந்நெற்பணைசூழ்
களஸைதன்னைத்
தாங்கையுறச்சூழ்ந்தவனைக்குத்திரமாயிடநோக்கித்
தகர்த்துக்கொன்றார். (உ௩)

கொன்றங்கேயெற்குரியசோதரியாந்தேவாசம்
மணியென்கோதை
யன்றளித்தபுத்திரனுமல்லாராசன்றனையு
மைந்தாமாண்டிற்
கன்றிவதைசெயக்கருதித்துருவுகையிலஃதுணர்ந்தோர்
கரவிற்செப்ப
நன்றுகுலைகுலைந்தோடிப்பிற்குறும்பர்சேரிதனை
யரிதினண்ணி. (உ௪)

ஈரமுளவொருகுறும்பன்மனையொளிக்கவவனுமிவ
னென்முன்வந்த
காரளகத்தமக்கைமகனென்றுணர்ந்துகடிதவனைக்
கைக்கொண்டேகிக்
கூரிருளில்விடியுமுனமெனதகத்திற்கொணர்ந்தளித்துக்
கூறயாவும்
பேருவகையொடுகுறும்பற்கிணையரியபேறளித்துப்
போக்கிப்பின்னும். (உ௫)

மருமாற்றுக்கல்விதனைப்பயிற்றுவித்தேயுபநயன
மறையாருற்றி
யுரியபருவந்தனிலோரொண்டொடியைவிழைவினுற
வதுவைமுற்று
முரிதரவம்மூவரையும்புடைத்தகற்றிக்களலையெனு
மூதூர்தன்னை
மருவியவன்வாழ்வண்ணமற்றளித்தேனுங்கவனு
மகிழ்வின்வைகும். (உ௬)

அக்கொடியமரபிடையேபிறந்திடுமிக்கசட்டனுக்கிங்
கரியபேற்றைத்
தக்கதலதளித்ததியாணிதுநிற்கச்சாற்றுவலின்
னென்றுங்கேண்மி
னெக்கக்கலைபயின்றாக்கமுயர்தரமாற்றலரஞ்சு
முருமேறன்னன்
றக்ககுணதனபெட்டதரசனுக்குத்தருதுமந்தச்
சிறப்பையென்றான். (உ௭)

என்றிறைவனியம்புதலுஞ்சூழ்வோருந்தேர்ந்திதுவே
யியைபாமென்ன
மன்றலந்தார்மன்னவனுமவற்கொணராநளவருட
மாகசுத்த
பஞ்சமியிற்சேனதிபதிப்பட்டம்பரிந்தளிக்க
வவனுந்தாங்கி
வென்றிதரப்புரவலற்குவேண்டாரைத்துரந்துமிக
விழைந்தானன்றே. (உ௮)

மற்றவனூர்கலிபுரண்டதெனப்படையைத்திரட்டியெழூந்
தேகிமானக்
கொற்றமொடும்பெரியபட்டணங்குறுகிக்குறுகானஞ்
சுண்டான்றன்னைச்
சுற்றமொடும்பொருதிரியத்துரந்தொழித்துத்தொல்வளஞ்சேர்
மாவத்தூரை
வெற்றமொடுங்கைக்கொணராமீண்டடைந்துவேந்தனைக்கண்
டிறைஞ்சினனல். (உ௯)

வேறு.

கண்டுகாவலன்சேனைமன்னன்றிறல்
கொண்டுமோதமுங்கொள்கெனப்பல்சிறப்
பெண்டிருக்கருத்தோருடனேய்ந்தளித்
துண்டுபோகமுவந்தனனென்பவே. (௩௦)

வென்றநாடுகடோறும்விழுத்திரை
சென்றளித்துச்செருக்கிலராய்நலந்
துன்றுபாளையகாரரிற்றுண்டரை
நன்றூறுக்கியடக்குபுநாடொறும். (௩௧)

கவிகைநீழலமர்ந்துகவின்பெறும்
புவிபரப்புளதெங்கும்புரைபட
நவநவம்படுசெய்திகளூநற்
செவிகள்கண்ணெனக்கண்டுதிருத்தியே. (௩௨)

நீதியாலளவிட்டிடநேர்கிலா
வேதமற்றபொருள்பலவீட்டுறு
வாதுலர்க்குமளித்திடலாதியாங்
கோதறுஞ்செலவிட்டனன்கூர்ந்தரோ. (௩௩)

பொன்னிரப்புமறைகளைப்பூரியா
மன்னியாடுநெடுநிலமண்ணெலாம்
பன்னிநீதியின்பாடுபுகழ்தரத்
தன்னனுடுதழைக்கப்புரந்தனன். (௩௪)

வேறு.

ஈங்குப்புரக்குமிகலரையனிணையில்வாராணசிவிறலைப்
பாங்கிற்பகருமபுராணமதாங்காசிகண்டந்தனிலுலகத்
தோங்கிப்பொலியுமுயர்தலங்கட்குயர்ந்தேயுள்ளதெதுகிரியே
நீங்கற்கரியதிருநாராயணனேநிகரிற்பரம்பொருளாம். (௩௫)

என்றேயிமவான்றிருமகளுக்கரனுராய்ந்தங்கியம்பியதை
நன்றேசெவியுற்றையமொடுநவைசேர்விபரீதமுமகல
வன்றேதொடங்கிமெய்யுணர்வேயகத்திற்கிளரவப்பெரிய
குன்றேய்முடியிற்குலவுபரன்கழலேயன்பிற்குறிக்கொண்டான். ()

கொள்ளாவந்தக்கொடுமுடியிற்குருமாமணியும்பீதகமு
நள்ளாவில்விட்டிலகுபலநாட்டுங்காலார்மண்டபமும்
புள்ளாரிறையின்கொடியாடுவிமானம்பொலியுமுள்ளகமு
மெள்ளாவின்னும்பலவிடமுமெங்கும்பொதுளவிழைத்துப்பின். ௩௭

சொல்லற்கரியவெழில்குடிசேர்துருக்கன்பாவைத்துணைமுலையார்
செல்வப்பிள்ளைக்கெதுகிரிவல்லியெனென்செல்வத்தாயார்க்கும்
வில்லிற்றிகழுமணிகலங்கள்பலவும்விலையில்வெண்பட்டும்
மல்லிற்பெருகுமலையார்தோண்மன்னன்மகிழ்வினளித்தனனால். ௩௮

முன்னாளரசமுறைகொண்டேமொழிதற்கரியதிருப்பணிக
டென்னாதெனவென்றளிமுரலுந்தேனார்பொதும்பரெதுகிரியாற்
குன்னாவிழைத்ததுண்டெனினுமுயரார்கதியிற்புகுதரவிங்
கென்னாலறைதற்கரியசிறப்பின்னும்வரையின்றிழைத்ததற்பின். ()

ஆராதனையேயாற்றுபவரருநீராடிப்புறம்பகமு
நீரான்வாய்மைபாற்றாய்மைநேர்ந்தேநிமலன்மொழிந்தருளு
மேரார்பாஞ்சராத்திரமாநெறியேகாலமிரண்டிடையுஞ்
சீராராராதனமிழையாச்செப்பற்கரியவிபவமுடன். (௪௦)

விண்ணாருணவும்விழுப்பமறும்விதமோராறுசுவையமுதும்]
பண்ணாவெதிரிற்படைத்தருத்திப்பரமன்பூசைநடந்ததற்பின்
றண்ணார்துளவதீர்த்தமொடுதகுமப்பிரசாதங்களெலாம்
பண்ணார்தன்மாளிகைநாளும்பரிவிற்செறியப்பணித்தனனே. (௪௧)

நஞ்சார்பேயின்முலையினுயிர்நகையிற்பருகுநாரணனார்க்
கஞ்சாரிரவின்விதிப்படியேயாராதனமங்கனுதினமு
மெஞ்சாதாற்றித்தளிகையெலாமியல்பாயமுதுசெய்தருளுஞ்
செஞ்சாமத்திற்பரவையெனத்தெழிக்கும்பலதூரியமுழக்கம். (௪௨)

முடியுந்தலத்திற்சினகரத்துண்முழக்குந்திறமேவேறுபல
விடியினியம்பவிவ்வணமேயெழிலாந்தன்மந்திரமளவும்
புடையுண்டதிர்ந்தப்புயல்வண்ணனமுதுசெய்யும்பொழுதுணரும்
படியேநாளுந்தரந்தரமாய்ப்பரிவினிழைக்கப்பணித்தனனால். (௪௩)

புலரியெழுந்துசெய்கடன்கள்புரையின்ருற்றிப்புந்தியுணர்
வலவர்முதலோர்வளைந்துறையமணியாரரியாதனத்திருந்து
நலிவின்றுயிர்கணகையுறுவானன்காராய்ந்துதொழினடத்து
மளவிற்றிருநாரணனமுதங்கயிலும்பணைகள்செவிசேரா. (சச)

பொருக்கென்றெழுந்துபுகலரியவனப்பிற்றன்மாளிகைபொலியுந்
திருக்கோண்மாலின்படங்களெலாந்திகழுங்கரத்தானருச்சித்தே
நிரைக்கொண்டெழுந்தவதிதியரைநேயம்பெருகவாதரியா
மருக்கொண்மாலையவன்பிறகேநாளுமயின்றுமகிழுவனும். (சரு)

தண்ணந்துளவமுடிமாயன்றனக்கிங்கேகாதசியுணவை
யுண்ணுந்தொழிலையொருவியுளாருழையேயுள்ளவுவப்பயலி
னண்ணுந்திறனின்றெனத்தேர்ந்தந்நாடற்கரியவிரதமென
வெண்ணும்பயனுறெழில்வேள்விபரிவினிழைக்கப்புகுந்ததற்பின். ()

ஏகாதசியின்வைகறையிலிமையாநாட்டத்தவர்நாளும்
பாகார்மொழியிற்பைந்தொடியாருடனேபடர்ந்தைந்தருவின்மலர்
நாகாசனவாகனனடியினல்கியருச்சித்தொழுகுமுயர்
சேகார்செம்பொற்றுதின்முடியெதுமாவரையைச்சேர்தருமே. (சஎ)

சேராவங்கைம்பவமேனுஞ்சிந்தித்திடினுமிகந்தொழியு
நீரார்கலியாணியையாதிநிலவும்புனிததீர்த்தமெலா
மேராயாடியகமருடணத்தினியைந்தவங்கமதி
னீராருயமட்குறியுமிலகச்சாத்தியெழின்மறையின். (சஅ)

பற்றேரிரண்டுமகன்றனுப்பரமன்றிருநாரணனடியி
னெற்றேய்பொன்மாமெளலிபடவிறைஞ்சிப்பல்காலெழுந்தேத்தி
மற்றேதரியவுலகின்றமரோர்ள்பாதமுதலாய
கற்றேதரியவாழ்வாராரியர்கள்கழலுங்கண்டிறைஞ்சி. (சகூ)

அரியேபரமென்பதுநாட்டும்பொன்னன்மகனுராதரியா
வருகாவானமளவுகிரியகமேயலங்குவித்தநர
கரியேர்பாததாமரையுமிவர்ந்துதொழுதுகண்பனிநீ
ருருகாவுள்ளமுடனணைப்பவுலையாவிறலையுறப்பரவி. (ருo)

அற்றையிரவினத்தலத்தினங்கண்படைகொள்ளாதமலன்
கொற்றம்பெருகுஞ்சித்திரமார்கதைகள்பல்லகுரவர்சொல
வுற்றின்செவிவிண்மணிகீழ்பாலுதயஞ்செயுமுனும்பர்களுங்
குற்றங்கடியுங்கலியாணிக்குளிரும்புனலிற்குடைந்தெழுந்தே. (௫௧)

ஈராறங்கத்திடைக்கலுழனேரார்வெள்ளைத்தீவதனின்
றோராமுன்னமுலகுய்வானருளிக்கொணர்ந்தங்குறவமைத்த
சீரார்திருமண்சிறக்கவணிந்தன்றுந்திருநாரணற்பழிச்சி
யாராவன்பினடிப்புனலுந்துளவுமுதலவருந்திப்பின். (௫௨)

முன்னேமொழியாதொருதிருவைணவரின்றிருமாளிகைபுக்கு
நன்னேயமுடனவராருநயத்தற்குறும்பாரணைபுரிந்த
பின்னேபகவற்பாகவதசேடந்தன்னைப்பெரிதயிலா
வென்னேநுந்தம்மில்வாழ்க்கையியல்பென்றவரைப்பரிந்துசவும். ()

கேட்டேயவரினிலைமையெலாங்கிளருந்தானக்களிறன்னான்
வேட்டேயொவ்வோர்துவாதசியும்விரும்பியுண்ணுமாளிகையார்க்
கோட்டாதோடுமொன்னலர்கட்கரியேறனையானவர்குறையை
வாட்டாவகையேயொழிக்குமரண்மனைவாய்வந்தென்றறைகுவரால்.

வேறு.

அவ்வாறவனரியினன்பர்சிகாமணியாய்
வெவ்வாள்வலியதனின்வேண்டாரைத்தானடக்கித்
துவ்வாவுயரின்பந்தோன்றுபலநாளகலத்
தெவ்வாமெனவொருநோய்திண்மையொடுவந்ததென்ப. ()

வந்தவந்தவாமயந்தன்வாழுயிரைவாங்காமே
யிந்தமுறையேகாதென்றெண்ணியெழிற்கோரகமா
மந்தநகைவீராசம்மணியென்மனைவியையு
முந்துதளபதியாமொய்ம்பனையுங்கூய்மொழியும். (௫௬)

இன்னரசராசவுடையானேயெழுவாயாம்
பொன்பொருவுமுப்புதல்வர்புக்கார்குடிதுறக்கம்
முன்னவனின்மொய்குழலார்மூவர்மனையாட்டியரு
ளின்னகையோரேந்திழையேயீன்றாளொருசேயை. (௫௭)

அம்மைந்தற்காமபிதானஞ்சாமராயனென
வெம்மைந்துடையாருமேன்றியம்பப்பேரளித்துச்
செம்மைந்துடைத்திருத்தஞ்செய்துமுந்நூல்பூண்டதன்பின்
மெய்ம்மைந்துறுகலைகண்மேவரயானுற்றுவித்தே. (ருஅ)

நீலத்திடைவிழியும்பாலினிடைநேர்மொழியுஞ்
சாலப்படைத்தவிருகன்னியரைத்தான்மணந்து
கோலத்துடனமையக்குற்றமொரீஇயாற்றுவித்தே
நூலிற்பெருகியநீர்நுண்பொருள்கண்மற்றளித்தே (ருகூ)

பின்னுங்கலைபெருக்கிப்பெட்பினெடுமிவ்வரசைப்
பன்னும்படியுலகம்பரித்தொழுகப்பன்மணிசேர்
பொன்னன்முடிசூட்டிப்புகலுமவனுணைநெறி
மன்னுமின்களென்றறையாமற்றுமுணர்ந்துரைப்பான். (சுO)

காம்பாருமென்புயத்தென்காதலிலையாளாங்
தீம்பாலினின்கிளவிச்செந்திருவினின்னகட்டி
லாம்பாலொருகுழவியீண்டுள்ளதாண்மகவாய்ப்
பூம்பாவைபெற்றதன்மேற்போற்றிப்பரிந்ததனை. (சுக)

பஞ்சானனமென்னப்பகைவர்பயந்திரியு
மஞ்சாமராயனமதம்புவியையாண்டபிற
கெஞ்சாதினிப்பிறக்குமின்புதல்வற்கிப்புவியைச்
செஞ்சாலிகள்செழிக்கவபிடேகஞ்செய்குவிரே. (சுஉ)

என்றேயுறுதிபலவெல்லாமெடுத்திசையா
வன்றேதிருநாடலங்கரித்தானம்புவிவிண்
டின்றேனிழிபொழில்சூழ்சீரங்கபட்டணத்திற்
பொன்றேரிரும்பதமேபுக்கபொழுதங்கிருந்தே. (சுங)

திருநாரணபுரத்திற்றிருநாரணற்குமறை
வருநாவலர்திரளாவாழுமங்களாரத்தி
புரியாவவன்றரிசனம்புரிந்துபோற்றுகையி
லொருமாவெண்புரவிமிசையூர்ந்தந்தமன்னவனே. (சுச)

வல்லேபடர்தரவங்குற்றதிருவைணவர்க
ளெல்லோரிடைபுக்கெம்மிந்திரையாணுதனடிக்
குள்ளேகலங்கொழியக்கண்டந்தவுத்தமர்கள்
சொல்லேதுந்தோன்றுமேசூழ்ந்தாருளந்திகைத்தார். (௬௫)

கடிகைசிலகழியாக்காவலனேதுஞ்சியதி
னடையவருகோயின்மரியாதைக்காயடைந்தே
நொடியிலெனச்சிலர்கணுவன்றிடலுங்கேட்டவர்கள்
கடியவருவியப்புங்கலக்கமுமீதூர்ந்தினையா. (௬௬)

வைதசிசுபாலனுதியரும்வாழ்வார
மெய்திகழும்வீடுமேவக்கொடுத்தபரன்
செய்தியிதனுனுந்தெற்றென்றிலகியதென்
றெய்தினர்களேன்றேகவெல்லாம்விடுத்தனரால். (௬௭)

தாயேயெனப்புரந்ததாரணிபற்கோவிறுதிக்
கேயுங்கருமமெலாமேய்ந்தபவுத்திரன்கை
வாயானனியிழைத்தவ்வள்ளனன்றேபின்புரத்தற்
காயாமணிமவுலியவன்முடியிற்சூட்டினராம். (௬௮)

சீர்திருத்தச் சருக்கம் முற்றிற்று.

ஆக, செய்யுள் - ௫௭௪.

மைசூர் அரசு

முற்றுப் பெற்றது.

பிழை திருத்தம்.

பக்கம்.	வரி.	பிழை.	திருத்தம்.
௨௦	௨	பின்னவண்	பின்னவன்
௨௩	௧௮	மாற	மார
௨௫	௧	வனரொருக்கி	வளரொருகரி
௪௮	௨௬	வினவவினவை	வினவவிவனவை
௫௨	௧௨	மனத்தனென்பார்	பனத்ரனன்பார்
௬௧	௧	நரைதிரை	நிரைநிரை
௮௬	௬	கழனிநீழ	கழையினீழ